# இஸ்லாமும்
# மார்க்க சுதந்திரமும்






ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
இமாம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

Islam and the Freedom of Conscience is a Friday Sermon delivered by Hadhrat Mirza Masroor Ahmad, Head of the Worldwide Ahmadiyya Muslim Community, on 28th September 2012 at Baitul-Futuh Mosque, in Morden, Surrey, United Kingdom.

This address was delivered in the backdrop of the vile and crude film, "innocence of Muslims," in which the pure and holy person of Prophet Muhammad (may peace and blessings of Allah be upon him) was maligned by anti-Islam proponents. This film became the source of immense controversy and a wave of uproar rippled through the Muslim world. In this state of affairs, many people reached to the film in violent manner, but in light of the true teachings of Islam, the Head of the Ahmadiyya Muslim Community enjoined alla Muslims to respond in a civilized and peaceful manner.

Furthermore, his Holiness presented the true teachings of Islam and Character of the Holy Prophet (may peace and blessing of Allah be upon him) before the world in order to remove any misgivings about Islam and its Holy Founder. Moreover, he encouraged others to do the same.

This book also contains quotations of renowned personalities regarding the Holy Prophet (may peace and blessing of Allah be upon him).

9789383882441

# இஸ்லாமும்
# மார்க்க சுதந்திரமும்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஸய்யிதுனா

**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுஇல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின்

குத்பா பேருரைகளிலிருந்து

**நஸாரத் நஷ்ரோ இஷாஅத்,**

**காதியான்**

Tamil Version of
Islam Awr Azadi-e-Zameer

**இஸ்லாமும் மார்க்க சுதந்திரமும்**
(Islamum Maarga Sudandiramum)

| | | |
|---|---|---|
| Book Name | : | Islam Awr Azadi-e-Zameer (Tamil) |
| Writer | : | Hazrat Mirza Masroor Ahmad<br>Khalifatul Masih V aba |
| Year | : | 1st Edition 2015 |
| Copies | : | 1000 |
| Translated by | : | Moulavi M. Rafeeq Ahamd H.A |
| Printed at | : | Fazle-Umar Printing Press Qadian |
| Published by | : | Nazarat Nash-o-Isha'at<br>Mohallah Ahmadiyya, Qadian<br>Gurdaspur Distt, Punjab - 143 516 |
| ISBN | : | 978-93-83882-44-1 |

Note : NO PART OF THIS BOOK MAY BE REPRODUCED IN ANY FORM WITHOUT PRIOR WRITTEN PERMISSION FROM THE PUBLISHER, EXCEPT FOR THE QUOTATION BRIEF PASSAGES IN CRITICISM.

For further information please visit

www.alislam.org

www.ahmadiyyamuslimjamaat.in

www.ahmadiyyamuslimjamaat.in/facebook

www.mta.in

Noor-ul-islam Toll Free No: 180030102132

Tamil Nadu Toll Free No: 1800 425 40000

## பொருளடக்கம்


1. உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இறை தூதர்களை கண்ணியப்படுத்துவது அவசியமாகும். 12
2. அஹ்மதிகளின் எதிர் நடவடிக்கை முறை 23
3. இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரான சதித்திட்டங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முறியடிக்க வேண்டியது இருந்தது. 31
4. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை உலகின் முன்னால் எடுத்து வையுங்கள். 35
5. கார்டூன்கள் வெளியிடப்பட்டதற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உடனடி எதிர் நடவடிக்கை. 39
6. அஹ்மதி இளைஞர்கள் பத்திரிகைத் துறையில் நுழைய வேண்டும். 43
7. கொடிகளை எரிப்பதாலோ அல்லது பொருள்களை உடைப்பதாலோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம் நிலைபெறாது. 44
8. ஓர் அஹ்மதியின் உண்மையான எதிர் விளைவு என்ன இருக்க வேண்டும்? 45
9. உங்களது வேதனைகளை துஆவாக மாற்றுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் ஓதுங்கள். 46
10. மற்றவர்களது உணர்வுகளுடன் விளையாடுவது ஜனநாயகம் அல்ல; கருத்து சுதந்திரமும் அல்ல. 48
11. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையிலுள்ள செயல்களின் பிடிவாதமாக இருப்பது இறை கோபத்தை தூண்டுவதற்குக் காரணமாக இருக்கும். 48
12. இப்படிப்பட்ட நிலைமைகளில் அஹ்மதியின் எதிர்நடவடிக்கை என்ன இருக்க வேண்டும்? 48
13. முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பான இஸ்லாத்தின் அழகிய போதனை. 50
14. மக்கத்து காஃபிர்களும் இஸ்லாத்தின் பகைவர்களும் இழைத்த கொடுமைகளுக்கு எதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய மகத்தான அழகிய முன்மாதிரி. 51
15. இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரப்பப்படவில்லை. மாறாக நல்லொழுக்கம், கருத்து சுதந்திரம், மார்க்க போதனை ஆகியவற்றால் பரவியது 55
16. நீதியுடன் நடந்து கொள்வதிலும் மற்றும் கருத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான சுதந்திரத்தை வழங்குவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தரம் ஈடிணையற்றதாகும். 56
17. மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய ஈடிணையற்ற செயல் முன்மாதிரி. 66
18. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலுள்ள யூதர்களுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கை. 68
19. மார்க்க சுதந்திரமும் நஜ்ரானிலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட அமைதிக்கான வாக்குறுதியும் 71
20. சமாதானத்தை நிறுவுவதற்காகவும், தவறான எண்ணங்களை அகற்றுவதற்காகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் வழங்கியுள்ள உயர்வான போதனைகளும் ஆலோசனைகளும் 76
21. ஒவ்வொருவருடனும் அனுதாப உணர்வுடன் நடந்து கொள்வதே மனிதத் தன்மையாகும் 78
22. ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு தூதரையும் இல்ஹாமிய வேத நூல்களையும் இழிவுபடுத்தக் கூடாது 79
23. சமாதானமே நன்மையாகும் 82
24. மார்க்கத்தின் உண்மையான நோக்கம் 82
25. ஆபத்துகளிலிருந்து தப்பிப்பதற்கு தவ்பா செய்யுங்கள் 85
26. இஸ்லாத்தின் இழந்து போன மகிமையை சரிசெய்வதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து முயற்சி செய்வது அவசியமானதாகும் 87
27. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 21 செப்டம்பர் 2012 -ல் ஆற்றிய பேருரை தொடர்பாக பத்திரிகையாளர்களின் மாநாட்டில் உலகளாவிய மீடியாக்கள் கூறியுள்ள சில கருத்துக்கள் 93
28. இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ள கருத்துக்கள் 117

# முன்னுரை

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱

உலகம் தோன்றியதிலிருந்தே இந்த நடைமுறை இருந்து வருகின்றது. அதாவது அல்லாஹ்வின் தூதர்களுக்கு எதிராக ஒரு பிரிவினர் செயல்பட்டு வந்தனர். அவர்கள் அந்தத் தூதர்களுக்கு எதிராக அடிப்படையற்ற விசயங்களை பரப்பி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வந்தனர். அல்லாஹ் பல்வேறு நபிமார்கள் அலைஹிமுஸ் ஸலாம் தொடர்பாக திருக்குர்ஆனில் கூறியுள்ளான். மேலும் அவர்களை எதிர்க்கின்ற இந்த பிரிவினரின் இந்த செயல்கள் தொடர்பாகவும் விளக்கமாக எடுத்துக் கூறிய பிறகு அவர்களது தீய முடிவு பற்றியும் தெளிவாக எடுத்து கூறியுள்ளான். முதலில் வந்த நபிமார்கள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததால் அவர்களுக்கு எதிரான திட்டங்களும் அந்த காலம் வரை இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா சமுதாயங்களுக்கும், காலங்களுக்கும் நபியாக அனுப்பப் -பட்டிருப்பதால் அவர்களுக்கு எதிரான சூழ்ச்சிகளும், குழப்பங்களும் கூட உலகம் உள்ளவரை தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன.

சில நேரங்களில் அவை முஸைலமா கஸ்ஸாப் போன்றோரின் தோற்றத்தில் வெளிப்பட்டன. சில நேரங்களில் ரங்கீலா ரஸூல் என்ற நூலின் வடிவத்திலும், *Satanic Verses* என்ற நூலின் வடிவத்திலும் அவை வெளிப்பட்டன. சில நேரங்களில் அவை உள்ளத்தை புண்படுத்தக் கூடிய கேலி சித்திரங்களின் வடிவத்தில் தோன்றின. இப்போது *Innocence of Muslims* என்ற திரைப்படத்தின் வடிவத்தில் அது தோன்றியுள்ளது.

இப்படிப்பட்ட தருணங்களில் நம்பிக்கையாளர்கள் எவ்வாறு எதிர் நடவடிக்கையை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை பார்ப்பதற்காக அல்லாஹ் அவர்களை சோதிக்கவும் செய்கிறான். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாமும் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியிலும், இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) மற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் போதனைகளின் ஒளியிலும் இந்த நிலைமைகளை ஆய்வு செய்தவாறு அது பற்றி தமது ஜுமுஆ உரைகளிலும், சொற்பொழிவுகளிலும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அவை இனி வரும் பக்கங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஹுஸூர் அவர்கள் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி ஜுமுஆ உரை நிகழ்த்திய பிறகு அவர்களை பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். அதற்குப் பிறகு இது தொடர்பாக அவர்கள் கூறியுள்ள விமர்சனங்களில் சிலவற்றையும் இந்நூலின் இறுதிப் பகுதியில் தந்துள்ளோம்.

அல்லாஹ்விடம் துஆ செய்வோம். நாம் இந்த உண்மையான ஒளியை உலகின் பல்வேறு பகுதிகளில் விரைவாக எட்ட வைப்போமாக! முழு உலகமும் இதன் மூலம் ஒளி பெறட்டுமாக! மேலும் எல்லா பக்கமும் அமைதி, சாந்தி நிலவட்டுமாக! மேலும் நாம் இந்த பூமியிலும் உண்மையான சொர்க்கத்தின் காட்சிகளை காண்போமாக! ஆமீன்.

**முனீருத்தீன் சம்ஸ்**
கூடுதல் வகீலுத் தஸ்னீஃப்
இலண்டன்
டிசம்பர் 2012

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூ.கே.விலுள்ள பைத்துல் ஃபுதூஹ் மார்டன் பள்ளிவாசலில் 28.09.2012 ஆம் தேதி ஆற்றிய தமது ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த ஜுமுஆவில், ஜுமுஆ தொழுகையை நடத்துவதற்காக நான் இங்கு பள்ளிவாசலுக்கு வந்த போது காரிலிருந்து நான் இறங்கியதும் பெரும் எண்ணிக்கையில் பத்திரிகையாளர்கள் அங்கு வந்திருப்பதை நான் பார்த்தேன். அமீர் சாஹிப் அவர்களிடம் இதுபற்றி நான் கேட்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அமெரிக்காவில் உள்ளத்தைப் புண்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ஃபிலிம் தொடர்பாக முஸ்லிம்கள் மேற்கொண்டுள்ள எதிர்நடவடிக்கைகளை பார்த்த இவர்கள் அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை எவ்வாறு இருக்கிறது? என்பதைப் பார்ப்பதற்காக வந்துள்ளனர் என்று அமீர் சாஹிப் கூறினார்கள். அதற்கு நான் நல்லது. இந்த தலைப்பில் தான் நான் குத்பா கொடுக்க இருக்கிறேன். அதிலேயே அஹ்மதிகள் எத்தகு எதிர்நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்பதைப் பற்றி கூறுவேன் என்று இவர்களிடம் கூறுங்கள் என்றேன். இந்த அளவு பெரும் எண்ணிக்கையில் மீடியாவை இங்கு ஈர்த்துக் கொண்டு வந்திருப்பதும் கூட அல்லாஹ்வின் வேலையாகும். மேலும் அவனே இந்த தலைப்பில் சில விசயங்களை நான் கூற வேண்டும் என்பதையும் எனது உள்ளத்தில் இட்டான்.......

பத்திரிகை நிருபர்களைத் தவிர டி.வி. சேனல்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். B.B.C –ன் ஏற்பாட்டின் கீழ் இயங்கும் News Night என்ற சேனலின் பிரதிநிதி, B.B.C – ன் பிரதிநிதி, நியூசிலாந்து நேசனல் டி.வியின் பிரதிநிதி, ஃபிரான்ஸிலுள்ள டி.வி.யின் பிரதிநிதி மற்றும் இன்னும் பல பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். நியூசிலாந்தின் பிரதிநிதி எனக்கு வலப்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அவருக்கு முதலாவதாக கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் என்னிடம் நீங்கள் என்ன தூதுச் செய்தியைக்



கூற விரும்புகின்றீர்கள்? என்ற கேள்வியைக் கேட்டார். அதற்கு நான், தூதுச் செய்தியை நீங்கள் கேட்டுள்ளீர்கள். ஏனெனில் அவர்கள் குத்பாவின் Recording ஐயும் கேட்டுக் கொண்டிருந்தனர்; மொழியாக்கத்தையும் கேட்டுக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதி பற்றி நான் விளக்கிக் கொண்டிருந்தேன். அவர்களது தகுதி மிகவும் உயர்வானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியானது ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்றுவதற்கு தகுதியுடையதாகும். முஸ்லிம்கள் தங்களது துக்கத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தும் வகையிலுள்ள அவர்களது எதிர்நடவடிக்கை ஒருவகையில் சரியானதுதான். அவ்வாறான ஒரு நிலை உருவாக வேண்டும். ஆனால் அதை சில இடங்களில் அவர்கள் தவறான விதத்தில் வெளிப்படுத்துகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எங்களது உள்ளதிலுள்ள உயர் தகுதி வரை இந்த உலகவாதிகளின் பார்வை செல்ல முடியாது. இந்த விசயத்தில் எந்த அளவு எங்களுக்கு வேதனை ஏற்பட்டுள்ளது? எவ்வாறு நாங்கள் துயரம் அடைந்துள்ளோம் என்பதைப் பற்றிய உணர்வு இந்த உலகவாதிகளுக்கு இருக்கவே முடியாது. இப்படிப்பட்ட செயல்கள் உலகின் அமைதியை சீர்குலைத்து விடுகின்றன என்று நான் கூறினேன்.

நியூசிலாந்தின் பிரதிநிதியாக வந்திருந்த அவர் நீங்கள் மிகவும் கடுமையான சொற்களில், இவர்கள் நரகத்திற்கு செல்வர் என்று கூறினீர்கள். இது மிகவும் கடுமையான சொற்களாகும் என்று கூறினார். அவ்வகையில் நீங்களும் அவர்களை சார்ந்தவர்களாக ஆகிவிட்டீர்கள் என்றார். இதே சொற்களில் அவர் கூறவில்லை என்றாலும் அவரது பேசும் தொனி அதை பிரதிபலித்தது. அவர் மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு நான், அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்கள் தொடர்பாக இப்படிப்பட்ட விசயங்களை ஒருவர் பேசுகின்றபோது, அவர்களை எள்ளி நகையாட முயற்சி செய்யும் போது அப்படிப்பட்ட செயல்களிலிருந்து அவர்கள் விலகாமல் இருந்தால், எவ்வளவு புரிய வைத்தாலும் அதை புரிந்து கொள்ளாமல் பிடிவாதமாக இருந்தால் பிறகு அல்லாஹ்வுடைய விதியும் செயல்படும். அப்போது தண்டனையும்

வரலாம். அப்படிப்பட்ட மக்களை அல்லாஹ் பிடிக்கின்றான் என்று நான் கூறினேன்....

நாங்கள் தீவிரவாதச் செயல்களையும், உடைப்பது, எரிப்பது போன்ற செயல்களையும் விரும்புபவர்கள் அல்ல. எந்தவோர் அஹ்மதியையும் இப்படிப்பட்ட குழப்பத்தில் ஈடுபடுவதையோ அல்லது குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்நடவடிக்கையில் பங்கு பெறுவதையோ உங்களால் ஒருபோதும் பார்க்க முடியாது. செய்திகளை வாசித்தவர் எனது இந்த பதிலைக் காட்டி விட்டு பிறகு இதுபற்றி விமர்சனம் செய்தார். அதாவது, இந்த ஜமாஅத் முஸ்லிம்களில் சிறுபான்மை ஜமாஅத் ஆகும். முஸ்லிம்கள் இவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. ஆனால் இவர்களது கலீஃபாவின் குரல், மேலும் அவர் கூறியுள்ள இந்த தூதுச் செய்தி அஹ்மதிகளைத் தவிர மற்ற முஸ்லிம்களிடமும் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா? இல்லையா? என்று நாம் பார்ப்போம் என்று அவர் கூறினார்....

இங்குள்ள ஒரு சேனலான News Night – ன் பிரதிநிதி நான் அந்த ஃபிலிமை பார்த்தேன். இந்த அளவு கூச்சலிடுவதற்கு அதில் எந்தவொரு விசயமும் இல்லை. முஸ்லிம்கள் இந்த அளவு எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்த வேண்டியதில்லை என்றார். மேலும் நீங்களும் மிக விளக்கமாக இதுபற்றி குத்பா கொடுத்துள்ளீர்கள். சில இடங்களில் மிகவும் கடுமையான சொற்களில் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளீர்கள். இது ஒரு லேசான நகைச்சுவையாகத்தான் இருந்தது என்றார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இதுதான் இந்த மக்களது ஒழுக்கத்தின் தரத்தின் நிலைமையாகும். நான் அவரிடம் நீங்கள் இந்த ஃபிலிமை எப்படிப் பார்த்தீர்கள்? உங்களது தரம் எத்தகையது? என்று எனக்கு தெரியவில்லை. முஸ்லிம்கள் பார்வையில் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இருக்கும் உயர்வான தகுதியையும் அவர்கள் மீது ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் இருக்கின்ற நேசத்தையும் கண்ணியத்தையும் உங்களால் புரிந்து கொள்ள முடியாது. நான் அவரிடம் நான் அநதப் படத்தைப் பார்க்கவில்லை. ஆனால் அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் என்னிடம் கூறிய ஒன்றிரண்டு விசயங்கள்



சகித்துக் கொள்ள முடியாதவையாகும். நீங்கள் அதில் அப்படிப்பட்ட எந்த விசயமும் இல்லை என்று கூறுகின்றீர்கள். இந்த விசயத்தைக் கேட்ட பிறகு ஒருபோதும் அந்த ஃபிலிமை பார்ப்பதற்கான தைரியம் எனக்கு இருக்காது. அதில் சொல்லப்பட்ட விசயங்களைக் கேட்கும் போது இரத்தம் கொதிக்கின்றது. நான் அவரிடம் கூறினேன். உங்களது தந்தையாரை ஒருவர் ஏசிப்பேசினால் அவரைப் பற்றி தீய விசயங்களை, வீணான தரக்குறைவான விசயங்களைக் கூறினால் அது தொடர்பாக உங்களது எதிர்நடவடிக்கை எப்படியிருக்கும்? நீங்கள் உங்களது எதிர்நடவடிக்கையை கண்டிப்பாக வெளிப்டுத்திக் காட்டுவீர்கள். அது சரியா? இல்லையா? என்று கூறுங்கள். ஒரு முஸ்லிமின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதி இதை விட மிகவும் உயர்வானதாகும். அந்த இடத்தை நீங்கள் அடையவே முடியாது என்று கூறினேன்.....

இந்த மக்கள் தங்களது தீய செயல்களிலிருந்து விலகாமல் இருக்கின்றார்கள்; விலகவும் மாட்டார்கள். பொதுவாக முஸ்லிம்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்ற எதிர்நடவடிக்கையை தங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டு இந்த மக்கள் நமது உள்ளங்களை மேலும் காயப்படுத்துவதற்கு தயாராக உள்ளனர் என்றே தெரிகிறது. தங்களது அசுத்தமான செயல்களை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு பரப்பிக் கொண்டே செல்கின்றனர். இப்போது இரண்டு நாட்களுக்கு முன்னரும் ஸ்பெயினில் உள்ள ஒரு பத்திரிகையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கேலிச் சித்திரம் வரைந்து அதை வெளியிட்டுள்ளது. நகைச்சுவை என்ற பெயரில் முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கைக்கு பதில் கூறும் வகையில் அது செய்யப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நாம் இவர்களது வாயை அடைப்பதற்கு குறைந்தபட்சம் நல்ல இயல்புள்ள மக்களுக்கும், படித்த மக்களுக்கும் இந்த தவறான வழிமுறை உலகின் அமைதியை சீர்குலைத்து விடுகிறது என்பதை எடுத்துக் கூறுவதற்கு முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். எந்த அளவு சாத்தியம் உள்ளதோ அந்த அளவு இவர்களது அநீதியான வழிமுறையின் உண்மை நிலை பற்றி உலகிற்கு நாம் தெரிவிக்க வேண்டும்...

விக்டோரியா மஹாராணிக்கு வைர விழா நடந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஹ்பா கய்ஸரிய்யா அதாவது மகாராணிக்கு ஓர் அன்பளிப்பு என்ற பெயரில் ஒரு நூலை எழுதி மகாராணிக்கு அதை அனுப்பி வைத்தார்கள். அந்த நூலில் அவர்கள் ராணியின் நீதியுடைய ஆட்சியைப் புகழ்ந்து கூறியிருப்பதுடன் இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் அவர்களுக்கு எட்ட வைத்திருந்தார்கள். உலகில் அமைதியை ஏற்படுத்துவது, பல்வேறு மதங்களுக்கு இடையில் பரஸ்பரம் இருக்க வேண்டிய தொடர்புகள், மார்க்கப் பெரியார்கள், நபிமார்கள் ஆகியோரை கண்ணியப்படுத்துவது, அவர்களை மதிப்பது ஆகியற்றைப் பற்றியும் அந்நூலில் அன்னார் கவனமூட்டியிருந்தார்கள். அமைதியை நிலைநாட்டுவதற்குரிய வழிமுறைகள் என்ன என்பதைப் பற்றியும் அதில் அவர்கள் விளக்கமாக கூறியிருந்தார்கள்.

இப்போது எலிசபெத் ராணியின் வைர விழாவின் போது துஹ்ஃபா கய்ஸரிய்யா என்ற நூலின் மொழிபெயர்ப்பை அழகாக அச்சிட்டு அழகான பைண்டிங் செய்யப்பட்டு ராணிக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் எனது (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின்) கடிதம் அனுப்பப்பட்டது. ராணியுடன் சம்பந்தப்பட்ட அந்த துறையிடமிருந்து நன்றி தெரிவித்து எனக்கு பதிலும் வந்தது. மேலும் ராணிக்குரிய நூல்களின் தொகுப்புடன் இந்த நூலும் வைக்கப்பட்டுள்ளது என்றும் ராணி இதை படிப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள். அவர்கள் அதைப் படிக்கின்றார்களா? இல்லையா? என்பது நமக்கு தெரியாது. ஆனால் நமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சி செய்துள்ளோம்.

அந்தக் காலத்தில் உலகத்தில் அமைதியின்மையின் எத்தகு நிலை இருந்து வந்ததோ அதே நிலைதான் இன்றும் இருந்து வருகிறது. இன்னும் சொல்வதென்றால் அதை விட அதிகமான அமைதியின்மை பெருகி வருவதை பார்க்கின்றோம். இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்துவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களை பரிகாசம் செய்வது ஆகிய செயல்களை இந்த மக்கள் செய்து கொண்டே செல்கின்றனர். அதில் வரம்பு மீறி வருகின்றனர்......



## உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இறை தூதர்களை கண்ணியப்படுத்துவது அவசியமாகும்

நபிமார்கள் இறைவனிடமிருந்து தூதுச் செய்தியைக் கொண்டு வந்திருப்பதாக வாதம் செய்கின்ற போது, அவர்களது ஜமாஅத்தும் வளர்ச்சி அடையும் போது அந்த ஜமாஅத் அல்லது அந்த மக்கள் இறைவனிடமிருந்து வந்தவர்கள் என்பதை அது நிரூபிக்கின்றது. எனவே, இறைவன் புறமிருந்து வந்தவர்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும். அதன் மூலமாக உலகின் அமைதி நிலைபெறும். இது தொடர்பாக எவ்வாறு அமைதியை ஏற்படுத்த முடியும் என்பது பற்றியும் நபிமார்களின் உயர்வான தகுதி என்ன என்பது பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியவற்றிலிருந்து ஒரு பகுதியை இப்போது உங்கள் முன்னால் நான் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “தொன்றுதொட்டே இறைவனுடைய நடைமுறையில் இந்த சட்டம் உள்ளது.”

அதாவது உலக அரசாங்கங்கள், தான் கூறாத ஒன்றை தன்னுடன் தொடர்புபடுத்திக் கூறுவதை சகித்துக் கொள்ள முடியாத போது, அல்லாஹ் அப்படிப்பட்ட விசயத்தை எப்படி சகித்துக் கொள்வான்?

அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்: இறைவனது தொன்றுதொட்ட நடைமுறையில் இந்த சட்டம் உள்ளது. அதாவது தன்னை நபியென்று பொய்யாக வாதம் செய்கின்ற ஒருவருக்கு அவன் கால அவகாசம் வழங்குவதில்லை. மாறாக, அப்படிப்பட்ட நபர் விரைவில் பிடிக்கப்படுகிறார். இறை தண்டனைக்கு ஆளாகி விடுகிறார். இந்த சட்டத்தின் அடிப்படையில் ஏதாவது ஒரு காலகட்டத்தில் தன்னை நபியென்று வாதம் செய்துள்ள எல்லாரையும் கண்ணியமிக்க பார்வையுடன் பார்க்க வேண்டும். அவர்களை உண்மையாளர்களாக கருத வேண்டும். அப்படிப்பட்ட மக்கள் தாங்கள் நபியாக இருப்பதாக வாதம் செய்தார்கள். பிறகு அவர்களது அந்த வாதம் வேரூன்றி விட்டது. அவர்களது மார்க்கம் உலகில் பரவியது. மேலும் அது உறுதியாக நிலைத்து விட்டது. தவறு இருப்பதைக் கண்டால் அல்லது அந்த மதத்தைப் பின்பற்றிச் செல்பவர்கள் தீய செல்களில் சிக்கியிருப்பதைப்

பார்த்தால் நாம் இதன் பழியை இந்த மதங்களின் ஸ்தாபகர்கள் மீது சுமத்தக் கூடாது. ஏனென்றால் வேத நூல்களில் இடைச்செருகல்கள் ஏற்படுவது சாத்தியமானதுதான். அனுமானத்தின் அடிப்படையிலான தவறுகள் விளக்கவுரைகளில் நுழைந்து விடுவது சாத்தியமானது தான். ஆனால் ஏதாவது ஒரு நபர் மிகவும் தெளிவான முறையில் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுகின்றார். தான் இறைவனுடைய நபியென்று கூறி, தனது வசனங்களை எடுத்து வைத்து இது இறைவனின் வசனங்கள் என்று கூறுகின்றார்.

ஆனால் அவர் நபியாக இல்லாமல் இருந்து அவர் கூறுகின்ற வசனங்களும் இறைவனின் வசனங்களாக இல்லாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் அப்படிப்பட்டவருக்கு உண்மையாளர்களுக்கு வழங்குவது போன்று கால அவகாசம் வழங்குவான் என்பது ஒருபோதும் சாத்தியமற்றதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

“உண்மையாளர்களைப் போன்று அவர் (மக்களால்) ஏற்றுக் கொள்ளப்படுவதைப் பரப்புவதும் ஒருபோதும் சாத்தியமற்றதாகும். எனவே, இந்தக் கொள்கை மிகவும் சரியானதும் மிகவும் அருளுக்குரியதாகும். மேலும் அதுவே சமாதானத்தின் அடிப்படையை நிறுவக்கூடியதாக இருக்கும். எவர்களது மார்க்கம் வேரூன்றி விட்டதோ, நீண்ட ஆயுளைப் பெற்று விட்டதோ மேலும் கோடிக்கணக்கான மக்கள் அந்த மார்க்கத்தில் வந்து விட்டார்களோ அப்படிப்பட்ட எல்லா நபிமார்களையும் நாம் உண்மையான நபிமார்களாகக் கருத வேண்டும். இந்தக் கொள்கை மிகவும் நல்ல கொள்கையாகும். இந்தக் கொள்கையை முழு உலகமும் பின்பற்றி நடந்தால் அதன் மூலமாக படைப்பினங்களுக்கும் பொதுமக்களின் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கின்ற ஆயிரக்கணக்கான குழப்பங்களும் மதங்களை இழிவுபடுத்துவதும் நீங்கிவிடும். ஒரு மதத்தைப் பின்பற்றிச் செல்பவரைப் பார்த்து தங்களது எண்ணத்தில் பொய்யராகவும், இட்டுக்கட்டிக் கூறுபவராகவும் இருக்கின்ற ஒரு நபரை அவர் பின்பற்றுகிறார்



என்று கூறுவதன் மூலமாக இப்படிப்பட்டவர்கள் பல்வேறு குழப்பங்களுக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றார்கள். மேலும் அவர்கள் கண்டிப்பாக பிறரை இழிவுபடுத்தும் குற்றத்திற்கு ஆளாகி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் அந்த நபியின் மகிமைக்கு எதிராக மிகவும் தரக்குறைவான சொற்களை கூறுகின்றனர். தங்களது சொற்களை ஏசிப் பேசுகின்ற நிலை வரை கொண்டு செல்கின்றனர். சமாதானத்திற்கும் படைப்பினங்கள், பொதுமக்கள் ஆகியோரின் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கின்றனர். ஆனால் அவர்களது இந்த எண்ணம் முற்றிலும் தவறானதாகும். தங்களது தரக்குறைவான கூற்றுக்களின் காரணமாக இறைவனது பார்வையில் அவர்கள் அநீதியிழைப்பவர்களாக ஆகி விடுகின்றனர். அளவற்ற அருளாளனாகவும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்ற இறைவன் ஒரு பொய்யரின் மார்க்கத்திற்கு அநியாயமாக வளர்ச்சியை வழங்கி அதை வேரூன்ற செய்து மக்களை அதன் மூலம் ஏமாற்றுவதை ஒருபோதும் விரும்பமாட்டான். ஒரு நபர் பொய்யராகவும் இட்டுக்கட்டிக் கூறுபவராகவும் இருந்தும் கூட உலகின் பார்வையில் அவர் உண்மையான நபிமார்களுக்கு சமமானவராக இருப்பதை ஒருபோதும் அவன் அனுமதிக்கமாட்டான்.

எனவே இந்த கொள்கை மிகவும் நேசத்திற்குரியதாகவும், அமைதியை வழங்கக்கூடியதாகவும் சமாதானத்தின் அடித்தளத்தை நிறுவக்கூடியதாகவும் நல்லொழுக்க நிலைமைகளுக்கு உதவக் கூடியதாகவும் இருக்கின்றது. அதாவது உலகில் வந்துள்ள எல்லா நபிமார்களையும் அவர்கள் இந்தியாவில் வந்திருந்தாலும், பாரசீகத்தில் தோன்றியிருந்தாலும், சீனாவில் வந்திருந்தாலும், வேறு எந்த நாட்டில் வந்திருந்தாலும் அவர்களை நாம் உண்மையாளர்களாகக் கருத வேண்டும். இறைவன் கோடிக்கணக்கான உள்ளங்களில் அவர்களது கண்ணியத்தையும் மகத்துவத்தையும் நிலைநாட்டியுள்ளான். அவர்களது மார்க்கத்தை வேரூன்றச் செய்து விட்டான். பல நூற்றாண்டுகளாக அந்த மதங்கள் நிலைபெற்று வந்தன. இந்தக் கொள்கையையே திருக்குர்ஆன் நமக்கு கற்பித்துள்ளது. இந்த கொள்கையின் அடிப்படையிலேயே எல்லா மார்க்கங்களின் தோற்றுனரையும் நாம் கண்ணியமிக்க பார்வையில்

பார்க்கின்றோம். அவர்கள் இந்து மதத்தின் தோற்றுனராகவோ, பாரசீக மதத்தின் தோற்றுனராகவோ, சீன மதத்தின் தோற்றுனராகவோ அல்லது யூத மதத்தின் தோற்றுனராகவோ அல்லது கிறித்தவ மதத்தின் தோற்றுனராகவோ இருந்தாலும் சரியே. ஆனால் வேதனை என்னவென்றால் நமது எதிரிகளுக்கு நம்முடன் இவ்விதமாக நடந்து கொள்ள முடியவில்லை. இறைவனது தூய மாற்ற முடியாத அந்த சட்டம் அவர்களது நினைவில் இல்லை. அதாவது உண்மையான நபிக்கு வழங்கக்கூடிய அந்த கண்ணியத்தையும் அருளையும் ஒரு பொய் நபிக்கு அவன் வழங்க மாட்டான். எவ்வாறு உண்மையான நபியின் மதம் வேரூன்றி நிற்க முடியுமோ, மேலும் நீண்ட ஆயுளைப் பெறுமோ அதுபோன்று பொய்யான நபியின் மதம் வேரூன்றி நிற்க முடியாது. அது நீண்ட ஆயுளையும் பெறாது. சமுதாயங்களில் தோன்றிய நபிமார்களைப் பொய்யர்கள் என்றும் தீயவர்கள் என்றும் கூறுகின்ற இத்தகைய கொள்கையுடைய மக்கள் எப்போதும் சமாதானம் மற்றும் அமைதியின் பகைவர்களாகவே இருக்கின்றார்கள். ஏனெனில் சமுதாயங்களிலுள்ள பெரியார்களை ஏசிப் பேசுவதை விட அதிகமாக குழப்பத்தை தூண்டக்கூடிய வேறு எந்த செயலும் இருக்க முடியாது.

சில நேரங்களில் மனிதன் மரணிப்பதைக் கூட விரும்புவான். ஆனால் தான் நம்புகின்ற மகானை தீயவர் என்று கூறப்படுவதை அவன் விரும்பமாட்டான். நமக்கு ஏதாவதொரு மதத்தின் போதனைகள் மீது ஆட்சேபனை இருந்தால் அந்த மதத்தைச் சார்ந்த நபியின் மீது நாம் தாக்குதல் நடத்தக் கூடாது. தீய சொற்களால் அவரை நினைவு கூறக்கூடாது. மாறாக, அந்த சமுதாயத்தின் தற்போதைய செயல்களால் அவர்கள் கடைபிடிக்கும் வழிமுறையை மட்டுமே ஆட்சேபனை செய்ய வேண்டும்.''

அதாவது அந்த சமுதாயத்தில் தவறுகள் இருந்தால் அந்த தவறுகளை சுட்டிக்காட்டி ஆட்சேபனை செய்ய வேண்டும். அந்த நபிமார்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடாது.



**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

''உறுதியாக நம்புங்கள். எந்த நபி இறைவன் புறமிருந்து தோன்றி கோடிக்கணக்கான உள்ளங்களில் கண்ணியத்தைப் பெற்று விட்டார்களோ, நூற்றுக்கணக்கான வருடங்களாக மற்றவர்களால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் நிலை இருந்து வருகிறதோ அதுவே அவர் இறைவன் புறமிருந்து வந்தவர் என்பதற்கான உறுதியான சான்றாக இருக்கின்றது. அவர் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் இந்த அளவு அவரால் கண்ணியத்தைப் பெற முடியாது. இட்டுக்கட்டிக் கூறுபவருக்கு கண்ணியத்தை வழங்குவதும், கோடிக்கணக்கான அடியார்களிடம் அவர்களது மதத்தைப் பரப்புவதும், மிக நீண்ட காலமாக இட்டுக்கட்டிக் கூறப்பட்ட அந்த மதத்தைப் பாதுகாத்து வைப்பதும் ஆகிய இவை இறைவனது வழக்கமல்ல. எனவே எந்த மதம் உலகில் பரவி உறுதிநிலை பெற்று நீண்ட ஆயுளையும் பெற்று விடுகிறதோ அது தனது அசல் தன்மையில் ஒருபோதும் பொய்யானதாக இருக்க முடியாது. எனவே அந்த போதனை ஆட்சேபனைக்ககுரியதாக இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம்.''

தற்போதைய காலத்தில் அந்த நபி கொண்டு வந்த போதனை ஆட்சேபனை செய்யத் தகுதியுடையதாக இருக்கின்றதென்றால் அதற்கு மூன்று காரணங்கள் தான் இருக்க முடியும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

''முதலாவது காரணம் அந்த நபி வழங்கிய வழிகாட்டலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது காரணம் அந்த நபி வழங்கிய வழிகாட்டல்களுக்கு விளக்கம் கூறும்போது அதில் தவறிழைக்கப் -பட்டிருக்கின்றது. மூன்றாவது இந்த காரணமும் இருக்க முடியும். அதாவது ஆட்சேபனை செய்யக்கூடிய நாம் உண்மையில் இல்லாமல் இருக்கலாம்.''

ஒரு விசயம் புரியாததன் காரணமாக ஆட்சேபனை செய்யப்படுகிறது. இன்று இதுபோன்று தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் மீது ஆட்சேபனை செய்துள்ளனர். வரலாறையும் இவர்கள் படிக்கவில்லை. சம்பவங்களையும் படிக்கவில்லை. திருக்குர்ஆனையும் இவர்களால் புரிய முடியவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: “நாம் பார்க்கின்றோம். சில பாதிரிமார்கள் தங்களது குறைவான புரியும் திறன் காரணமாக திருக்குர்ஆன் கூறும் இவ்விசயங்கள் மீது ஆட்சேபனை செய்கின்றனர். அவை தவ்ராத்திலுள்ள சரியான இறைவனின் போதனைகள் தான் என்பதை இவர்களே ஏற்றுக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட ஆட்சேபனைகள் அவர்களது தவற்றின் காரணமாகவும் அவசரப்படுவதின் விளைவாகவும் இருக்கின்றது.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: சுருக்கமாக கூறுவதென்றால் உலகத்தின் நலன், அதன் அமைதி, சமாதானம், தக்வா – இறையச்சம் ஆகியவை இந்த நபிமார்களை நாம் பொய்யர்களாக கருதக் கூடாது என்ற இந்த கொள்கையில் தான் இருக்கின்றது. அவர்களது உண்மை தொடர்பான கருத்து கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நூற்றுக்கணக்கான வருடங்களாக நிலைபெற்று விட்டன. தொன்று தொட்டே இறைவனின் உதவி அவர்களுடன் இருந்து வருகின்றது. நான் உறுதியாக நம்புகிறேன். உண்மையை விரும்பக்கூடிய ஒருவர் அவர் ஆசியாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஐரோப்பியராக இருந்தாலும் நமது இந்தக் கொள்கையை விரும்புவார். மேலும் பெருமூச்சு விட்டவாறு அந்தோ! நமது கொள்கையும் இவ்வாறானதாக ஏன் இருக்கவில்லை என்று அவர் ஏங்குவார்.”

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ராணிக்கு தொடர்ந்து எழுதுகிறார்கள்: “உலகில் அமைதியைப் பரப்புவதற்கு நமது கொள்கையாகிய இந்த ஒரு கொள்கை மட்டுமே இருக்கிறது என்பதை இங்கிலாந்து, இந்தியாவின் கண்ணியத்திற்குரிய ராணிக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். உலகில் அமைதியைப் பரப்புவதற்கு ஒரே கொள்கைதான் இருக்கிறது. அது எமது கொள்கையாகும். இஸ்லாம் தனது இந்த அழகிய கொள்கையைக் குறித்து பெருமை கொள்ள முடியும். இந்த அன்பான



உள்ளத்தை ஈர்க்கக்கூடிய கொள்கையை குறிப்பாக அது தன்னுடன் வைத்திருக்கின்றது என பெருமை கொள்ள முடியும். இறைவனின் அருளால் ஒவ்வொரு காலகட்டத்திலும் சான்றோர்கள் தமக்கென்று தம்மைப் பின்பற்றக்கூடிய ஓர் உலகை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் மகிமையை தகர்க்கும் பணியை நம்மால் எப்படி செய்ய முடியும்? நூற்றுக்கணக்கான வருடங்களாக அரசர்களின் தலைகள் அவர்கள் முன்னால் குனிந்திருந்தன. பொய்யர்களுக்கு உண்மையாளர்களை போன்ற கண்ணியத்தை வழங்கி உண்மையாளர்களைப் போன்றே கோடிக்கணக்கான மக்களுக்கு தலைவராக ஆக்கி அவர்களது மதத்திற்கு நீண்ட ஆயுளை வழங்கி அவர்களது மதத்திற்கு ஆதரவாக விண்ணின் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டி உலகத்தை இறைவன் ஏமாற்ற விரும்புகிறான் என்று இறைவனைப் பற்றி தவறான எண்ணம் கொள்வது நமக்கு பொருத்தமானதா என்ன? இறைவனே நம்மை ஏமாற்றி விட்டால் நாம் நேர்வழி மற்றும் வழிகேடு ஆகியவற்றை எவ்வாறு பிரித்தறிய முடியும்?

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது மிகவும் முக்கியமான விசயமாகும். ஒரு பொய் நபியின் மகிமை, உயர்தகுதி, ஏற்புடமை, ஒப்புக் கொள்ளப்படும் தன்மை, மகத்துவம் ஆகியவை ஒரு உண்மையான நபியிடமிருந்து எவ்வாறு பரவுகின்றதோ அவ்வாறு பரவ முடியாது. அந்த பொய்யரின் திட்டங்களில் உண்மையாளர்களின் திட்டங்களில் உருவாகின்ற அந்த பொலிவு உருவாக முடியாது. உண்மையாளரின் முதல் அடையாளம் இறைவனது உதவியின் நிரந்தரமான ஒரு தொடர் அவருடன் இருக்கும். இறைவன் அவரது மதத்தின் செடியை கோடிக்கணக்கான உள்ளங்களில் நாட்டி விடுகின்றான். அதற்கு ஆயுளையும் வழங்குகின்றான். எந்த நபியின் மதத்தில் இந்த அடையாளங்களை நாம் பார்போமோ அப்போது நாம் நமது மரணம் மற்றும் தீர்ப்பு நாளை நினைவு கூர்ந்து அப்படிப்பட்ட கண்ணியமிக்க தலைவர்களை இழிவுபடுத்தக் கூடாது. மாறாக அவர்களுக்கு உண்மையான கண்ணியத்தையும் அவர்கள் மீது உண்மையான நேசத்தையும் வைக்க வேண்டும். சுருக்கமாக இறைவன் நமக்கு கற்றுத் தந்துள்ள முதலாவது

கொள்கை இதுவாகும். இதன் மூலமாக நாம் ஒரு பெரிய நல்லொழுக்கப் பண்புக்கு வாரிசாகி விடுகின்றோம்.'' துஃபா கய்ஸரிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 12, பக்கம் 258 லிருந்து 262 வரை)

தத்தமது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வகையிலுள்ள மாநாடுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அதில் அவர்கள் எழுதியுள்ளார்கள். (துஃபா கய்ஸரிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 279 லிருந்து எடுக்கப்பட்டதன் கருத்து)

இவ்வாறு செயலளவில் பார்க்கும் போது இஸ்லாம் தான் உலகில் மிகைத்து நிற்கின்ற ஒரு மார்க்கமாக இருக்கின்றது. ஆனால் எவ்வாறாயினும் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும் போது இஸ்லாம் உலகில் இரண்டாவது பெரிய மார்க்கமாக இருக்கின்றது. எனவே, உலகிலுள்ள ஏனைய மதங்களைச் சார்ந்தவர்கள் எந்நிலையிலும் இஸ்லாத்தை மதிக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்க வேண்டிய மதிப்பு, கண்ணியத்திற்கான உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறில்லையென்றால் உலகில் குழப்பமும் அமைதியின்மையும் உருவாகும்.

நாம் உலகிலுள்ள மதங்களுக்கு கண்ணியமளிப்பதும், மதிப்பளிப்பதும், அந்த மதத்தின் பெரியவர்கள் மற்றும் நபிமார்கள் ஆகியோரை இறைவன் புறமிருந்து வந்தவர்கள் என்று நாம் கருதுவதும் திருக்குர்ஆன் நமக்கு தந்துள்ள இந்த அழகிய போதனையின் காரணமாகவே இருக்கின்றது. இதை பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்தார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக பொருத்தமற்ற சொற்களை கூறியிருந்தும் கூட தரக்குறைவான படங்களை சித்தரித்துக் காட்டிய பிறகும் கூட நாங்கள் எந்தவொரு மதத்தைச் சார்ந்த நபியையும் பெரியாரையும் அதற்குப் பதில் கூறும் வகையில் அவர்களை தவறான சொற்களைப் பயன்படுத்தி அழைப்பதில்லை. அவர்களை பரிகாசம் செய்வதில்லை.

இவ்வாறிருந்தும் முஸ்லிம்களை இவர்கள் அமைதியை சீர்குலைக்கின்றனர் என்று கூறி குறி வைக்கின்றனர். முதலில் இந்த மக்கள்



தான் அமைதியை சீர்குலைக்கின்ற வேலைகளை செய்கின்றனர். உணர்வுகளைத் தூண்டி விடுவதற்கு முயற்சி செய்கின்றனர். பிறகு உணர்வால் அவர்கள் தூண்டப்பட்ட பிறகு இவர்கள், பாருங்கள். முஸ்லிம்கள் தீவிரவாதத்தை விரும்பக்கூடியவராக இருக்கின்றார்கள். எனவே, இவர்களுக்கு எதிராக எல்லா விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள்.....

நான் படித்துக் காட்டிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது இந்த தூதுச் செய்தியை முழுமையாக பரப்பி விடுங்கள். அதன் மூலம் உலகிற்கு உண்மையான இஸ்லாமிய போதனைகளைப் பற்றி தெரிய வரும். நமது உள்ளத்திலும் ஓர் உண்மையான முஸ்லிமின் உள்ளத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய உயர் தகுதி எந்த அளவு உயர்வானதாக இருக்கின்றது என்பதைப் பற்றி உலகவாதிகளுக்கு தெரிய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை, அன்னாரது அழகிய முன்மாதிரி எந்த அளவுக்கு அழகானதாக இருக்கின்றது; ஓர் உண்மையான முஸ்லிமுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு அன்பும் நேசமும் இருக்கின்றது என்பதை எவராலும் கணித்துப் பார்த்து விட முடியாது.

இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த பேரன்பு, மிகுதியான நேசம் ஆகியவற்றை (பார்வையிழந்த) ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் மட்டும் தனது கவிதையில் கூறவில்லை. அவர் தமது கவிதையில்,

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِيْ فَعَمِيَ عَلَيْكَ النَّاظِرُ

مَنْ شَآءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் எனது கண்ணின் மணியாக இருந்தீர்கள். இன்று நீங்கள் மரணித்து விட்டதால் எனது கண்கள் குருடாகி விட்டன. நீங்கள் மரணித்த பிறகு எவர் மரணிப்பது பற்றியும் எனக்கு கவலையில்லை. உங்களது மரணத்தைப் பற்றியே நான் அஞ்சினேன் எனக் கூறினார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மரணித்த சமயத்தில் ஹஸ்ஸாம் பின் ஸாபித் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையைக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட பேரன்பை ஹஸ்ஸான் பின் ஸாபித் மட்டும் வெளிப்படுத்தவில்லை. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஒரு ஆழமான நேசத்தை நம்மிடம் உருவாக்கியிருக்கின்றார்கள். அவர்கள் ஓரிடத்தில் இந்த பேரன்பின் காட்சியை நம் முன்னால் படம்பிடித்துக் காட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

**நீண்ட அரபிக் கஸீதாவிலிருந்து சில வரிகளை கூறுகின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்:**

قَوْمٌ رَأَوْكَ وَاُمَّةٌ قَدْ اُخْبِرَتْ

مِنْ ذَالِكَ الْبَدْرِ الَّذِىْ اَصْبَانِىْ

ஒரு சமுதாயம் உங்களைக் கண்டுள்ளது. எந்த முழு நிலா என்னை தனது அன்பிற்குரியவனாக மாற்றியதோ அதைப் பற்றிய செய்தியை ஒரு சமுதாயம் கேள்விப்பட்டது.

يَبْكُوْنَ مِنْ ذِكْرِ الْجَمَالِ صَبَابَةً

وَ تَأَلُّمًا مِّنْ لَوْعَةِ الْهِجْرَانِ

அவர்கள் உமது அழகை நினைவுகூர்ந்து உம்மீது கொண்டுள்ள பேரன்பின் காரணமாக அழுகின்றனர். பிரிவின் வேதனையால் ஏற்படும் துக்கத்தின் காரணமாகவும் அவர்கள் அழுகின்றனர்.

وَأَرَى الْقُلُوْبَ لَدَى الْحَنَاجِرِ كُرْبَةً

وَأَرَى الْغُرُوْبَ تُسِيْلُهَا الْعَيْنَانِ

நான் பார்க்கின்றேன். உள்ளம் அமைதியற்ற நிலையில் தொண்டை வரை வந்து விட்டது. கண்கள் கண்ணீர் வடிப்பதையும் நான் பார்க்கின்றேன். (இந்த நீண்ட கஸீதாவின் கடைசி வரிகள் இதுவாகும். நம்மில் பலருக்கும், குழந்தைகளுக்கும் கூட இந்த கஸீதா மனனமாக தெரியும்.)



جِسْمِىْ يَطِيْرُ اِلَيْكَ مِنْ شَوْقٍ عَلَا

يَا لَيْتَ كَانَت قُوَّةُ الطَّيَرَانِ

எனது உடல் உங்கள் மீது கொண்ட பேரார்வம் காரணமாக உங்களை நோக்கி பறந்து வர விரும்புகிறது. அந்தோ! எனக்கு பறக்கின்ற ஆற்றல் இருந்திருக்க வேண்டுமே! (ஆயினே கமாலாத்தே இஸ்லாம் ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 590 லிருந்து 594 வரை)

நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதற்கான இத்தகு பாடம் கற்றுத் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த உலகவாதிகள் இதனால் என்ன ஆகிவிடப் போகிறது? இது ஒரு லேசான நகைச்சுவைதான் என்று கூறுகின்றார்கள். ஒழுக்கம் இந்த அளவு வீழ்ச்சி அடைந்துவிடும் போது, நல்லொழுக்கத்தின் தரம் உயரே செல்வதற்குப் பதிலாக மிகவும் கீழான நிலைக்கு சென்று விடும் போது தான் உலகத்தின் அமைதியும் சீர்குலைந்து விடுகிறது.... ஆனால் நான் கூறியது போன்று நாம் அதிகம் முயற்சி செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் பல்வேறு அழகிய அம்சங்களை உலகத்தின் முன்னால் எடுத்து வைக்க வேண்டும். இதற்காக சுருக்கமாக அதே சமயத்தில் ஒட்டுமொத்தமாக இவற்றை விளக்கும் நூலாக Life of Muhammad உள்ளது. அல்லது Introduction to the Study of Holy Quran என்ற நூலிலுள்ள பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான பகுதி இருக்கின்றது. இதனை ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இதில் ஏறக்குறைய பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான எல்லா அம்சங்களும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. அல்லது தேவையான முக்கிய அம்சங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன என்று கூறலாம்.

பிறகு தத்தமது ஆர்வம், இன்பம், அறிவுத்திறன் ஆகியவற்றிற்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையை எடுத்துக் கூறுகின்ற மற்ற நூல்களையும் படியுங்கள். பல்வேறு வழிமுறைகள், தொடர்புகள், கட்டுரைகள், பிரசுரங்கள் ஆகியவற்றின் மூலம் உலகிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகு, அருள்

ஆகியவற்றைப் பற்றி தெரிவியுங்கள். அல்லாஹ் இந்த முக்கியமான பணியை, கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழங்குவானாக. இதுபோன்ற தரக்குறைவான அநீதியான பரிகாசத்தில் ஈடுபடுபவர்கள் அல்லது பகைமையை வெளிப்படுத்துபவர்கள் ஆகிய இவர்களை அறிவுள்ள மக்கள் தாமாகவே மறுத்து விடுகின்ற அளவிலுள்ள அறிவை இந்த உலகிற்கு அல்லாஹ் வழங்குவானாக. அதன் மூலம் உலகம் அமைதியற்ற நிலையிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கட்டுமாக! அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும் அது தப்பிக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக.

(2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி நிகழ்த்திய குத்பா பேருரையிலிருந்து எடுக்கப்பட்டது)

## அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை முறை

2006 ஆம் ஆண்டு டென்மார்க்கில் அகில உலகங்களுக்கு அருட்கொடையாக தோன்றிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தொடர்பாக மிகவும் தரக்குறைவாகவும் அன்னாரை இழிவுபடுத்தும் வகையிலும் கேலிச் சித்திரங்கள் வெளியிடப்பட்ட போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இதற்கு வலுவாக கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஜுமுஆ பேருரைகளை நிகழ்த்தினார்கள். இந்த சமயத்தில் முஸ்லிம் நாடுகளில் இதற்கு எதிராக போராட்டம் நடத்தும் வகையில் பொருட்கள் உடைக்கப்பட்டன. தங்களது நாடுகளிலேயே நெருப்பை மூட்டி தங்களுக்கே அவர்கள் இழப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்கள் தனது ஜமாஅத்திற்கு குறிப்பாகவும் முஸ்லிம்களுக்கு பொதுவாகவும் வலியுறுத்தி அறிவுரைகளை கூறியவாறு எதிர்நடவடிக்கைக்கான சரியான வழிகாட்டலை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:



மேலும் நான் கூறியது போன்று, இந்த செயலினால் ஒருவேளை எல்லாரையும்விட அதிகமாக ஏன் உறுதியாக நமது உள்ளத்திற்கு வருத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நமது எதிர்நடவடிக்கையின் வழிமுறை மாறுபட்டதாகும். இங்கு நான் இன்னொன்றையும் கூறிக் கொள்கிறேன். எப்போதும் போல் இவர்கள் இனிவரும் காலங்களிலும் அவ்வப்போது இந்த மாதிரி வெளியிட்டுக் கொண்டிருக்கலாம். முஸ்லிம்களின் மனம் புண்படும் வகையில் மேலும் சில செயல்களை அவர்கள் செய்யலாம். அதற்குப் பின்னால் சில நோக்கங்களும் இருக்கலாம். கிழக்கு நாடுகளிலிருந்து, துணைக்கண்டமாகிய இந்தியா, பாகிஸ்தானிலிருந்து வருகின்ற முஸ்லிம்களின் மீது இதனைச் சாக்காக வைத்து தடையை ஏற்படுத்த முயற்சி செய்யலாம். எனவே, எப்படி இருந்தாலும் இவர்கள் தடையை விதிக்கப்போகிறார்களோ இல்லையோ நாம் நமது நடவடிக்கையை இஸ்லாமிய போதனைக்கேற்ப வழிமுறைக்கேற்ப வடிவமைக்க வேண்டும்.

மேலும் நான் கூறியது போன்று, இஸ்லாத்திற்கு எதிராகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் ஆரம்பத்திலிருந்தே இந்த சதித்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அல்லாஹ் இதனைப் பாதுகாக்கவிருந்தான். இதனை காப்பாற்றுவதற்காக வாக்குறுதி வழங்கியிருக்கின்றான். எனவே அவன் காப்பாற்றி வந்து கொண்டிருக்கின்றான். எல்லா எதிர் முயற்சிகளும் தோல்வியடைந்து விடுகின்றன.

## இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான சதித்திட்டங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முறியடிக்க வேண்டியது இருந்தது

மேலும் இக்காலத்தில் இறைவன் இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நியமித்துள்ளான். எனவே இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தாக்கி எழுதியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும், அவர்களுக்குப் பிறகு அவர்களின் போதனைகளின்படி செயல்பட்டவாறு

அவர்களுடைய கலீஃபாக்களும் ஜமாஅத்திற்கு என்ன வழிகாட்டினார்களோ, என்ன எதிர்நடவடிக்கை மேற்கொண்டார்களோ, பிறகு அதற்கு என்ன விளைவுகள் ஏற்பட்டனவோ அவற்றை நான் எடுத்துரைக்கிறேன். அப்போது தான் நம்மைப் பற்றி, போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் அஹ்மதிகள் கலந்து கொள்ளாததால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அசிங்மாக தாக்கியிருப்பது குறித்து நமக்கு எந்த வேதனையுமில்லை என்பதை நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறுபவர்களுக்கு ஜமாஅத்தின் சாதனைகள் தெரிய வரும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனையும் முன்மாதிரியும் வெளிப்படும் வகையில் நமது எதிர்நடவடிக்கை எப்போதும் இருக்கிறது; இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் போதனை வெளிப்படவும் வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாகயம் (ஸல்) அவர்களின் மீது அசுத்தமான தாக்குதல் நடந்திருப்பதைக் கண்டு பொருள்களை சேதப்படுத்துவதற்குப் பதிலாக அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்தவாறு அவனிடம் உதவி தேடுபவர்களாக நாம் இருக்கின்றோம். இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான நேசராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் காணப்பட்ட நபி (ஸல்) அவர்கள் மீதான உண்மையான நேசம் தொடர்பான தன்மான உணர்விற்கு இரண்டு உதாரணங்களை எடுத்துரைக்கிறேன்.

முதல் உதாரணம், கிறிஸ்தவரான பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் பற்றியதாகும். அவர் தனது நூலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரான தனது மிக அசுத்தமான சிந்தனையை வெளிப்படுத்தியவாறு தஜ்ஜால் என்ற சொல்லை பயன்படுத்தியிருந்தார் நவூதுபில்லாஹ். அந்த நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இஸ்லாத்திற்கும் கிறிஸ்துவத்திற்குமிடையே ஒரு விவாதமும் நடந்து கொண்டிருந்தது.

**<u>ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:</u>**

நான் 15 நாட்கள் விவாதத்தில் ஈடுபட்டிருந்தேன். விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஆத்தமின் தண்டனைக்காக அதாவது அவர் கூறிய



வார்த்தைகளுக்காக, அவர் பிடிக்கப்படுவதற்காக மறைமுகமாக நான் துஆ கேட்டுக் கொண்டிருந்தேன். விவாதம் முடிவடைந்ததும் நான் அவரிடம் கூறினேன். ஒரு விவாதம் முடிந்து விட்டது. ஆனால் இறைவன் புறமிருந்துள்ள இன்னொரு வகை போட்டி எஞ்சியிருக்கின்றது. அது என்னவென்றால், நீர் அந்துரூனா பைபிள் என்ற உமது நூலில் எங்களுடைய நபி (ஸல்) அவர்களை தஜ்ஜால் என்ற பெயரால் அழைத்திருக்கின்றீர். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளராகக் கருதுகின்றேன். மேலும் இஸ்லாம் மார்க்கத்தை அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததாக உறுதி கொள்கின்றேன். எனவே இது எத்தகைய போட்டி என்றால் வானத்தின் தீர்ப்பு இதை தெளிவுபடுத்தும். அந்த வானத்தின் தீர்ப்பு என்னவென்றால், நம்மில் யார் தனது கூற்றில் பொய்யராக இருக்கின்றாரோ, அநியாயமாக இறைதூதரை பொய்யர் என்றும், தஜ்ஜால் என்றும் கூறுகிறாரோ, உண்மைக்கு எதிரியாக இருக்கின்றாரோ அவர் உண்மையின் பக்கம் திரும்பினாலன்றி அதாவது அவர் உண்மை நபியை தஜ்ஜால் என்று கூறுவதிலிருந்து விலகவில்லை என்றால், தீய சொற்களைக் கூறுவதை விட்டுவிடவில்லையென்றால் அவர் இன்றிலிருந்து 15 மாதங்களுக்குள் உண்மையாளரின் வாழ்நாளிலேயே நாசமடைந்து விடுவார். இது ஏன் கூறப்பட்டிருக்கின்றதென்றால், ஒரு மார்க்கத்தை மறுப்பது மட்டும் ஒருவரை உலகத்தில் தண்டனைக்குரியவராக்கி விடுவதில்லை. மாறாக வரம்பு மீறி நடந்து கொள்ளுதல், அகங்காரம், தீய சொற்களைக் கூறுதல் ஆகியவை தான் தண்டனைக்குரியவராக்கி விடுகிறது.

**<u>ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:</u>**

நான் இதை (பாதிரி ஆத்தமிடம்) கூறிய போது அவரது நிறம் மாறி விட்டது. முகம் சிவந்து விட்டது. கைகள் நடுங்க ஆரம்பித்து விட்டன. அப்போது அவர் தயக்கமின்றி வாயிலிருந்து நாவை வெளியே நீட்டி, இரு கைகளாலும் (தன்) காதைப் பிடித்து கைகளை தலையுடன் சேர்த்து, குற்றம் சுமத்தப்பட்டவர் பயந்து கடுமையாக மறுத்துரைத்து தவ்பா, இஸ்திக்ஃபார் செய்வது போல அசைத்தார். மேலும் தவ்பா, தவ்பா நான் ஒரு போதும்

அவமரியாதை செய்யவில்லை என்று மீண்டும் மீண்டும் கூறினார். மேலும் இதன் பிறகும் அவர் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு போதும் எதையும் கூறவில்லை.

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தன்மான உணர்வு கொண்டிருந்த அல்லாஹ்வின் சிங்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிர்நடவடிக்கையாக இருந்தது. இதுபோன்ற செயலை செய்யக்கூடியவர்களை நோக்கி அன்னார் அறைகூவல் விடுத்து வந்தார்கள்.

பிறகு இன்னொருவர் லேக்ராம் என்ற ஒரு இந்து பண்டிதர் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் ஏசினார். அவரை இந்த ஈனச் செயலிலிருந்து விலகியிருக்குமாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவருக்கு அறிவுரை கூறினார்கள். ஆனால் அவர் விலகவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அப்போது அல்லாஹ் லேக்ராமின் வேதனையுடன் கூடிய மரணம் பற்றி செய்தி அறிவித்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகிறார்கள்:

இறைவன் எனக்கு, அல்லாஹ் மற்றும் தூதரின் எதிரியைப் பற்றி வாக்குறுதி வழங்கியிருக்கிறான். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசுகின்றார். அசுத்தமான சொற்களை நாவில் கொண்டு வருகின்றார். அவர் பெயர் லேக்ராம் என்பதாகும். நான் கேட்ட துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். மேலும் அவர் 6 ஆண்டுகளுக்குள் நாசமாகி விடுவார் என இறைவன் எனக்கு செய்தி தெரிவித்திருக்கின்றான். உண்மையான மார்க்கத்தைத் தேடுபவர்களுக்கு இது ஓர் அடையாளமாகும். அவ்வாறே நடந்தது. அவர் வேதனையுடன் கூடிய மரணத்தை அடைந்தார்.



## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை உலகின் முன்னால் எடுத்து வையுங்கள்

இந்த வழிமுறையைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். இவ்விதமான செயல்களை செய்பவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மைகளை, அருள்களை எடுத்துக் கூறுங்கள். உலக கண்களிலிருந்து மறைந்திருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய ஒளிமிக்க அம்சங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். மேலும் அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள். ஒன்று, அல்லாஹ் இவர்களை இந்த செயல்களிலிருந்து விலக்கி வைப்பானாக. அல்லது தானே இவர்களைப் பிடிப்பானாக. பிடிப்பதற்கென அல்லாஹ்விற்கென்று தனது வழிமுறைகள் இருக்கின்றன. யாரை, எப்படிப் பிடிக்க வேண்டும் என்பதை அவன் நன்கறிவான்.

அடுத்து, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் மிகவும் முட்டாள்தனமான ஒரு புத்தகம் ரங்கீலா ரஸூல் என்ற பெயரில் எழுதப்பட்டது. பிறகு வர்த்தமான் என்ற பத்திரிகை முட்டாள்தனமான ஒரு கட்டுரையை வெளியிட்டது. அப்போது இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஆத்திரமடைந்து விட்டனர். எல்லாப் புறமும் முஸ்லிம்களிடத்தில் ஒரு கொந்தளிப்பு காணப்பட்டது. மேலும் கடுமையான எதிர்நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை நோக்கிக் கூறினார்கள்: சகோதரர்களே! நான் மனவேதனையுடன் மீண்டும் உங்களிடம் கூறுகிறேன். சண்டையிடுபவர் வீரம் கொண்டவர் அல்லர். அவர் கோழையாவார். ஏனெனில் அவர் தன் நஃப்ஸின் கீழ் அழுங்கி விட்டார்.

(கோபத்தை அடக்குபவர் தான் வீரம் கொண்டவர் என்ற நபிமொழிக்கேற்ப இந்தக் கூற்று இருக்கின்றது)

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:**

வீரம் கொண்டவர் யார் என்றால் அவர் நிரந்தரமான எண்ணம் கொண்டவராக இருக்கின்றார். அதை நிறைவேற்றாதவரை அவர் அதிலிருந்து பின்வாங்குவதில்லை.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு மூன்று விசயங்களில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்று, நீங்கள் இறையச்சத்துடன் செயல்பட வேண்டும். மார்க்கத்தை அக்கறையற்ற பார்வையுடன் நீங்கள் பார்க்கக்கூடாது. நீங்கள் உங்களது செயலை முதலில் சரிசெய்து கொள்ளுங்கள். இரண்டாவது, இஸ்லாத்தை தப்லீக் செய்வதில் முழு ஆர்வம் காட்ட வேண்டும். இஸ்லாமிய போதனை உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் தெரிய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மைகள், நன்மைகள், அழகிய வாழ்க்கை முன்மாதிரி ஆகியவை அனைவருக்கும் தெரிய வேண்டும். மூன்றாவது, நீங்கள் நாகரிக, பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும்.

(அன்வாருல் உலூம், தொகுதி 9, பக்கம் : 555-556)

இப்போது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவர் சாதாரண நபராக இருந்தாலும், தலைவராக இருந்தாலும் இது கடமையாகும். இப்போது பாருங்கள்! சுதந்திரம் இருந்தும், சுதந்திரமானவர்கள் என்று இந்த முஸ்லிம் நாடுகள் அழைக்கப்பட்டாலும் இன்றுவரை அவர்கள் நாகரிக, பொருளாதார அடிமைத்தனத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இந்த மேற்கத்திய நாடுகளின் தயவில் இருக்கின்றனர். அவர்களை காப்பியடிப்பதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். தாமே வேலை செய்வதில்லை. அவர்களை சார்ந்திருக்கின்றனர். எனவே தான் அவர்கள் முஸ்லிம்களின் உணர்வுகளுடன் அவ்வப்போது விளையாடிக் கொண்டிருக்கின்றனர். பிறகு



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சீரத்துந்நபி கூட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். ஆக, இதுதான் கண்டன நடவடிக்கையின் முறையாகும். பொருள்களை உடைத்து நாசப்படுத்துவதும், குழப்பங்களை உண்டாக்குவதும் சரியான முறையல்ல. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி கூறிய அறிவுரைகளில் அதிகமாக விளித்திருப்பது அஹ்மதிகளை நோக்கித்தான்.

இந்த நாடுகளிலுள்ள சில தவறான சம்பிரதாயங்கள் சில அஹ்மதி குடும்பங்களிடமும் அறியாமலேயே நுழைந்து கொண்டிருக்கின்றன. எனவே அஹ்மதிகளை நோக்கி நான் கூறுகின்றேன். உங்களை நோக்கியும் கூறப்பட்டுள்ளது. இவர்களின் கலாச்சாரத்திலுள்ள நல்ல விசயங்களை மேற்கொள்ளுங்கள். ஆனால் தவறான விசயங்களிலிருந்து நாம் தப்பிக்க வேண்டும். நம்முடைய எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்றால் பொருள்களை உடைத்து நாசப்படுத்துவதற்குப் பதிலாக நாம் நம்மைப் பற்றி ஆய்வு செய்வதன் பக்கம் கவனம் வேண்டும். நமது செயல்கள் என்ன? நம்மிடம் இறையச்சம் எந்த அளவிற்கு இருக்கிறது? அவனை வணங்குவதன் பக்கம் எந்த அளவுக்கு கவனம் இருக்கிறது? மார்க்க கட்டளைகளின்படி செயல்படுவதன் பக்கம் எவ்வளவு கவனம் இருக்கிறது? அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதன் பக்கம் எவ்வளவு கவனம் இருக்கிறது? என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

பிறகு பாருங்கள்! ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹு தஆலா) அவர்களின் காலகட்டத்தில் ருஷ்டி என்பவர் இழிவுபடுத்தும் வகையில் புத்தகம் எழுதினார். அப்போது அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் குத்பாக்களும் கொடுத்தார்கள். ஒரு மறுப்பு நூலையும் எழுத வைத்தார்கள். நான் கூறியது போன்று இந்த செயல்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. சென்ற ஆண்டின் ஆரம்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைப் பற்றி ஒரு கட்டுரை வெளியானது. அப்போதும் நான் ஜமாஅத்துகளுக்கும் கிளை அமைப்புகளுக்கும் கடிதங்கள் எழுதுங்கள்.

மறுப்புக் கட்டுரைகள் எழுதுங்கள். தொடர்புகளை விரிவுபடுத்துங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் சிறப்புகளையும், நன்மைகளையும் எடுத்துக் கூறுங்கள் என்பதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அழகிய அம்சங்களை உலகத்திற்கு காட்டும் சவாலகும். அது பொருள்களை உடைப்பதால் நடைபெற முடியாது. எனவே எல்லா அஹ்மதிகளும் ஒவ்வொரு நாட்டிலும் கல்வி அறிவுள்ள புரியும் திறனுள்ள பிற முஸ்லிம்களுக்கும் புரிய வைக்க வேண்டும். அதாவது நீங்களும் இவ்விதமாக அமைதியான வழிமுறையில் எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்புகளை அதிகமாக்குங்கள். எழுதுங்கள் எனக் கூற வேண்டும். அப்போது எல்லா நாட்டிலும் எல்லா வகை மக்களுக்கும் சான்று முழுமையடைந்து விடும். அதற்குப் பிறகும் எவராவது ஆட்சேபனை செய்தால் அவருடைய விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ரஹ்மத்துல் லில் ஆலமீனாக (அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையாக) அனுப்பியுள்ளான். இறைவனே கூறுகிறான்: وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பியுள்ளோம். (21:108) மேலும் அன்னாரை விட அதிக அருளை விநியோகம் செய்யக்கூடியவர் இதற்கு முன் ஒருபோதும் பிறந்ததுமில்லை; பிறக்கப்போவதுமில்லை. ஆயினும் அன்னாரின் அழகிய முன்மாதிரி என்றென்றும் நிலைபெற்றிருக்கும். அதனைப் பின்பற்றி நடப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் முயற்சி செய்ய வேண்டும். இந்த வகையிலும் பெரும் பொறுப்பு அஹ்மதிகளுக்கு இருக்கின்றது. நம் மீதே அது சுமத்தப்பட்டுள்ளது.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்துலகங்களுக்கும் அருட்கொடையாக விளங்கினார்கள். ஆனால் இம்மக்கள் அவர்களைப் பின்பற்றி பயங்கரமானவராக சித்தரித்துக் காட்டுகிறார்கள். எனவே நாம் இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பு, நேசம், கருணை ஆகியவற்றின் அழகிய



முன்மாதிரியை உலகிற்கு காட்ட வேண்டும். மேலும் அதனை காட்டுவதற்கு முஸ்லிம்கள் தமது நடத்தைகளையும் மாற்ற வேண்டியது வரும் என்பது வெளிப்படை. தீவிரவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எதிரிகள் மதீனாவுக்கு வந்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது போரை திணிக்காத வரை அவர்களோ போரிலிருந்து கூட விலகியிருக்க எப்போதும் முயற்சி செய்தார்கள். பிறகு அல்லாஹ்வின் அனுமதியினால் தற்காபுக்காக போர் செய்ய வேண்டி வந்தது. அங்கேயும் என்ன கட்டளை இருந்ததென்றால்

وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ

முஸ்லிம்களே! உங்களுடன் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை அல்லாஹ் நேசிப்பதில்லை. (2:191). தன் மீது இறங்கிய மார்க்க சட்டத்தின்படி அதிகமாக செயல்படக்கூடியவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பற்றி பொருத்தமற்ற சிந்தனைகளை வெளிப்படுத்துவது மாபெரும் கொடுமை ஆகும்.

## கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டதற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உடனடி எதிர்நடவடிக்கை

மற்ற முஸ்லிம்களின் ஆவேசம் என்னவென்றால், ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். பொருள்களை உடைக்கின்றார்கள். ஏனென்றால் பொருள்கள் உடைக்கப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டும் என்பதே அவர்களின் எதிர்நடவடிக்கை ஆகும். இந்த சம்பவத்திற்குப் பிறகு என்ன உடனடி எதிர்நடவடிக்கை வெளிப்படுத்த வேண்டுமோ, அதை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்துள்ளது. அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை எப்படி இருந்ததென்றால் அஹ்மதிகள் உடனே அந்த பத்திரிக்கை நிருபர்களை சந்தித்தனர். பிறகு இது ஒன்றும் இன்று நடக்கின்ற விசயமல்ல. 2006-ம் ஆண்டு பிப்ரவரியில் பேராட்டங்கள் நடந்தன. இது சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றது. அப்போது நாம் என்ன செய்தோம்? நான் கூறியது போன்று இது செப்டம்பரில் நடந்த சம்பவமாகும். அல்லது

அக்டோபரின் ஆரம்பத்தில் நடந்ததாக வைத்துக் கொள்வோம். அப்போது நமது ஜமாஅத்தின் கொள்ளை பரப்புனர் உடனடியாக ஒரு விரிவான கட்டுரையை தயார் செய்து அதனை கார்டூன் வெளியிட்ட பத்திரிக்கையாளர்களுக்கு அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படத்தை வெளியிட்டதற்கு கண்டனம் தெரிவித்தார். பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளை எடுத்துக்கூறி எங்களின் கண்டனம் இப்படி தான் இருக்கும். நாங்கள் கண்டிப்பாக ஊர்வலம் நடத்த மாட்டோம். ஆனால் பேனாவின் மூலம் நாங்கள் உங்களுடன் ஜிஹாது செய்வோம். படம் வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவிக்கின்றோம். கருத்து சுதந்திரம் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் அதற்காக மற்றவர்களின் உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்பது அதற்கு பொருளல்ல என்பதையும் பத்திரிகைக்கு எடுத்துக் கூறினோம்.

எப்படியிருந்தபோதிலும் தெளிவான ஒரு எதிர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒரு மறுப்புக் கட்டுரையும் பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதை அவர்கள் வெளியிட்டு விட்டார்கள். டேனிஷ் பொதுமக்கள் சார்பாக நல்ல பின்விளைவு ஏற்பட்டது. ஏனெனில் நமது கொள்கை பரப்பு நிலையத்திற்கு தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் நமது கட்டுரையை அவர்கள் விரும்பியதாக குறிப்பிட்டார்கள். பிறகு ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சார்பாக நமக்கும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு வந்தது. அங்கு நமது ஜமாஅத் சென்று, உங்களுடைய சட்டம், கருத்து சுதந்திரத்திற்கு அனுமதி அளித்திருப்பது உண்மை தான். ஆனால் அதற்காக பிற மார்க்க வழிகாட்டிகளை, கண்ணியத்திற்குரியவர்களை ஏளனமாக பார்க்க வேண்டும் என்றோ, அவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்றோ பொருளல்ல. மேலும் இங்கு முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இந்த சமூகத்தில் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் உணர்வுகளை எந்நிலையிலும் கவனத்திற்கொள்வது அவசியமானதாகும். ஏனெனில் அது இல்லாமல் அமைதி நிலைபெற முடியாது என்று கூறியது.



பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை எவ்வளவு ஆழமானது! எவ்வளவு அழகான முன்மாதிரி! எவ்வளவு உயர்ந்த ஒழுக்கங்களை கொண்டவர்களாக திகழ்ந்தார்கள்! எத்தனை மக்களுக்கு அனுதாபம் காட்டுபவர்களாக விளங்கினார்கள்!! இறைவனுடைய படைப்பினங்களோடு எவ்வளவு அனுதாபம் காட்டுபவர்களாக விளங்கினார்கள்! என்பதையும் அன்னார் அனுதாபம் மற்றும் கருணையின் தோற்றமாக திகழ்ந்தார்கள் என்பதையும் அவர்களுக்கு எடுத்து கூறப்பட்டது. இதற்கான சில சம்பவங்களை அவர்களுக்கு எடுத்துக்கூறிய பிறகு இத்தகைய போதனைகளைக் கொண்டவரைப் பற்றி இத்தகைய நற்பண்புகளைக் கொண்டவரைப் பற்றி இவ்வாறு படம்பிடித்துக் காட்டுவது ஆகுமானதா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. நமது கொள்கை பரப்புனர் கூறிய இந்த விசயங்களை அவர்கள் கேட்டு அதை மிகவும் விரும்பினார்கள்; மிகவும் பாராட்டினார்கள். இந்த மாதிரியான கூட்டம் முதலில் நடந்திருந்தால் ஒருபோதும் காட்டூன் வைத்திருக்க மாட்டார்கள் என்று கார்ட்டூன் வரையக்கூடிய ஒருவர் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இஸ்லாத்தின் போதனை என்ன என்பது பற்றி இப்போது தான் அவர்களுக்கு தெரிந்துள்ளது. பிறகு இந்த மாதிரியான கலந்துரையாடல் அடிக்கடி நடக்க வேண்டும் என்று அவர்கள் அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

மேலும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சார்பாகவும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டது. அது அனைவருக்கும் படித்துக் காட்டப்பட்டது. மேலும் தொலைக்காட்சியிலும் நேர்காணல் நடைபெற்றது. அது நன்றாக இருந்தது. பிறகு அமைச்சர்களுடனும் மீட்டிங் நடைபெற்றது.

ஆக, அஹ்மதிய்யா ஜமாஅத் இவ்விதமாக முயற்சி செய்கின்றது. மற்ற நாடுகளிலும் இவ்வாறு நடைபெற்றுள்ளது. எப்படியிருந்த போதிலும் எந்த நாட்டில் நடந்ததோ அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் கணிசமாக வேலை செய்துள்ளது. ஆனால் இந்த காட்டூனுக்கு காரணம் டென்மார்கில் ஒரு டேனிஷ் எழுத்தாளர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். குர்ஆனும் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கையும் என்பது அதன் தலைப்பாகும். அது

மார்க்கெட்டிற்கு வந்து விட்டது. அந்த நூலாசிரியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படத்தை வரைந்து அனுப்புமாறு ஓவியர்களை கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி சிலர் வரைந்து அனுப்பியுள்ளனர். முஸ்லிம்களிடம் எதிர் விளைவு ஏற்படும் என்பதற்காக அந்த ஓவியர்கள் தமது பெயரை வெளியிடவில்லை. இந்த புத்தகம் தான் காரணமாக அமைகின்றது. இந்த பத்திரிக்கையிலும் கார்ட்டுன்தான் காரணமாக இருந்தது. எனவே இனி இது தொடர்பாகவும் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். உலகில் எங்கெல்லாம் இதைப்படித்து விட்டு ஆட்சேபனைகள் கிளம்புகின்றனவோ அவற்றை அறிந்து அவற்றிற்கு நாம் பதில் கூற வேண்டும். ஆனால் டென்மார்க்கில் இன்னொரு கருத்தும் நிலவுகிறது. நாங்கள் வெளியிடாத சில தவறான கார்ட்டுன்களையும் சில முஸ்லிம்கள் மூலமாக இஸ்லாமிய உலகிற்கு காட்டி எங்களுக்கு எதிராக தூண்டி விட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என அவர்கள் கூறுகின்றனர். இது உண்மையா? பொய்யா? என்று தெரியவில்லை. ஆனால் உடனடியாக நாம் கவனமூட்டியதால் அவர்கள் உணர்ந்து விட்டார்கள். ஆக இதற்கான எதிர்நடவடிக்கையை அஹ்மதிய்யா ஜமாஅத் மூன்று மாதங்களுக்கு முன்பே செய்துவிட்டது. முஸ்லிம்களாகிய இவர்களுக்கு இன்று தான் தெரிகின்றது.

எனவே எல்லா நாட்டிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சம்பவங்களை எடுத்துக் கூற வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக இஸ்லாம் போர் ஆர்வம் கொண்டது என்ற மாயத் தோற்றம் காணப்படுகிறது. அதை சான்றுகளுடன் மறுத்துரைப்பது நமது கடமையாகும். பத்திரிக்கைகளிலும் அதிகமாக எழுதுங்கள் என்று நான் முன்னரும் கூறியிருந்தேன். பத்திரிக்கைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறு பற்றிய புத்தகங்களையும் அனுப்பி வைக்கலாம்.



## அஹ்மதி இளைஞர்கள் பத்திரிக்கை துறையில் நுழைய வேண்டும்

பிறகு வருங்காலத்திற்காக இன்னொரு ஆலோசனையும் உள்ளது. இதுபற்றியும் ஜமாஅத் திட்டம் வகுக்க வேண்டும். இளைஞர்கள் அதிகமான பத்திரிக்கை துறையில் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். இதில் ஆர்வமுள்ளவர்கள் செல்லுங்கள். அப்போது தான் பத்திரிக்கைகளிலும் அந்த இடங்களிலும் பத்திரிக்கையாளர்களிடத்திலும் நமது செல்வாக்கு இருக்கும். ஏனெனில் இந்த மாதிரியான செயல்கள் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நமக்கு மீடியாக்களுடன் அதிகமதிகமாக தொடர்பு இருந்தால் தான் இந்த விசயங்களை நாம் தடுக்க முடியும். இந்த முட்டாள்தனமான செயல்களை தடுத்து நிறுத்த முடியும். அதற்குப் பிறகும் எவராவது அகங்காரம் காட்டுகின்றார் என்றால் அப்படிப்பட்டவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் சாபமிட்ட மக்களைச் சேர்ந்தவர்களாகி விடுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்.

اِنَّ الَّذِيْنَ يُؤْذُوْنَ اللّٰهَ وَ رَسُوْلَهٗ لَعَنَهُمُ اللّٰهُ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَاَعَدَّ لَهُمْ عَذَابًا مُّهِيْنًا

அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் துன்பத்தைக் கொடுப்பவர்களை, அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சபித்துள்ளான். மேலும் அவன் அவர்களுக்கு இழிவுபடுத்தக்கூடிய தண்டனையை ஆயத்தப்படுத்தியுள்ளான். (33:58)

இந்தக் கட்டளை முடிந்து விடவில்லை. நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் உயிருள்ள நபியாவார்கள். அவர்களின் போதனை எப்பொழுதும் உயிரை வழங்கக்கூடிய போதனையாகும். அவர்களின் சரீஅத் எல்லா காலத்தின் பிரச்சனைகளுக்கும் தீர்வு தரக்கூடிய சரீஅத் ஆகும். அன்னாரைப் பின்பற்றுவதால் அல்லாஹ்வுடைய நெருக்கம் கிடைக்கின்றது. இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு ஏதாவதொரு வகையில் துன்பம் கொடுக்கப்படுகின்றதே அதற்கும் இந்த வசனம் பொருந்துகிறது. அல்லாஹ்

உயிருடன் இருக்கின்றான். இவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

எனவே உலகத்திற்கு நாம் புரிய வைக்க வேண்டியது நமது கடமையாகும். உலகுக்கு நாம் கூறவேண்டியதென்னவென்றால், நீங்கள் என்ன துன்பமிழைக்கின்றீர்களோ அதற்கான தண்டனையைக் கொடுக்க இன்றும் அல்லாஹ்வுக்கு ஆற்றல் இருக்கின்றது. எனவே அல்லாஹ்வுக்கும் அல்லாஹ்வின் தூதருக்கும் துன்பமிழைப்பதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இஸ்லாத்தினுடைய போதனைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரிகளையும் உலகிற்கு எடுத்துரைக்கின்ற அதே சமயத்தில் நாம் நமது செயல்களையும் சரி செய்ய வேண்டியது வரும். ஏனெனில் நமது செயல்கள் தான் இந்த உலகத்தின் வாயை அடைக்கும். மேலும் இவைதான் உலகத்தின் வாயை அடைப்பதற்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. நான் அறிக்கையில் கூறியது போன்று, அங்குள்ள ஒரு முஸ்லிம் ஆலிமைப் பற்றியும், அவர் எங்களிடம் ஒன்று சொல்கிறார்; அங்கு சென்று ஏதோ செய்கிறார் என்ற நயவஞ்சகம் செய்யும் குற்றச்சாட்டு கூறப்படுகிறது. நான் அநேகமாக அந்த அறிக்கையை படித்துக் காட்டவில்லை என நினைக்கிறேன். ஆக நாம் நமது வெளிப்புறத்தையும், சொல்லையும் செயலையும் ஒன்றாக்கி செயல் அளவிலான முன்மாதிரியை காட்ட வேண்டியது வரும்.

## கொடிகளை எரிப்பதாலோ அல்லது பொருள்களை உடைப்பதாலோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம் நிலைபெறாது

முஸ்லிம்கள் என்று கூறுபவர்களிடமும் நான் கூறுகிறேன். அஹ்மதிய்யாவா, ஷியாவா அல்லது சுன்னியா அல்லது இஸ்லாத்தின் எந்தப் பிரிவைப் சேர்ந்தவர் என்பதை நீங்கள் பார்க்காமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் நடக்கும் போது தற்காலிக ஆவேசம் கொள்வதை விட்டுவிட்டு, கொடிகளை கொளுத்துவதை விட்டு விட்டு, பொருள்களை உடைத்தெறிவதை விட்டுவிட்டு, தூதரகங்களை



தாக்குவதை விட்டு விட்டு, உங்கள் செயல்களை சரிப்படுத்துங்கள். எதிரிகளுக்கு விரல் நீட்ட வாய்ப்பே கிடைக்கக் கூடாது. தீயிட்டுக் கொளுத்துவதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதிப்பு இவ்வளவு தான் என இவர்கள் கருதுகின்றார்களா? நவூதுபில்லாஹ். கொடியை எரிப்பதால், தூதரகங்களின் பொருள்களை எரிப்பதால் அதற்குப் பழிவாங்கி விட்டதாக நினைக்கின்றார்களா? அவ்வாறல்ல. நாமோ நெருப்பை அணைக்க வந்த நபியை ஒப்புக் கொண்டவர்களாவோம்! அவர் அன்பின் தூதராக வந்தார். அவர் சமாதான இளவரசராக இருந்தார். எனவே எவ்வகையிலும் கடுமையாக நடந்து கொள்வதற்குப் பதிலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய போதனைகளை உலகுக்கு எடுத்துக் கூறி புரிய வையுங்கள்.

## ஓர் அஹ்மதியின் உண்மையான எதிர்விளைவு என்ன இருக்க வேண்டும்?

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. ஆனால் நான் அஹ்மதிகளிடம் கூறிக் கொள்கிறேன். (முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு இந்த அறிவும். புரியும் திறனும் வருமா? வராதா? என்று தெரியவில்லை. ஆனால் உங்களில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு முதியவரும், ஒவ்வொரு சிறுவரும், ஒவ்வோர் இளைஞரும் ஒவ்வோர் ஆணும், ஒவ்வொரு பெண்ணும் வெளியிடப்பட்டிருக்கும் இந்த முட்டாள்தனமான கார்டூனுக்கு எதிர்நடவடிக்கையாக என்றும் அணையாத நெருப்பை மூட்டுபவர்களைச் சேர்ந்தவர்களில் தம்மை இணைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாட்டின் கொடியையோ அல்லது அதன் உடமைகளையோ எரித்து சில நிமிடங்களோ அல்லது சில மணி நேரங்களிலோ அணைந்து விடும் நெருப்பு அல்ல.

பாக்கிஸ்தானின் ஒரு படம் காட்டப்பட்டது. பெரும் போர் புரிவதைப் போன்று. மக்கள் ஆவேசத்துடன் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். அந்தத் தீ ஐந்து நிமிடத்தில் அணைந்து விடும். நமது நெருப்பு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் நொருப்பாக இருக்க வேண்டும். அது ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு, நேசம் என்ற நெருப்பாகும். அன்னாரின் ஒவ்வொரு முன்மாதிரிகளையும் கடைபிடிக்கின்ற, உலகத்திற்கு காட்டுகின்ற நெருப்பாகும். அத்தகைய நெருப்பு உங்களின் உள்ளங்களிலும் நெஞ்சங்களிலும் பற்றிய பிறகு பற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த நெருப்பு துஆவாகவும் மாற வேண்டும். அதன் சுடர் எப்பொழுதும் வானம் வரை சென்று கொண்டிருக்க வேண்டும்.

### உங்களது வேதனைகளை துஆவாக மாற்றுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்து ஓதுங்கள்

எனவே இந்த நெருப்பதைத்தான் ஒவ்வொர் அஹ்மதியும் தமது உள்ளத்தில் மூட்ட வேண்டும். மேலும் உங்கள் வேதனையை துஆவாக மாற்ற வேண்டும். ஆனால் பின்னர் அதற்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தான் காரணியாக ஆக வேண்டும். உங்கள் துஆ கபூல் ஆவதற்கு இறைவனின் அன்பை ஈர்ப்பதற்கு உலக வீண் கேளிக்கைகளிலிருந்து விலகுவதற்கு இந்த மாதிரியான குழப்பங்கள் உருவாகும் போது அதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பை உள்ளத்தில் குடிபெயரச் செய்வதற்கு நமது இம்மையையும் மறுமையையும் சரியாக்குவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எண்ணற்ற சலவாத்தை ஓத வேண்டும். அதிகமாக சலவாத் ஓத வேண்டும். இந்த குழப்பம் நிறைந்த காலகட்டத்தில் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்தில் மூழ்கியவாறு வைத்திருப்பதற்கு நமது சந்ததிகளை இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் நிலைபெறச் செய்வதற்கு ஒவ்வொர் அஹ்மதியும் அல்லாஹ்வின் இக்கட்டளைக்கு உறுதியாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ۭ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ
وَسَلِّمُوْا تَسْلِيْمًا ۝٥٧



அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் இந்த நபியின் மீது தரூதும், சலாமும் ஓதுங்கள். ஏனென்றால் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் இந்த நபியின் மீது அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள். (திருக்குர்ஆன் 33:57)

(இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 10 பிப்ரவரி 2006 –ல் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து... உஸ்வயே ரஸூல் அவ்ர் ஹாக்கோன் கீ ஹகீகத் இரண்டாம் பதிப்பு பக்கம் 9–20)

### மற்றவர்களது உணர்வுகளுடன் விளையாடுவது ஜனநாயகம் அல்ல; கருத்து சுதந்திரமும் அல்ல

ஹுஸூர் அவர்கள் மற்றவர்களது உணர்வுகளுடன் விளையாடுவது தொடர்பாக மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்களைக் கூட எச்சரித்துள்ளார்கள். மேலும் இது அல்லாஹ்வின் கோபத்தைத் தூண்டுவதற்கு காரணமாக அமையும் என்றும் கூறியுள்ளார்கள். ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்தவொரு மதத்தின் தூய ஸ்தாபகர்கள் தொடர்பாகவும் எவ்விதத்திலும் பொருத்தமற்ற கருத்துக்களை தெரிவிப்பதை எவ்விதத்திலும் கருத்து சுதந்திரம் என்று நம்மால் கூற முடியாது. நீங்கள் ஜனநாயகம் மற்றும் கருத்து சுதந்திரத்தின் சாம்பியனாக உள்ளோம் என்று கூறிக்கொண்டு மற்றவர்களின் உணர்வுகளோடு விளையாடுகிறீர்களே. இது ஜனநாயகமும் அல்ல. கருத்து சுதந்திரமுமல்ல. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எல்லை இருக்கின்றது. நல்லொழுக்கத்திற்கென்று சில அளவுகள் உள்ளன. எவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் நல்லொழுக்கத்தின் சில விதிமுறைகள் உள்ளனவோ அவ்வாறே பத்திரிக்கைத் துறைக்கும் நல்லொழுக்க விதிமுறைகள் உள்ளன. எப்படிப்பட்ட அரசாங்கமாக இருந்தாலும் அதற்கும் சட்ட திட்டங்கள் உள்ளன. கருத்து சுதந்திரம் என்பது மற்றவர்களது உணர்வுகளுடன் விளையாடுவது என்று ஒருபோதும் பொருளாகாது. மற்றவர்களுக்கு துன்பத்தை தருவது இதன் பொருளல்ல. மேற்கத்திய உலகம் பெருமை கொண்டாடும் கருத்து சுதந்திரம் இதுதான் என்றால், இந்த சுதந்திரம்

முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதல்ல. மாறாக, இது வீழ்ச்சியின் பக்கம் கொண்டு செல்லும் சுதந்திரமாகும்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையிலுள்ள செயல்களில் பிடிவாதமாக இருப்பது இறை கோபத்தை தூண்டுவதற்குக் காரணமாக இருக்கும்

மேற்கத்திய உலகம் வெகுவேகமாக மார்க்கத்தை கைவிட்டுவிட்டு சுதந்திரம் என்ற பெயரில் எல்லா துறையிலும் நல்லொழுக்கத்தின் தகுதிகளை அழித்துக் கொண்டிருக்கிறது. எவ்வாறு அந்த மக்கள் அழிவை அழைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது கூட அவர்களுக்கு தெரியவில்லை. இப்போது இத்தாலியில் ஒரு அமைச்சர் ஒரு புது விசமத்தை தூண்டிவிட்டுள்ளார். அதாவது இந்த அசிங்கமான, தரக்குறைவான கேலிச் சித்திரங்களை T.Shirts –களில் வரைந்து அதை அணியத் தொடங்கியுள்ளார்.மேலும் தன்னிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என பிறருக்கும் கூறியிருக்கிறார். அங்கு அது விற்கப்படுவதாகவும் கேள்விப்படுகிறோம். மேலும் அவர் முஸ்லிம்களுக்கான சிகிச்சை இதுவேயாகும் என்றும் கூறியுள்ளார். இது முஸ்லிம்களுக்கான சிகிச்சையா? இல்லையா? என்பது பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட செயல்களால் இறைவனின் கோபத்தை தூண்டுவதற்கு அவர்கள் நிச்சயமாக காரணமாகி கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுவரை முட்டாள்தனமாக நடைபெற்றதாக இருக்கட்டும். **ஆனால், இப்படிப்பட்ட செயல்களை தொடர்ந்து பிடிவாதத்துடன் செய்து வருவதும் நாங்கள் செய்வது சரிதான் என்று கூறி முரண்டு பிடிப்பதும் அல்லாஹ்வின் கோபத்தை நிச்சயமாக தூண்டுகிறது.**

## இப்படிப்பட்ட நிலைமைகளில் அஹ்மதியின் எதிர்நடவடிக்கை என்ன இருக்க வேண்டும்?

எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியது போன்று மற்ற முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கை எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும்.



ஆனால், ஓர் அஹ்மதி முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்றால், இவர்களுக்கு புரிய வைப்பதுடன் இறைவனது கோபத்திற்கு ஆளாகி விடாதீர்கள் என அச்சமூட்டுங்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய உருவத்தை உலகின் முன்னால் எடுத்து வையுங்கள். மேலும் உங்கள் ஆற்றல்மிக்க, வல்லமைமிக்க இறைவன் முன்னிலையில் குனியுங்கள். அவனிடம் உதவி கேளுங்கள். இந்த மக்கள் இறைதண்டனையின் பக்கம்தான் சென்று கொண்டிருக்கின்றார்களென்றால் தன்மீதும் தனக்குப் பிரியமானவர்களின் மீதும் தன்மான உணர்வுள்ள அந்த இறைவன் தனது கோபத்தின் தோற்றங்களுடன் தன்னை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவனாவான். எல்லா ஆற்றல்களின் எஜமானனும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு கட்டுப்படத் தேவையில்லாதவனும் எல்லாவற்றின்மீதும் ஆற்றல் படைத்தவனும் வல்லமைமிக்கவனுமாகிய அந்த இறைவனின் ஆட்டுரல் சுற்ற ஆரம்பித்து விட்டால் பிறகு மனிதன் அதுபற்றி சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. பிறகு அவனிடமிருந்து எவரும் தப்ப முடியாது.

எனவே, மேற்கில் உள்ள சில மக்கள் அல்லது சில நாடுகள் செய்கின்ற செயல்களைப் பார்க்கும் போது அஹ்மதிகள் இறைவன் முன்னிலையில் மேலும் அதிகமாக குனிய வேண்டும். இறைவனின் மஸீஹ் (இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம்) ஐரோப்பாவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்காவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகில் வந்து கொண்டிருக்கின்ற இந்த பூகம்பங்கள், இந்த புயல், இந்த ஆபத்துகள் ஆசியாவிற்கு மட்டும் உரியதல்ல. அமெரிக்காவும் இதன் ஒரு தோற்றத்தை பார்த்து விட்டது. எனவே, ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. எனவே, இறைவனுக்கு கொஞ்சமாவது அஞ்சுங்கள். மேலும் இறைவனது தன்மான உணர்வைத் தூண்டாதீர்கள். ஆனால் அத்துடன் முஸ்லிம் நாடுகளும், தங்களை முஸ்லிம் என்று கூறிக் கொள்பவர்களும் தங்களது நிலைமையை சரி செய்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான தகுதியையும் அழகையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையிலுள்ள எதிர்நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள

வேண்டும் என நான் கூறுகிறேன். இது தான் ஒரு நம்பிக்கையாளரின் சரியான எதிர்நடவடிக்கையாக இருக்க முடியும்.

(24 பிப்ரவரி 2006 ஆம் ஆண்டில் நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து
உஸ்வயே ரஸூல் அவ்ர் ஹாக்கோன் கி ஹகீகத் பக்கம் 25–27)

## முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பான இஸ்லாத்தின் அழகிய போதனை

கருத்து சுதந்திரம் மற்றும் மார்க்க சுதந்திரம் தொடர்பான இஸ்லாத்தின் அழகிய போதனைகள் என்ன? இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் இவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் இஸ்லாத்தின் இந்த அழகிய போதனை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதில் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல், அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல், அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்ளுதல், அவர்களின் மார்க்கத்தின் மீது எவ்வித பலவந்தமும் செய்யாதிருத்தல், மார்க்க விசயத்தில் எந்தவிதமான கடுமையும் காட்டாதிருத்தல் ஆகிய பல கட்டளைகள் முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி முஸ்லிமல்லாதவர்களுக்காக உள்ளன. ஆயினும் சில குறிப்பிட்ட சூழ்நிலையில் போர் செய்வதற்கும் அனுமதி இருக்கிறது. ஆனால் அது எதிரிகள் முதலில் உங்களிடம் போர் செய்யத் துவங்கினால் தான். உடன்படிக்கையை மீறினால் தான். நீதியை கொலை செய்தால் தான். அநீதியில் எல்லை தாண்டினாலோ அல்லது அநியாயம் செய்தால் தான். ஆனால் அப்போதும் எந்தவொரு நாட்டின் ஒரு கூட்டத்திற்கோ அல்லது ஜமாஅத்திற்கோ போர் செய்ய முடிவெடுப்பதற்கு உரிமையில்லை. மாறாக, என்ன செய்ய வேண்டும் எனவும் இந்த கொடுமையை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது என்றும் தீர்மானிக்க வேண்டிய உரிமை அரசாங்கத்திற்குத் தான் இருக்கிறது. அவ்வாறில்லாமல் ஒவ்வொரு ஜிஹாதிய இயக்கங்களும் எழுந்து இந்த வேலையை செய்ய ஆரம்பித்து விடக்கூடாது.



## மக்கத்து காஃபிர்களும் இஸ்லாத்தின் பகைவர்களும் இழைத்த கொடுமைகளுக்கு எதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய மகத்தான முன்மாதிரி

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்திலும், போருக்கான குறிப்பிட்ட சூழ்நிலைகள் (எதிரிகளால்) உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றால் கட்டாயத்திற்குள்ளாகி முஸ்லிம்கள் பதிலுக்குப் போர்கள் செய்ய வேண்டிதாயிற்று. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று, இன்று ஜிஹாதிய இயக்கங்கள் எவ்வித தகுந்த காரணங்களின்றி, தகுந்த அதிகாரம் இல்லாமல் தமது போர்க்கோசங்களாலும் தமது செயல்களாலும் மாற்று மதத்தினருக்கு ஆட்சேபணை செய்ய சந்தர்ப்பம் கொடுத்து விட்டார்கள். அதனால் அவர்களுக்கு எந்த அளவு தைரியம் வந்து விட்டது என்றால் அவர்கள் மிகவும் பிடிவாதத்துடன் வெட்கமில்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தத்தன்மையின் மீது முட்டாள்தனமான தாக்குதல்களை செய்தார்கள்; செய்து வருகின்றார்கள். ஆனால் கருணையின் உருவமாகத் திழந்த மனிதத்துவத்திற்கு நன்மைகள் செய்த, மனித உரிமைகளைப் பாதுகாத்த உத்தமரின் நிலை எப்படி இருந்ததென்றால் அவர்கள் போரின் நிலைமையிலும் எதிரிகளுக்கு வசதிகளைத் தேடித்தரும் எந்தவொரு சந்தர்ப்த்தையும் கைநழுவ விட்டதில்லை. அன்னார் கருணையின் வடிவமாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கு அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் சாட்சியாக இருக்கின்றன. கருணைக்காக அவர்களது உள்ளம் துடித்தது போல வேறு எவருடைய உள்ளமும் துடித்ததில்லை. பாதுகாப்பான சூழ்நிலையிலும், போரிலும், வீட்டிலும், வெளியிலும், அன்றாட வாழ்க்கை விவகாரங்களிலும் மற்ற மார்க்கத்தினர்களுடன் செய்த உடன்படிக்கைகளிலும் அவர்கள் கருத்து சுதந்திரம், மார்க்க சுதந்திரம், மார்க்க நல்லிணக்கம் ஆகியவற்றின் உயர் தகுதியை நிலைநாட்டுவதற்கான முன்மாதிரியை நிலைநாட்டிச் சென்றுள்ளார்கள். பிறகு மகத்தான வெற்றிவாகை சூடியவாறு மக்காவில் நுழையும் போது வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயத்தை மன்னித்து கருணை காட்டியது

மட்டுமல்லாமல் அவர்களுக்கு முழு மார்க்க சுதந்திரத்தையும் வழங்கினார்கள். மேலும் لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ மார்க்கத்தில் பலவந்தமில்லை (2:257) என்ற திருக்குர்ஆனின் கட்டளையின் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். மார்க்கம் என்பது உங்கள் உள்ளம் சம்பந்தப்பட்ட விவகாரமாகும். நீங்கள் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு, உலகத்தையும் மறுமையையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களின் மன்னிப்பிற்கான வழிவகையைத் தேடிக் கொள்ளுங்கள் என்பது தான் என் ஆசை. ஆனால் அதிலும் எந்த பலவந்தமும் இல்லை. இவ்வாறு மார்க்க சுதந்திரம், மதநல்லிணக்கம் தொடர்பான எண்ணற்ற உதாரணங்களால் அன்னாரின் வாழ்க்கை நிறைந்து காணப்படுகின்றது. அவற்றில் சிலவற்றை நான் கூறுகிறேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வாதத்திற்குப் பிறகு மக்காவில் வாழ்ந்த 13 ஆண்டுகால வாழ்க்கை எவ்வளவு கடுமையாகவும், துன்பத்திற்குரியதாகவும் இருந்தது என்பதை யார் அறியமாட்டார்? அன்னாரும் அவர்களுடைய தோழர்களும் எவ்வளவு துக்கங்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டார்கள். நண்பகலில் பாலைவனத்திலுள்ள சுடுமணலில் படுக்க வைக்கப்பட்டார்கள். நெஞ்சின் மீது கொதிக்கின்ற பாராங்கல் வைக்கப்பட்டது. சவுக்கால அடிக்கப்பட்டார்கள். பெண்களின் இரு கால்களையும் இரண்டாகக் கிழித்து அவர்கள் கொல்லப்பட்டனர். சஹீதாக்கப்பட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. சில நேரத்தில் ஒட்டகத்தின் குடல் அன்னார் சஜ்தாவில் இருக்கும் போது இடுப்பின் மீது வைக்கப்பட்டது. அதன் சுமையின் காரணமாக அவர்களால் எழ முடியாமல் இருந்தது. தாயிஃப் பயணத்தில் சிறுவர்கள் அன்னாரின் மீது கல்மாரி பொழிந்தனர். மிகவும் கடுமையான, மோசமான வார்த்தைகளை கூறி வந்தனர். நிராகரிப்பவர்களின் தலைவர்கள் சிறுவர்களை தூண்டிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவு காயமுற்றார்கள் என்றால் தலை முதல் பாதம் வரை இரத்தமாக இருந்தது. மேலிருந்து வடிந்து கொண்டிருந்த இரத்தம் காலணிக்கும் வந்துவிட்டது. அபூதாலிப் கணவாயில் நடந்த சம்பவம் என்னவென்றால் ஹஸ்ரத் நபி



(ஸல்) அவர்களும் அவர்களின் குடும்பத்தாரும், அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டவர்களும் பல ஆண்டுகளாக முற்றுகையிடப்பட்டனர். உண்பதற்கு, குடிப்பதற்கு எதுவும் இருந்ததில்லை. குழந்தைகளும் பசி, தாகத்தால் துடித்தனர். இந்த சூழ்நிலையில் ஒரு நபித்தோழர் இருட்டில் தரையில் மிருதுவான ஒரு பொருளை உணர்ந்தார். சாப்பிடக்கூடிய ஒரு பொருள் என நினைத்து அவர் அதை வாயில் போட்டு விட்டார். அந்த அளவுக்கு அவர்களுக்கு பசி கடுமையாக இருந்தது. இந்த அளவுக்கு மோசமான நிலை ஏற்பட்ட போது இதனால் கட்டாயத்திற்குள்ளாகி மக்காவை விட்டு இடம் பெயர்ந்து செல்ல நேர்ந்தது. ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்தனர். எதிரிகள் அங்கேயும் விட்டு வைக்கவில்லை. அங்கேயும் வந்து அவர்களை தாக்கினர். மதீனாவில் வாழ்ந்து வந்த யூதர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட முயற்சி செய்தனர்.

நான் சுருக்கமாக கூறிய இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த அளவுக்கு கொடுமை செய்த பிறகு போர் செய்யும் நிலை ஏற்பட்டு விட்டால் அநியாயத்திற்குள்ளானவர்களுக்கும் பதிலடி கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்து விட்டால் அந்த அநியாயத்திற்கு பதிலடியும் அநியாயத்தின் மூலமாகக் கொடுக்கத்தான் அவர்கள் முயற்சி செய்வார்கள். போரில் எல்லாம் ஆகுமானது என்று கூறுகிறார்கள். ஆனால் நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் போரிலும் மென்மையான உள்ளத்தையும், கருணையின் உயர்ந்த தகுதியையும் நிலைநாட்டியிருக்கின்றார்கள். மக்காவிலிருந்து வந்து கொஞ்ச காலம் தான் ஆனது. எல்லா காயங்களும் இன்னும் (ஆறாமல்) புதிதாகவே இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, தனக்கு ஏற்பட்ட துன்பங்களை விட தம் தேழர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றிய உணர்வு அதிகமாக இருந்தது. ஆயினும், அவர்கள் இஸ்லாமிய போதனையையும், சட்டங்களையும் வரைமுறைகளையும் முறிக்கவில்லை. அன்னாரின் இயல்பு மற்றும் போதனைகளின் ஒரு பகுதியாக இருந்த நல்லொழுக்கத்தை அவர்கள் கைவிடவில்லை. பாருங்கள். இன்று சில மேற்கத்திய நாடுகள் யாரிடம் போர் செய்கின்றார்களோ அவர்களுடன் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்! அதற்கு மாற்றமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய

முன்மாதிரியைப் பாருங்கள். வரலாற்றில் ரிவாயத்தில் அதுபற்றிய குறிப்பு இவ்வாறு காணப்படுகிறது.

“பத்ர் போரின் போது இஸ்லாமியப் படை எங்கு கூடாரமிட்டிருந்ததோ அது ஒரு நல்ல இடமாக இருக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், கூடாரமிடுவதற்காக தாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் இந்த இடம் இறையறிவிப்பின் அடிப்படையில் தேர்ந்தெடுத்ததா? தாங்களிடம் அல்லாஹ் கூறினானா? அல்லது தாங்கள் இந்த இடத்தை விரும்பினீர்களா? என்று கேட்டார். இராணுவ திட்டத்தின் அடிப்படையில் இது நல்ல இடம் என்று தாங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், போரின் உத்தியை அடிப்படையாகக் கொண்டு இது சிறந்த இடம், உயரமாக உள்ளது என்று நானாகத் தேர்ந்தெடுத்தது தான் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், அப்படியானால் இது பொருத்தமான இடமல்ல. நீங்கள் இங்கிருந்து மக்களை அழைத்துச் சென்று நீரூற்றை கைப்பற்றிக் கொள்ளுங்கள். அங்கு ஓர் நீர் தடாகத்தை தயார் செய்து விட்டு போர் செய்வோம் என்று கூறினார். ஏனெனில் இந்நிலையில் நாம் தண்ணீர் குடிக்கலாம்; எதிரிகளுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்காது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சரி. உமது கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். நாம் அங்கு செல்வோம் என்றார்கள். அதன்படி நபித்தோழர்கள் அங்கு சென்று கூடாரமிட்டனர். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு குரைஷிகளைச் சேர்ந்த சிலர் அந்த நீர்த்தடாகத்தில் நீர் அருந்துவதற்காக வந்தனர். நபித்தோழர்கள் அவர்களைத் தடுக்க முயற்சி செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தடுக்காதீர்கள். அவர்களை தண்ணீர் எடுக்க விடுங்கள் என்று கூறினார்கள்”.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லிஇப்னி ஹிசாம், தொகுதி 2, பக்கம் 284, கஸ்வா பத்ருல் குப்ரா மஷ்வரத்துல் ஹுபாப் அலர்ரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)



## இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரப்பப்படவில்லை. மாறாக, நல்லொழுக்கம், கருத்து சுதந்திரம், மார்க்க போதனை ஆகியவற்றால் பரவியது

இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த முன்மாதிரி! எதிரிகள் கொஞ்ச காலத்திற்கு முன்பு முஸ்லிம்களின் குழந்தைகளுக்கு கூட உணவையும் தண்ணீரையும் தடுத்து வைத்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் அந்த நீரூற்று இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை மன்னித்தவாறு தண்ணீருக்காக நீரூற்று வரை வந்த எதிரிகளின் படைவீரர்களை தண்ணீர் எடுப்பதிலிருந்து தடுக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு தண்ணீர் அருந்த விடாமல் தடுப்பது இஸ்லாத்தின் பார்வையில் மிகவும் ஒழுக்கத்திற்கு புறம்பான செயலாகும். இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரப்பப்பட்டது என்பது தான் இஸ்லாத்தின் மீது செய்யும் மிகப்பெரிய ஆட்சேபணையாகும். தண்ணீர் எடுக்க வந்த அந்த மக்களிடம் பலவந்தம் காட்டியிருக்கலாம். தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறியிருக்கலாம். இவ்வாறு காஃபிர்கள் பல போர்களில் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு பலவந்தம் செய்யவில்லை. அப்போது முஸ்லிம்களிடம் (எதிரிகளை எதிர்ப்பதற்கு) முழுமையான ஆற்றல் இருந்ததில்லை. பலவீனமானவர்களாக இருந்தார்கள். எனவே போரிலிருந்து தப்பிப்பதற்கான இந்த நன்மையைச் செய்ய முயற்சி செய்யப்பட்டுள்ளது என்று இங்கு யாராவது கூறலாம். ஆனால் அது தவறாகும். மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களின் இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கின்றனர் என்பதும் முஸ்லிம்களின் முகத்தை பார்த்தலே அவர்களின் கண்கள் சிவந்து விடும் என்பதும் முஸ்லிம்களின் ஒவ்வொரு குழந்தைக்கும் தெரிந்திருந்தது. எனவே அவர்களை மகிழ்விப்பதற்காக இது செய்யப்படவில்லை; அதுவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை மகிழ்விப்பதற்காக ஒரு செயலைச் செய்வார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்கள் முழுக்க முழுக்க

அருட்கொடையின் உருவமாகத் திகழ்ந்ததன் காரணமாகவும், மனிதர்களின் மதிப்பை கவனத்திற் கொண்டதன் காரணமாகவும் இவ்வாறு பரிவுடன் நடந்து கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் தான் இந்த மதிப்பை அடையாளம் கண்டு கொள்வது குறித்து போதிக்க வந்தார்கள்.

## நீதியுடன் நடந்து கொள்வதிலும் மற்றும் கருத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான சுதந்திரத்தை வழங்குவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தரம் ஈடிணையற்றதாகும்

அடுத்து இஸ்லாத்தின் எதிரியின் சம்பவத்தைப் பாருங்கள். அவரை கொல்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தது மட்டுமல்லாமல் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு அவர் தனது மார்க்கத்தில் நிலைபெற்றிருப்பதற்கு அனுமதி வழங்கினார்கள். அந்த சம்பவம் இவ்வாறு வருகிறது.

அபூஜஹிலின் மகன் இக்ரிமா தன் தந்தையைப் போன்று வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் செய்து வந்தார். மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரையும் மன்னித்து விட்டதாகவும், பாதுகாப்பு அளிப்பதாகவும் அறிவித்த போதிலும் இக்ரிமா ஒரு படைப் பிரிவினை தாக்கினார். மேலும், புனிதத்தலத்தில் இரத்தம் சிந்துவதற்கு காரணமானார். அவர் தனது போர் செய்த குற்றத்திற்காகத்தான் கொலைத் தண்டனைக்கு உரியவராக அறிவிக்கப்பட்டார். ஆனால் (மக்காவின் வெற்றியாகிய) முஸ்லிம்களுக்கு முன்னால் அப்போது எவராலும் நிற்க முடியவில்லை. எனவே மக்கா வெற்றிக்குப் பிறகு தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் யமனை நோக்கி ஓடினார். அவருடைய மனைவி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தன் கணவருக்காக மன்னிப்பை வேண்டினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் பரிவுகாட்டியவாறு இக்ரிமாவை மன்னித்து விட்டார்கள். அவர் தனது



கணவரை அழைத்து வரச் சென்ற போது இக்ரிமாவுக்கு அந்த மன்னிப்பின் மீது நம்பிக்கையே வரவில்லை. நான் இவ்வளவு கொடுமைகள் செய்திருக்கின்றேன். இத்தனை முஸ்லிம்களை கொன்று விட்டேன். கடைசி நாள் வரை நான் போர் செய்து கொண்டிருந்தேன். என்னை எப்படி மன்னித்திருப்பார்கள் என அவர் எண்ணினார். எப்படியிருந்த போதிலும் இக்ரிமாவின் மனைவி அவருக்கு நம்பிக்கையூட்டி அவரை திரும்ப அழைத்து வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவைக்கு வந்து தன்னை மன்னித்தது உண்மைதானா என்று விசாரிக்க விரும்பினார். இக்ரிமா திரும்பி வந்ததனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவருடன் வியக்கத்தக்க முறையில் கருணையுடன் நன்றாக நடந்து கொண்டார்கள். இக்ரிமா எதிரி சமுதாயத்தின் தலைவர். எனவே இவருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்ற முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் கண்ணியத்திற்காக எழுந்து நின்றார்கள். இக்ரிமா கேட்டதற்கு, ஆம். நான் உண்மையிலேயே உம்மை மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள். (முஅத்தா இமாம் மாலிக் – கிதாபுன் நிக்காஹ் – நிகாஹுல் முஷ்ரிகி இஸா அஸ்லமத் ஸவ்ஜதுஹூ கப்லஹூ)

நான் என் மார்க்கத்தையே கடைபிடித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் தாங்கள் என்னை மன்னிப்பீர்களா? என்று இக்ரிமா கேட்டார். அதாவது நான் முஸ்லிமாக மாறவில்லை. இந்த ஷிர்க்கின் நிலையில் இருக்கும் போதும் நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். அப்போது இஸ்லாத்திற்காக இக்ரிமாவின் மனம் திறந்தது. தன்னையுமறியாமல், முஹம்மதே! நிச்சயமாக தாங்கள் எல்லையற்ற சகிப்புத்தன்மை கொண்டவரும், கண்ணியத்திற்குரியவரும், உறவுகளைப் பேணுபவரும் ஆவீர்கள் என்று கூறினார். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கருணையின் இந்த அற்புதத்தையும் கண்டு இக்ரிமா முஸ்லிமாகி விட்டார். (அஸ்ஸீரதுல் ஹல்பியா – தொகுதி 3, பக்கம் 109, ஸிக்ரு மகாஸிய்யத்தி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஃபத்ஹு மக்கா சர்ஃபுஹல்லாஹூ தஆலா பைரூத் வெளியீடு)

இவ்வாறு நல்லொழுக்கத்தினாலும், கருத்து சுதந்திரம் மற்றும் மார்க்க சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்த அனுமதி வழங்கியதனாலும் தான் இஸ்லாம் பரவியது. இந்த நல்லொழுக்கம் மார்க்க சுதந்திரம் என்ற அம்புதான் ஒரு வினாடியில் இக்ரிமா போன்றவர்களையும் வீழ்த்தி விட்டது. கைதிகளுக்கும் அடிமைகளுக்கும் அவர்கள் எந்த மார்க்கத்தை விரும்புகிறார்களோ மேற்கொள்ளட்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். ஆனால் இஸ்லாத்தை ஏன் பிரச்சாரம் செய்தார்கள் என்றால் இஸ்லாத்தின் போதனையைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பீராக. ஏனெனில் அவர்களுக்கு அது தெரியாது என்று அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். இஸ்லாம் உங்களுக்கு இறை நெருக்கத்தைத் தேடித்தரும் என்ற ஆசையினால் தான் உங்களுக்குக் கூறுகிறோம். உங்கள்மீதுள்ள அனுதாபத்தினால் நாங்கள் இஸ்லாத்தை உங்களுக்கு போதிக்கின்றோம்.

ஒரு கைதியைப் பற்றி இவ்வாறு சம்பவம் வருகிறது. ஹஸ்ரத் சயீத் பின் அபீ ஸயீத் அறிவிக்கின்றார்கள். அவர் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நஜத்தை நோக்கி ஒரு குழுவை அனுப்பினார்கள். அவர்கள் பனூ ஹனீஃபாவைச் சேர்ந்த ஒருவரை கைதியாக்கிக் கொண்டு வந்தனர். அவர் பெயர் ஸுமாமா பின் அஸால் ஆகும். நபித்தோழர்கள் அந்தக் கைதியை மஸ்ஜிதே நபவியின் தூணில் கட்டி விட்டனர். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவரிடம் வந்து ஸுமாமாவே! உம்மிடம் என்ன காரணம் இருக்கிறது? அல்லது உம்முடன் எப்படி நடந்து கொள்ளப்படும் என்று நினைக்கிறீர் எனக் கேட்டார்கள். அதற்கு அவர், நான் நல்லதையே நினைக்கிறேன். தாங்கள் என்னை கொன்று விட்டால் இரத்தம் சிந்தத்தக்கூடிய (கொலை செய்யக்கூடிய) ஒருவரை கொலை செய்வீர்கள். தாங்கள் எனக்கு நன்மை செய்தால், நன்மைக்கு மதிப்பளிக்கும் ஒருவருக்கு தாங்கள் நன்மை செய்வீர்கள். மேலும் தாங்கள் செல்வத்தை விரும்புகின்றீர்கள் என்றால் எவ்வளவு விரும்புகிறீர்களோ எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். அவருக்காக அவருடைய சமுதாயத்தின் சார்பாக



அவ்வளவு செல்வம் கொடுக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. மறுநாளும் வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் வந்து, உமது நாட்டம் என்ன? என்று ஸுமாமாவிடம் கேட்டார்கள். அதற்கு ஸுமாமா, நான் நேற்றே தங்களிடம் கூறி விட்டேன். தாங்கள் நன்மை செய்தால், நன்மைக்கு மதிப்பளிக்கும் ஒருவருக்கு தாங்கள் நன்மை செய்வீர்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை அங்கேயே விட்டு விட்டார்கள். பிறகு மூன்றாவது நாள் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் சென்று, ஸுமாமாவே! உமது நாட்டம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் கூறவிருந்ததைக் கூறிவிட்டேன் என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவரை விடுவித்து விடுங்கள் என்றார்கள். ஸுமாமா விடுதலை செய்யப்பட்டார். அப்போது அவர் மஸ்ஜித் நபவியின் அருகில் இருந்த பேரீத்தம் பழ தோட்டத்திற்கு சென்றார். குளித்தார். பள்ளிவாயிலில் நுழைந்து சஹாதத் கலிமாவை ஓதினார். மேலும் முஹம்மதே! (ஸல்). இறைவன் மீது ஆணையாக! உலகத்திலேயே எனக்கு மிகவும் வெறுக்கத்தக்க முகம் உங்களுடைய முகமாக இருந்தது. ஆனால் இப்போது எனக்கு எல்லாவற்றையும் விட மிகவும் பிடித்தமான முகம் உங்களுடைய முகம் தான். மேலும் இறைவன் மீது ஆணையாக! உலகத்தில் நான் மிகவும் வெறுத்த மார்க்கம் உங்களுடைய மார்க்கமாகவே இருந்தது. ஆனால் இன்று எனக்கு மிகவும் பிடித்தமான மார்க்கம் தாங்கள் கொண்டு வந்த மார்க்கமாகும். இறைவன் மீது ஆணையாக! எல்லா நகரங்களையும்விட மிகவும் வெறுப்பிற்குரியதாக இருந்தது உங்கள் நகரம் தான். ஆனால் இப்போது இதுவே எனக்கு மிகவும் பிடித்தமான நகரமாகும் என்றார். நான் உம்ரா செய்ய விரும்பிய போது தங்களின் குதிரை வீரர்கள் என்னைப் பிடித்து விட்டனர். அதுபற்றி தாங்கள் என்ன கட்டளையிடுகின்றீர்கள் எனக் கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் முஸ்லிமாக மாறியதற்கு நற்செய்திகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து உம்ரா செய்யவும் அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக என்று துஆ செய்தார்கள். அவர் மக்கா சென்ற போது ஒருவர் அவரைப் பார்த்து, நீர் சாபியாகி விட்டீரா? என்றார். அதற்கு அவர், இல்லை. நான்

சாபியாகவில்லை. நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன் என்றார். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனுமதி தராத வரை இனி யமாமாவிலிருந்து ஒரு தானியம் கூட உங்களிடம் வராது என்று கூறினார்.

(புகாரி – கிதாபுல் மகாஸி – வஃபது பனீ ஹனீஃபா எனும் பாடம், மேலும் ஸுமாமா பின் அஸால் அவர்களின் ஹதீஸ்)

இன்னொரு ரிவாயத்தின்படி, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் உம்ரா செய்ய முயன்றார். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிந்த மக்கத்து காஃபிர்கள் அவரை அடிக்க முயற்சி செய்தனர் அல்லது அடித்தனர். அப்போது அவர் இனி யமாமாவிலிருந்து ஒரு தானியம் கூட உங்களிடம் வராது என்று கூறினார். அதுவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சார்பாக அனுமதி வராத வரை உங்களுக்கு வராது என்று கூறினார். அதன்படி அவர் தனது சமுதாயத்திடம் சென்று பேசினார். அங்கிருந்து தானியம் வருவது நின்றுவிட்டது. (மக்களின்) நிலை மிகவும் மோசமாகி விட்டது. அப்போது அபூஸுஃப்யான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று மக்கள் இவ்வாறு பசியால் மரணிக்கின்றார்கள். உங்கள் சமுதாயத்தின் மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள் என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தானியம் கிடைக்க வேண்டுமென்றால் முஸ்லிமாக மாறுங்கள் என்று கூறவில்லை. மாறாக, இந்தத் தடையை நீக்கி விடுங்கள். இது அநியாயமாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுமாமாவுக்கு உடனே செய்தி அறிவித்தார்கள். மேலும், குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு, நோயாளிகளுக்கு, முதியவர்களுக்கு உணவு தேவைப்படுகிறது. அது அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றார்கள். (அஸ்ஸீரத்துந் நபவிய்யா லிஇப்னி ஹிசாம் அஸிர்ரு ஸுமாமதிப்னி அஸாலில் ஹனஃபிய்யி வ இஸ்லாமிஹீ. குரூஜஹு இல்ல மக்கத்தி வகிஸ்ஸதிஹீ மஅ குரைஷ்)

ஆக, இந்தக் கைதி ஸுமாமாவிடமும், நீர் இப்போது எங்களிடம் சிக்கிக் கொண்டீர். இனி நீர் முஸ்லிமாகிவிடும் என்று கூறவில்லை. மூன்று நாட்களாக அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்பட்டது. பிறகு நல்ல



முறையில் நடந்து கொள்வதிலும் உன்னத தகுதியை நிலைநாட்டியவாறு அவரை விடுதலை செய்து விட்டார்கள். பிறகு பாருங்கள். ஹஸ்ரத் ஸுமாமா அவர்களும் அகப்பார்வை கொண்டவராக விளங்கினார்கள். அந்த விடுதலையை பெற்றதுமே ஹஸ்ரத் நபி (ஸல) அவர்களின் அடிமைத்தனத்தில் தன்னை பிணைத்துக் கொள்ள தயாராகி விட்டார்கள். ஏனெனில் அவர்களின் அடிமைத்தனத்தில் தான் தனது இம்மை மறுமையின் நன்மை இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்.

பிறகு யூத அடிமையை, நீர் அடிமையாவாய். என் கட்டுப்பாட்டில் இருக்கிறாய். எனவே நான் சொன்னதைச் செய் என்று கட்டாயப்படுத்தவில்லை. அந்த யூத அடிமை நோய்வாய்ப்பட்ட போது அவனுடைய நிலை மிக மோசமாக இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த யூத சிறுவனின் முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்ற கவலை ஏற்பட்டது. இறைவனின் கடைசி சரீஅத்தை ஏற்காத நிலையில் அச்சிறுவன் உலகத்தை விட்டுச் சென்று விடக்கூடாது. மாறாக அதை ஏற்றுக் கொண்ட நிலையில் அவன் உலகத்தை விட்டுச் சென்று விட வேண்டும்; இதன் மூலமாக இறைவன் மன்னித்தருள்வதற்கான வழிவகைகள் ஏற்பட வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. எனவே, நலம் விசாரிக்க சென்ற போது மிகவும் அன்போடு அச்சிறுவனை நோக்கி, நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ‘‘ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு பணியாளர் யூத சிறுவன் நோயுற்றான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனை நலம் விசாரிக்கச் சென்றார்கள். அவனுடைய தலையணை பக்கம் அமர்ந்தார்கள். அவனிடம் நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார்கள். இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. அவன் தனது பெரியோர்களைப் பார்த்தான். எவ்வாறாயினும் அனுமதி கிடைத்ததும் அல்லது தனக்கே தோன்றியதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டான். (ஸஹீஹ் புகாரி – கிதாபுல் ஜனாயிஸ் பாபு இஸா அஸ்லமஸ் ஸபிய்யு ஃபமாத...... ஹதீஸ் எண் : 1356)

ஆக இந்தச் சிறுவன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவன் மீது காட்டிய பரிவினால் ஆகும். அன்னாரது அடிமைத்தனத்தில் அச்சிறுவனுக்கு கிடைத்த சுதந்திரத்தின் விளைவினால் ஆகும். எனவே தான் அவன், நிச்சயமாக இது உண்மையான மார்க்கமாகும். இதை ஏற்றுக் கொள்வதில் கண்டிப்பாக நமக்கு லாபம் தான் என்பதை உணர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஏனெனில் கருணையின் வடிவாகத் திகழும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்குத் தீயதை நாடமாட்டார்கள். அவர்கள் நிச்சயமாக உண்மையாளராவார்கள். அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களை நல்ல விசயங்களின் பக்கம், நல்ல செயல்களின் பக்கம் அழைப்பவர்கள் ஆவார்கள். மேலும் இதனையே வலியுறுத்தி வந்தார்கள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஆக இந்த சுதந்திரத்தைத் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள். உலகத்தில் இதற்கு வேறு எந்த உதாரணத்தையும் ஒருபோதும் காணவியலாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதத்திற்கு முன்னும் மார்க்க சுதந்திரம், கருத்து சுதந்திரம், வாழ்க்கை சுதந்திரத்தை விரும்பினார்கள். அடிமைத்தனத்தை வெறுத்தார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை திருமணம் செய்து கொண்ட பிறகு தமது எல்லா செல்வங்களையும், அடிமைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், கதீஜாவிடம் நீங்கள் இவை எல்லாவற்றையும் கொடுக்கின்றீர்கள் என்றால் அவை எனது அதிகாரத்தின் கீழ் வந்துவிடும். பிறகு நான் என்ன விரும்புகின்றேனோ அதை செய்வேன் என்றார்கள். அதற்காகத்தான் கொடுக்கிறேன் என்று கதீஜா (ரலி) கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு நான் எல்லா அடிமைகளையும் விடுதலை செய்து விடுகிவேன். அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் தங்களுக்குக் கொடுத்து விட்டேன். இனி நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். அதன் மீது எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. அது உங்கள் செல்வமாகும் எனக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்



கதீஜாவின் எல்லா அடிமைகளையும் அழைத்து இன்றிலிருந்து உங்கள் அனைவருக்கும் விடுதலை எனக் கூறினார்கள். மேலும் செல்வங்களின் பெரும் பகுதியையும் ஏழைகளுக்கு விநியோகம் செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விடுதலை செய்த அடிமைகளில் ஒருவர் ஸய்த் என்பவரும் ஆவார். அவர் மற்ற அடிமைகளை விட சாதுரியமானவராகவும் புத்தி கூர்மை உள்ளவராகவும் இருந்தார் எனத் தெரிகிறது. அவர், எனக்கு இப்பொழுது விடுதலை கிடைத்து விட்டது. அடிமைத்தனம் என்ற முத்திரை இப்பொழுது நீங்கி விட்டது. ஆனால் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எப்பொழுதும் அடிமையாக வாழ்வதே எனக்கு சிறப்பு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். எனவே ஸய்த் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், தாங்கள் என்னை விடுதலை செய்து விட்டீர்கள். ஆனால் நான் விடுதலையாக விரும்பவில்லை. நான் அடிமையாக உங்களுடனேயே இருப்பேன் என்றார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடனேயே இருந்தார். அன்பு மற்றும் நேசத்தின் இந்த உறவு இரண்டு புறமிருந்தும் வளர்ந்து கொண்டே சென்றது. உண்மையில் ஸய்த் என்பவர் செல்வம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார். செல்வச் செழிப்பான வீட்டில் பிறந்திருந்தார். வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவரைக் கடத்திச் சென்று அடிமையாக விற்று விட்டனர். அவர் தொடர்ச்சியாக விற்கப்பட்டு இங்கு வந்தடைந்தார். அவருடைய பெற்றோர்களும், உறவினர்களும், அன்பர்களும் அவரை தேடி அலைந்தனர். இறுதியில் இவர் மக்காவில் இருப்பதை அறிந்து மக்காவுக்கு வந்தனர். ஹஸ்ரத் ஸய்த் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருப்பதை அறிந்து அன்னாரது சபைக்கு வந்தனர். எங்கள் மகனை விடுதலை செய்து விடுங்கள். அதற்குப் பதிலாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். அவருடைய தாயார் மகனைக் காணாமல் அழுது கொண்டிருக்கிறாள். அவளுடைய நிலை மோசமாக இருக்கிறது என்றனர். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் அவரை ஏற்கனவே விடுதலை செய்து விட்டேன். அவர் சுதந்திரமானவர் ஆவார். அவர் செல்ல விரும்புகிறார் என்றால் செல்லலாம். எனக்கு எவ்வித பணமும் தேவையில்லை என்று கூறினார்கள். வந்திருந்தவர்கள் ஸய்திடம், மகனே!

எங்களுடன் வா என்றனர். அதற்கு மகன் சொன்னான்: நான் உங்களை சந்தித்து விட்டேன். அதுவே போதுமானது. சந்தர்ப்பம் கிடைத்தால் தாயையும் சந்திக்கலாம். ஆனால் இப்போது நான் உங்களுடன் வர இயலாது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமையாகி விட்டேன். அன்னாரை விட்டு என்னால் இனி பிரிந்திருக்கவே முடியாது. தாய் தந்தையை விட அதிகமான நேசம் எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருக்கின்றது என்றார். ஸய்தின் தந்தையும், சிறிய தந்தையும் அழுத்தமாக கூறிப் பார்த்தனர். ஆனால் ஸய்த் செல்ல மறுத்து விட்டார். ஸய்தின் இந்த நேசத்தைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஸய்த் ஏற்கனவே விடுதலையாக்கப்பட்டு விட்டார். ஆனால் இன்றிலிருந்து அவர் என் மகன் ஆவார் என்று கூறினார்கள். இந்த நிலையைக் கண்ட ஸய்தின் தந்தையும் சிறிய தந்தையும் அங்கிருந்து தனது ஊருக்கு திரும்பி விட்டனர். பிறகு ஸய்த் நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டார்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூலிலிருந்து பக்கம் 112)

நுபுவ்வத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுதந்திரம் பற்றிய உணர்வுகள் மேலும் பொலிவடைந்தன. அன்னாரின் இயல்பும் அவ்வாறே இருந்தது. அன்னாரின்மீது இறங்கிய சரீஅத்திலும் இந்த கட்டளைதான் இருந்தது. அதாவது அடிமைகளுக்கு அவர்களுடைய உரிமைகளைக் கொடுங்கள். கொடுக்க முடியாவிட்டால் அவர்களை விடுதலை செய்து விடுங்கள்.

ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஒரு நபித்தோழர் தன் அடிமையை அடித்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். அதனால் அந்த நபித்தோழர் அடிமையை விடுதலை செய்து விட்டார். நான் அவரை விடுதலை செய்து விடுகிறேன் என்றார். நீர் விடுதலை செய்யாவிட்டால் நீர் அல்லாஹ்வின் பிடியின்கீழ் வந்து விடுவீர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் – கிதாபுல் ஈமான், ஸுஹ்பதுல் மமாலீக் எனும் பாடம், ஹதீஸ் எண் 4308)



பாருங்கள்! இதுதான் விடுதலை பற்றிய இஸ்லாமிய போதனை. மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமைக்கும் கருத்து சுதந்திரத்திற்கும் ஓர் உதாரணம் பாருங்கள். மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுவிட்ட பிறகு கருத்து சுதந்திரத்திற்கான முன்னுதாரணங்கள் காணக் கிடைக்கின்றன.

ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இரண்டு பேர் ஒருவரையொருவர் ஏச ஆரம்பித்தனர். ஒருவர் முஸ்லிம், இன்னொருவர் யூதர். எல்லா உலகங்களிலும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு சிறப்பினை வழங்கி அன்னாரை தேர்ந்தெடுத்த இறைவன் மீது ஆணையாக! என்று முஸ்லிம் கூறினார். அப்போது யூதர், மூஸாவுக்கு எல்லா உலகங்களை விடவும் சிறப்பினை வழங்கிய இறைவன் மீது ஆணையாக! என்று கூறினார். இதைக் கேட்ட முஸ்லிம் யூதரை அடித்து விட்டார். அந்த யூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து முறையிட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிமிடம் விபரம் கேட்டார்கள். பிறகு, லா துகய்யரூனீ அலா மூஸா – மூஸாவை விட எனக்கு சிறப்பினை வழங்காதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி – கிதாபுல் குஸூமாத், மா யஸ்குரு ஃபில் அஷ்காஸி வல் குஸூமதி பய்னல் முஸ்லிமி வல் யஹூதி என்ற பாடம்)

ஆக, இதுதான் மத நல்லிணக்கம், கருத்து சுதந்திரம் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த நிலை! மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு மதீனாவிலுள்ள கோத்திரங்களிடமும் யூதர்களிடமும் சாந்தி சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஓர் உடன்படிக்கை செய்தார்கள். அதன்படி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த காரணத்தால் அல்லது முஸ்லிம்களாக மாறாவிட்டாலும் முஸ்லிம்களுடன் பலர் இணைந்திருந்த காரணத்தினால் ஆட்சி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் இருந்தது. ஆனால் அதற்காக, அந்த ஆட்சியின் பொருள். அந்த ஆட்சியின் கீழ் உள்ள மற்ற மக்களின்

உணர்வுகளை பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா இறை தூதர்களை விடவும் சிறப்பானவர்கள் என்று திருக்குர்ஆனில் சாட்சி இருந்த போதிலும் நபிமார்களைப் போட்டியாகப் பார்ப்பதன் காரணமாக அமைதியான சூழ்நிலையை கெடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த யூதரின் விசயத்தைக் கேட்டு முஸ்லிமைத்தான் கண்டித்தார்கள். நீங்கள் உங்கள் சண்டைக்கு மத்தியில் நபிமார்களைக் கொண்டு வராதீர்கள். உங்கள் கொள்கைப்படி நான் எல்லா நபிமார்களையும் விட சிறந்தவன் என்பது உண்மைதான். அல்லாஹ்வும் அதற்கு சாட்சி பகர்ந்து விட்டான். ஆனால் நமது ஆட்சியின் கீழ் உள்ள ஒருவருக்கு, தான் ஏற்றுக் கொள்ளும் ஒரு நபியை ஒருவர் ஏதோ சொல்லி விட்டார் என்பதற்காக மனவருத்தம் ஏற்படக் கூடாது; அதற்கு நான் அனுமதியளிக்க மாட்டேன். என்னை கண்ணியப்படுத்துவதற்கு மற்ற நபிமார்களையும் கண்ணியப்படுத்த வேண்டியது வரும்.

ஆக, இதுதான் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு மத்தியிலும் மற்றவர்களுக்கு மத்தியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நீதி மற்றும் கருத்து சுதந்திரமாகும். இன்னும் சொல்லப்போனால் சில சமயங்களில் மற்றவர்களின் உணர்வுகளுக்கு அதிகம் மதிப்பளிக்கப்பட்டது.

## மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய ஈடிணையற்ற செயல் முன்மாதிரி

பிறகு மனித உரிமை மற்றும் மதநல்லிணக்கத்தை நிலைநாட்டியதற்கு இன்னோர் உதாரணத்தைப் பாருங்கள். ரிவாயத்தில் வருகிறது. அப்துர் ரஹ்மான் பின் அபீலைலா அறிவிக்கின்றார்கள்: ஸஹல் பின் ஹனீஃப், கைய்ஸ் பின் ஸஅத் ஆகியோர் காதிசியா எனும் இடத்தில் உட்கார்ந்திருந்தனர். ஒரு ஜனாஸா அவர்களைக் கடந்து சென்றது. அப்போது அவர்கள் இருவரும் எழுந்து நின்றனர். இவர் ஸிம்மிகளைச்



சேர்ந்தவர் என்று அவர்களிடம் கூறப்பட்ட போது அவ்விருவரும் கூறினர். ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கடந்து ஒரு ஜனாஸா சென்றது. அப்போது அன்னார் மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். இது ஒரு யூதருடைய ஜனாஸாதானே என்று அன்னாரிடம் கூறப்பட்ட போது, அலைஸத் நஃப்ஸா – அவர் மனிதர் இல்லையா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். (சஹீஹ் புகாரி – கிதாபுல் ஜனாயிஸ் – மன் காம லிஜனாஸதி யஹுதிய்யி என்ற பாடம்)

ஆக, இதுதான் மற்ற மார்க்கத்திற்கும் மனித நேயத்திற்கும் அவர்கள் கொடுத்த கண்ணியம்! மேலும் இந்த முன்மாதிரிகளினால் தான் மத நல்லிணக்கத்திற்கான சூழ்நிலை உருவாக முடியும். இவ்வாறு வெளிப்படுத்துவதனால் தான் ஒருவருக்கொருவர் மென்மையான உணர்வுகள் உருவாகின்றன. இந்த உணர்வுகளினால் தான் அன்பு, நேசம், அமைதி என்ற சூழ்நிலை உருவாகின்றது. மற்றபடி இன்றைய காலத்தில் உலகவாதிகளின் செயல்களினால் வெறுப்புகளின் சூழ்நிலை தான் வளரும்.

இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. கைபர் வெற்றியின் போது தவ்ராத்தின் சில பிரதிகள் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன. யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, எங்களுடைய புனித வேதநூலை எங்களிடம் கொடுத்து விடுங்கள் என்று கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், யூதர்களின் வேதநூலை அவர்களுக்கு திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்றார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா – ஸிக்ரு மகாஸியா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். கஸது கைபர் என்ற பாடம், தொகுதி 3 பக்கம் 49)

யூதர்களின் தவறான போக்கின் காரணமாக அவர்களுக்கு தண்டனை கிடைத்துக் கொண்டிருந்தது என்றாலும் எதிரிகளிடம் கூட அவர்களின் மார்க்க உணர்வுகளை புண்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்ற கொள்கையுடையவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளங்கினார்கள்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலுள்ள யூதர்களுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கை

தனிப்பட்ட நபர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறினேன். மதீனாவில் ஓர் உடன்படிக்கை நடந்தது என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல நிபந்தனைகளை வகுத்தார்கள். ரிவாயத்தில் வருவதை நான் எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சூழ்நிலையில் எவ்வாறு மதநல்லிணக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்தார்கள் என்பது தெரிகின்றது. சமூகத்தில் அமைதியும் நிலைபெற வேண்டும். மனிதத்துவத்தின் மேன்மையும் நிலைபெற வேண்டும் என்பதற்காக அவர்கள் என்ன விரும்பினார்கள்? மதீனா சென்ற பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுடன் செய்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் இவையாகும்:

1. முஸ்லிம்களும் யூதர்களும் ஒருவருக்கொருவர் அனுதாபத்துடனும், கபடமற்ற நிலையிலும் இருப்பார்கள். ஒருவர் மற்றவருக்கெதிராக அநீதியோ வரம்பு மீறுதலோ செய்ய மாட்டார்கள்.

   (யூதர்கள் இந்த உடன்படிக்கையை எப்போதும் முறித்துக் கொண்டேயிருந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்மையையே செய்து வந்தார்கள். யூதர்கள் வரம்புமீறி விட்ட பிறகு கட்டாயத்திற்குள்ளாகி அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.)

2. இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், ஒவ்வொருவருக்கும் மார்க்க சுதந்திரம் உண்டு என்பதாகும்.

   (முஸ்லிம்கள் மதீனாவில் பெரும்பான்மையாக இருந்தாலும் நீங்கள் உங்கள் மார்க்கத்தில் சுதந்திரமானவர்களாக இருக்கலாம்.)

3. மூன்றவாது நிபந்தனை என்னவென்றால், குடிமக்கள் அனைவரின் உயிர்களும் உடைமைகளும் பாதுகாப்பாக இருக்கும். ஒருவர் குற்றம்



செய்தால் அல்லது அநியாயம் செய்தாலேயன்றி அவற்றை மதித்து நடக்க வேண்டும்.

   (இப்போது இதிலும் எந்த பாகுபாடு கிடையாது. குற்றம் செய்பவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லது யூதராக இருந்தாலும் அவருக்கு கண்டிப்பாக தண்டனை கிடைக்கும். மற்றபடி, பாதுகாப்பது அனைவரின் ஒட்டுமொத்தமான கடமையாகும். ஆட்சியின் கடமையாகும்.)

4. இன்னொரு நிபந்தனை என்னவென்றால், எல்லா கருத்து வேறுபாடுகளும், சண்டைகளும் தீர்ப்புக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்து வைக்கப்படும். மேலும் எல்லா தீர்ப்பும் இறைகட்டளைக்கு ஏற்ப இருக்கும்.

   (இறை கட்டளைக்கேற்ப என்பதன் பொருள், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அதனுடைய சரீஅத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கப்படும். தீர்ப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் கொடுப்பார்கள். ஏனென்றால் அப்போது உயர் அதிகாரி அன்னார் தான். எனவே அன்னார் தான் தீர்ப்பு கொடுக்கக்கூடியர்களாக இருந்தார்கள். ஆனால் மக்கள் எந்த மார்க்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்களோ அதன் சரீஅத்தின் படியே அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். சில யூதர்களுக்கு அவர்கள் ஏற்றுக் கொண்ட தவ்ராத்தின் அடிப்படையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அதனை இன்றைய கிறிஸ்தவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர்; அநியாயம் செய்யப்பட்டு விட்டது என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அந்த யூதர்கள் கூறியபடியே அவர்களின் மார்க்க சட்டத்திற்கேற்ப தீர்ப்புகள் வழங்கப்பட்டன.)

5. அடுத்த நிபந்தனை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி இல்லாமல் எந்த பிரிவும் போருக்காக வெளியேற கூடாது. ஏனென்றால் ஓர் ஆட்சியின் கீழ் வாழும் போது அதற்குக் கட்டுப்பட்டிருப்பது அவசியமானதாகும்.

   (இந்த நிபந்தனை இன்றைய காலத்தில் ஜிஹாதிய இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டலாக இருக்கின்றது. எந்த

ஆட்சியின் கீழ் இருக்கின்றார்களோ அதனுடைய அனுமதி இல்லாமல், எந்தவிதமான ஜிஹாது செய்யவும் அனுமதியில்லை. ஆனால் அதனுடைய இராணுவத்தில் சேர்ந்து அந்த நாடோ அல்லது அரசாங்கமோ சண்டையிட்டாலேயொழிய ஜிஹாது ஆகுமானதல்ல.)

6. அடுத்த நிபந்தனை என்னவென்றால், யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக ஒரு சமுதாயம் போர் செய்தால் அவ்விருவரும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வார்கள்.

(அதாவது இரு சமுதாயத்தில் எந்த சமுதாயத்துடன் போர் நடந்தாலும் இவ்விரு சமுதாயங்களும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்ய வேண்டும். மேலும் எதிரியுடன் சமாதானம் செய்து கொள்ளும் நிலை வரும் போது அதனால் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் இருவருக்கும் ஏதேனும் இலாபமோ, பயனோ கிடைக்கும் என்றால் அந்த இலாபத்தை இருவரும் சரி பாதியாக பங்கிட்டு கொள்ள வேண்டும்.)

அவ்வாறே எவராவது மதீனாவை தாக்கினால் எல்லாரும் சேர்ந்து அவரை எதிர்க்க வேண்டும்.

7. அடுத்த நிபந்தனை என்னவென்றால், மக்கத்து குரைஷிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களுக்கும் யூதர்களின் சார்பாக எந்தவிதமான உதவியும் அடைக்கலமும் கொடுக்கக் கூடாது.

(ஏனெனில் மக்கத்து குரைஷிகள் தான் முஸ்லிம்களை மக்காவிலிருந்து வெளியேற்றினர். பிறகு முஸ்லிம்கள் மதீனாவில் வந்து தஞ்சம் புகுந்தனர். எனவே இனி முஸ்லிம்களின் ஆட்சியில் வாழ்பவர்கள் அந்த எதிரி சமுதாயத்துடன் எந்த உடன்படிக்கையும் செய்யக்கூடாது; எந்த உதவியும் வாங்கக் கூடாது.)

ஒவ்வொரு சமுதாயமும் தனது செலவுகளை தானே ஏற்றுக் கொள்ளும். (அதாவது தத்தமது செலவுகளை தாமே பார்த்துக் கொள்ளும்.)

இந்த உடன்படிக்கையினால் எந்த அநியாயக்காரரும், குழப்பவாதியும் தண்டிக்கப்படுவதிலிருந்தோ பழிவாங்கப்படுவதிலிருந்தோ தப்பித்திருக்க மாட்டார்.



(அதாவது, முன்னரே கூறப்பட்டது போன்று, எவர் அநியாயம் செய்தாலும், குற்றமிழைத்தாலும், தவறு செய்தாலும் அவர் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்; பிடிக்கப்படுவார். அவர் முஸ்லிமாக இருந்தாலும், யூதராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் எவ்வித பாகுபாடும் இன்றி தண்டனை வழங்கப்படும்.)

(சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலிலிருந்து – பக்கம் 279)

## மார்க்க சுதந்திரமும் நஜ்ரானிலுள்ளவர்களுக்காக வழங்கப்பட்ட அமைதிக்கான வாக்குறுதியும்

பிறகு இந்த மத நல்லிணக்கத்தையும், மார்க்க சுதந்திரத்தையும் நிலை நாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஜ்ரானிலிருந்து வந்திருந்த கிறிஸ்தவக் குழுவுக்கு மஸ்ஜிதே நபவியில் வணங்குவதற்கு அனுமதியளித்தார்கள். அந்தக் கிறிஸ்தவர்கள் கிழக்கு நோக்கி முகந்திருப்பியவாறு தொழுதனர். அவ்வாறு கூடாது என நபித்தோழர்கள் கருதினர். பரவாயில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு நஜ்ரான் மக்களுக்கு பாதுகாப்பு பத்திரம் கொடுத்த சம்பவமும் வருகிறது. (நஜ்ரானிலிருந்து வந்திருந்த) கிறித்தவர்களின் எல்லைப் புறங்கள் முஸ்லிம் இராணுவத்தின் மூலமாக பாதுகாக்கப்படும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள், வணக்கஸ்தலங்கள், பயணிகள் இல்லங்கள் – அவை எவ்வளவு தூரமான இடங்களில் இருந்தாலும் சரி அல்லது நகரங்களில் இருந்தாலும், மலைகளில் இருந்தாலும், காடுகளில் இருந்தாலும் அவற்றைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் பொறுப்பாகும். (கிறித்தவர்களாகிய) அவர்களுக்கு தங்கள் மார்க்கத்தின்படி இறைவணக்கம் செய்வதற்கு சுதந்திரம் உண்டு. அவர்களின் இந்த இறைவணக்கம் செய்வதற்கான சுதந்திரத்தை பாதுகாப்பதும் முஸ்லிம்களின் மீது கடமையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஏனென்றால் இப்பொழுது இவர்கள்

முஸ்லிம் அரசின் குடிமக்களாவார்கள். எனது குடிமக்களாவார்கள். எனவே இந்த வகையிலும் அவர்களை பாதுகாப்பது என்மீது கடமையாகிவிட்டது.

முஸ்லிம்கள் தங்கள் போர்களில் அவர்களை (அதாவது கிறிஸ்தவர்களை) அவர்களின் விருப்பதிற்கு மாற்றமாக சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களின் பாதிரிமார்கள் அல்லது மார்க்கத் தலைவர்கள் எந்த அந்தஸ்தில் எந்த பொறுப்பில் இருக்கின்றார்களோ அதிலிருந்து அவர்கள் நீக்கப்பட மாட்டார்கள். அவர்கள் அவ்வாறே தமது பணிகளை செய்து வருவார்கள். அவர்களின் வணக்கஸ்தலங்களில் எவ்வித தலையீடும் இருக்காது. எந்நிலையிலும் அவை உபயோகப்படுத்தப்பட மாட்டாது. அவை பயணிகளின் தங்குமிடமாக ஆக்கப்படமாட்டாது. எவரும் அங்கு தங்க வைக்கப்பட மாட்டார்கள். எந்தவொரு நோக்கத்திற்காகவும் அவர்களிடம் கேட்காமல் அந்த இடங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது. மார்க்க அறிஞர்களும், துறவிகளும் எங்கிருந்தாலும் அவர்களிடமிருந்து வரியோ, கப்பமோ வசூலிக்கப்பட மாட்டாது. ஒரு முஸ்லிமுக்கு கிறிஸ்தவ மனைவி இருந்தாலும் அவள் தனது மார்க்க முறைப்படி தொழுவதற்கு முழு சுதந்திரம் உண்டு. ஒருவர் தனது மார்க்க அறிஞரிடம் சென்று மார்க்க சந்தேகங்கள் குறித்து கேட்க விரும்பினால் அவர் கேட்க செல்லலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருச்சபைகளின் சீரமைப்புப் பணிக்காக கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடம் பண உதவியோ, தொண்டு உதவியோ வாங்க விரும்பினால் முஸ்லிம்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் இது சிறந்த விசயமாகும். அது நன்மையோ கடனோ அல்ல. மாறாக, இவ்வாறு அது, சமூக தொடர்புகளை பேண வேண்டும்; ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற உடன்படிக்கையை மேலும் சிறப்பாக நிறைவேற்றுவதகா அது அமையும். (ஸாதுல் மஆத் ஃபி ஹுதா கைருல் இபாத் ஃபஸ்லு ஃபீ குதூமி வஃபத் நஜ்ரான்)

இதுதான் மதநல்லிணக்கம், மத சுதந்திரம் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உன்னத நிலை. அப்படியிருந்தும் அன்னார் அநீதியிழைத்தார் என்றோ, வாளின்



பலவந்தத்தினால் இஸ்லாத்தை பரப்பினார் என்றோ, அன்னாரின் மீது குற்றம் சுமத்துவது மிகவும் கொடுமையானது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“வேதத்தையுடையோரும், அரபு நாட்டின் இணைவைப்பவர்களும் மிகவும் மோசமான நடத்தையுள்ளவர்களாகி விட்டபோது, தீமை செய்துவிட்டு நாம் நன்மை செய்தோம் என்று கருதிய போது குற்றங்களிலிருந்து விலகாத போது, பொதுமக்களின் அமைதியில் இடையூறை ஏற்படுத்திய போது, அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கையில் ஆட்சியின் கடிவாளத்தை வழங்கி அவர்களின் கையினால் ஏழைகளைக் காப்பாற்ற விரும்பினான். அரபு நாடு கடிவாளம் இல்லாத நாடாக இருந்தது. அவர்கள் எந்த மன்னராட்சிக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. எனவே ஒவ்வொரு பிரிவினரும் எவ்வித கட்டுப்பாடுமின்றி துணிவுடன் வாழ்ந்து வந்தனர்”.

எந்தச் சட்டமும் இருந்ததில்லை. ஏனென்றால் எவருக்கும் கட்டுப்பட்டவராக இருக்கவில்லை.

“அவர்களுக்கென்று தண்டனைக்கான எந்தச் சட்டமும் இருந்ததில்லை. எனவே அவர்கள் நாளுக்கு நாள் குற்றங்களில் முன்னேறிக் கொண்டே சென்றனர். எனவே இறைவன் அந்த நாட்டின் மீது இரக்கம் கொண்டு...... ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அந்த நாட்டிற்கு இறைத்தூதராக அனுப்பியது மட்டுமல்லாமல் அந்த நாட்டிற்கு மன்னராகவும் ஆக்கினான். மேலும் திருக்குர்ஆனை எத்தகைய சட்டத்தைப் போன்று முழுமையாக வழங்கினான் என்றால் அதில் குற்றவியல், இராணுவம், பொருளாதாரம் ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்கள் எல்லாம் அடங்கியுள்ளன. ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னர் என்ற முறையில் எல்லாப் பிரிவினர்களுக்கும் அதிகாரியாக இருந்தார்கள். ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்த மக்களும் தமது வழக்குகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக தீர்வு கண்டார்கள். திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்ற விசயம்

என்னவென்றால், ஒருமுறை ஒரு யூதருக்கும் முஸ்லிமுக்கும் இடையிலுள்ள ஒரு வழக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விசாரித்த பிறகு அந்த யூதரின் வார்த்தை உண்மை என்பதை உணர்ந்து, அந்த முஸ்லிமுக்கு எதிராகவும், யூதருக்கு சாதகமாகவும் தீர்ப்பு வழங்கினார்கள். (இதுபற்றி ஏறக்குறைய நான் கூறிவிட்டேன்.)

எனவே திருக்குர்ஆனை கவனமாக படிக்காத சில அறிவிலி எதிரிகள் எல்லா நிலையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் கீழ் கொண்டு வர விரும்புகின்றார்கள். ஆனால் அந்த தண்டனைகள் ஆட்சியாளர் என்ற நிலையில் வழங்கப்பட்டு வந்தது. (அதாவது இது அரசாங்கத்தின் பணியாகும்''.

''இஸ்ராயீல் மக்களிடம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு நபிமார்கள் தனியாகவும், மன்னர்கள் தனியாகவும் இருந்தனர். அந்த மன்னர்கள் அரசியல் மூலமாக அமைதியை நிலைநாட்டி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இந்த இரண்டு பதவிகளையும் இறைவன் அன்னாருக்கு (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு) வழங்கினான். மேலும் குற்றவாளிகள் நீங்கலாக மற்ற பொதுமக்களிடம் நடந்த கொண்ட முறை பற்றி கீழ்வரும் வசனத்திலிருந்து தெளிவாகிறது:

وَقُلْ لِّلَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ وَالْاُمِّيّٖنَ ءَاَسْلَمْتُمْ ۗ فَاِنْ اَسْلَمُوْا فَقَدِ اهْتَدَوْا ۚ
وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ ۗ

''தூதரே! வேதக்காரர்களிடமும், அரபு நாட்டின் அறிவீனர்களிடமும் கூறுவீராக. நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் நுழைகின்றீர்களா? நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் நேர்வழி பெற்று விட்டீர்கள். நீங்கள் முகம் திருப்பி விட்டால் தூதுச் செய்தியை எட்ட வைப்பது மட்டுமே உம்மீது பொறுப்பாகும்''. (சூரா ஆலி இம்ரான் வசனம் 21)



நீங்கள் அவர்களிடம் போர் செய்யுங்கள் என்று இந்த வசனத்தில் கூறவில்லை. முஸ்லிம்களை கொன்று வந்த பொது அமைதியில் இடையூறை ஏற்படுத்திக் கொண்டிருந்த திருட்டிலும், கொள்ளையிலும் ஈடுபட்டிருந்த குற்றவாளிகளுக்கு எதிராக மட்டுமே போர் செய்ய அனுமதி இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அந்த போர், மன்னர் என்ற முறையில் இருந்ததே தவிர தூதுத்துவத்தி(னை ஏற்க வைப்பத)ற்காக இருக்கவில்லை. (அதாவது அன்னார் முதன்மை ஆட்சியாளராக இருந்த போது நாட்டின் சட்டங்களுக்கு மாற்றமாக அமைதியைக் குலைக்கின்ற, அநீதியிழைக்கின்றவர்களுக்கு எதிராக தீமையைத் தடுப்பதற்காக போர் செய்தார்கள். நபி என்பதற்காக செய்யவில்லை.) அல்லாஹ் கூறுகிறான்:

وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ۗ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ﴿۱۹۱﴾

அதாவது உங்களுடன் போர் செய்பவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் வழியில் போரிடுங்கள். மற்றவர்களுடன் போர் செய்யும் நோக்கம் வேண்டாம். மேலும் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோர்களை நேசிப்பதில்லை''. (2:191)

(சஷ்மயே மஃரிஃபத் – ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 242, 243)

எனவே, எந்த தூய நபியின் மீது இந்த சரீஅத் இறங்கி இருக்கின்றதோ அவர் எவ்வாறு தனக்கு இறங்கிய சரீஅத்திற்கு மாற்றமாக வரம்பு மீறி நடப்பார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் தான் பாதுகாப்பில் இருப்பீர்கள் என்ற எந்தவித நிபந்தனையுமின்றி அவர்களை மன்னித்து விட்டதாக பொது மன்னிப்பிற்கான அறிவிப்பைச் செய்தார்கள். இது சம்பந்தமான ஓர் உதாரணத்தை நாம் ஏற்கனவே பார்த்து விட்டோம். அது பல்வேறு வகையான தோற்றங்களைக் கொண்டதாக இருந்தாலும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் தான் மன்னிப்பு கிடைக்கும் என்று எங்கும் இல்லை. பல்வேறு வகையான இடங்களுக்கு செல்வதாலும், நுழைவதாலும், ஒருவருடைய கொடியின் கீழ் வருவதாலும், கஃபதுல்லாஹ்வுக்குள் செல்வதாலும், ஒருவருடைய வீட்டிற்கு செல்வதாலும் மன்னிப்பு கிடைக்கும்

என அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும் இது எப்படிப்பட்ட உயர்ந்த முன்னுதாரணம் என்றால் வேறு எங்கும் இது நமக்கு காணக்கிடைக்காது. முழுமையாக இவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்டது.

லா தஸ்ரீப அலைக்குமுல் யவ்ம் அதாவது இன்று உங்களை பிடிக்க மாட்டோம். நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் என்று அறிவிப்பு செய்தார்கள்.

இத்தகைய உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டிய அன்னார் மீது ஆயிரக்கணக்கான ஸலவாத்துகள் உண்டாவதாக. நமக்கும் அந்த போதனையை அன்னார் வழங்கியுள்ளார்கள். அதன்படி செயல்படும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

(10 மார்ச் 2006 –ல் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ உரையிலிருந்து… உஸ்வயே ரஸூல் அவ்ர் ஹாக்கோன் கி ஹகீகத் பக்கம் 92–111)

## சமாதானத்தை நிறுவுவதற்காகவும், தவறான எண்ணங்களை அகற்றவதற்காகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் வழங்கியுள்ள உயர்வான போதனைகளும் ஆலாசனைகளும்

பல்வேறு மதங்கள் மற்றும் நபர்களுக்கிடையில் நிலவும் தவறான எண்ணங்களை அகற்றி பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் அன்புடனும் சமாதானத்துடன் இருப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்மதியுமான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் சர்வ சமய மாநாடு நடத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை கூறியிருந்தார்கள். அவர்கள் விக்டோரியா ராணியின் வைர விழாவின் போது இந்த ஆலோசனையை வழங்கி இவ்வாறு கூறினார்கள்.

இந்த சர்வ சமய மாநாட்டில் ஒவ்வொருவரும் தங்களது மதங்களின் சிறப்புகளை எடுத்துக் கூற வேண்டும். மற்றவர்களைப் பற்றி எதையும் கூற வேண்டியதில்லை. இது கண்டிப்பானதாகும். (துஃபா கெய்ஸரிய்யா ரூஹானீ கஸாயின் தொகுதி 12, பக்கம் 279)



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த தேவையை விளக்கியவாறு பொதுவாக மார்க்கத் தலைவர்களும் பாதிரிமார்களும் பொதுமக்களுக்கு தவறான விசயங்களையே கூறினார்கள். அதன் காரணமாக அவர்களிடம் தீவிரவாதப் போக்கு பரவுகிறது என்று கூறினார்கள்.

தொடர்ந்து அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: “அவர்களிடம் நல்லெண்ணம் இருந்தால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட தவ்ராத்தின் மீது செய்ய முடிகின்ற ஆட்சேபனைகளை திருக்குர்ஆன் மீது அவர்கள் செய்யமாட்டார்கள். அவர்களுக்கு இறையச்சம் இருந்தால் ஆட்சேபனை செய்கின்ற போது சாக்குப் போக்குகளைத் தேட மாட்டார்கள். முஸ்லிம்களின் பார்வையில் அவை ஏற்றுக் கொள்ளப்பட முடியாததும் உறுதியான உண்மைகளிலிருந்தும் காலியானதுமாகும். எனவே, நீதி நமக்கு இடும் கட்டளை என்னவென்றால், ஐரோப்பா முழுவதிலும் உள்ள மக்கள் மலக்குகளைப் போன்றவர்களாக இருந்தாலும் கூட பாதிரிமார்களுக்கு இதில் விதிவிலக்கு இருக்கின்றது. ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தை வெறுப்புடனும் அற்பமான பார்வையுடனும் பார்க்கின்றனர். இதற்கான காரணம் தொடக்க காலத்திலிருந்தே இதே பாதிரிகள் சம்பவத்திற்கு மாற்றமான கதைகளை எடுத்துக் கூறி இஸ்லாத்தை அற்பமான பார்வையுடன் பார்ப்பதற்கான பாடங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுத்தனர்.

சில அறிவற்ற முஸ்லிம்களுடைய நடைமுறை சரியானதாக இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அறிவீனமாக நடந்து கொள்கின்ற பழக்கவழக்கங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. உதாரணமாக, சில காட்டுமிராண்டித்தனமான முஸ்லிம்கள் அநீதியான முறையில் கொலை செய்வதற்கு ஜிஹாது என்று பெயர் வைக்கின்றனர். குடிமக்களுடன் நீதியுடன் நடந்து கொள்ளக்கூடிய அரசரை எதிர்த்து நிற்பதற்குத் தான் கிளர்ச்சி என்று பெயர். அதற்கு ஜிஹாது என்று பெயர் அல்ல என்பதை அவர்கள் அறிவதில்லை. உடன்படிக்கையை மீறுவது நன்மைக்கு எதிரில் தீமையைச் செய்வது, அப்பாவிகளைக் கொலை

செய்வது ஆகிய செயல்களில் ஈடுபடுபவரை நாம் அநீதியிழைப்பவர் என்றே கூறுவோம். அறப்போர் செய்பவர் என்று கூறமாட்டோம். அநீதியான முறையில் வாளை ஏந்துபவர்களுக்கு வாளினால் தண்டனை கொடுக்க வேண்டும் என்று இறை வசனங்கள் கூறுகின்றன. அமைதியை நிலைநாட்டுகின்ற குடிமக்கள் மீதும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சுதந்திரத்திற்கான உரிமைகளை வழங்குபவர்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய அது ஒருபோதும் போதிக்கவில்லை. இறைவனது வசனங்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவது நேர்மையின்மையாகும். எனவே, மனிதர்களது நன்மைக்காக இந்த விசயம் சமாதானத்திற்கு மிகவும் தேவையானதாகும். எனவே, கண்ணியத்திற்குரிய இந்தியாவின் ராணியின் தரப்பிலிருந்தும் மார்க்கத்தின் உண்மை நிலையை வெளியிடுவதற்காக சர்வ சமய மாநாடு நடத்தப்பட வேண்டும். (துஃபா கெய்ஸரிய்யா ரூஹானீ கஸாயின் தொகுதி 12, பக்கம் 280-281)

## ஒவ்வொருவருடனும் அனுதாப உணர்வுடன் நடந்து கொள்வதே மனிதத் தன்மையாகும்

எந்த மார்க்கத்தில் பொதுவான அனுதாபம் பற்றிய போதனை இல்லையோ அந்த மார்க்கம் ஒரு மார்க்கமே அல்ல. மேலும் எந்த மனிதனிடம் அனுதாபம் என்ற பண்பு இல்லையோ அவன் மனிதனே அல்ல. நம் இறைவன் எந்தவொரு சமுதாயத்திடமும் பாரபட்சம் காட்டவில்லை. உதாரணமாக, மனிதனின் என்னென்ன ஆற்றல்களும் திறமைகளும் ஆரியர்களின் பழங்கால சமுதாயங்களுக்கு வழங்கப்பட்டனவோ அந்த எல்லா ஆற்றல்களும், திறமைகளும் அரேபியர்கள், பாரசீகர்கள், சிரியாவைச் சேர்ந்தவர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் ஆகிய சமுதாயங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இறைவனின் பூமி அனைவருக்கும் தரையாக பயன்படுகிறது. அவனது சூரியன், சந்திரன் மற்றும் பல நட்சத்திரங்களும் அனைவருக்கும் ஒளிதரும் விளக்காக பயன்படுகின்றன. மேலும் பிற தொண்டுகளையும் புரிகின்றன. அவனால்



படைக்கப்பட்ட அடிப்படைக் காரணி ஆகிய காற்று, நீர், நெருப்பு, மற்றும் மண் அதேபோன்று அவனால் படைக்கப்பட்ட பிற பொருட்களான தானியங்கள், கனிவகைகள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றிலிருந்து அனைத்து சமுதாயங்களும் பயனடைகின்றன. ஆக, இறைவனின் இந்த பண்புகள், நாமும் மனித இனத்துடன், மனித நேயத்தோடும், நன்னடத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறுகிய மனமுள்ளவர்களாகவும் தைரியமற்றவர்களாகவும் ஆகிவிடக் கூடாது என்ற பாடத்தையும் புகட்டுகின்றன.

நண்பர்களே! நிச்சயமாக தெரிந்து கொள்ளுங்கள்! ஒருவேளை நம் இரு சமுதாயங்களில் எந்த சமுதாயம் இறை நற்பண்புகளுககு கண்ணியம் அளிக்காதோ மேலும் அவனது தூய பண்புகளுக்கெதிராக தமது செயல்பாடுகளை ஆக்குமோ அந்த சமுதாயம் விரைவில் அழிந்து விடும். அது தன்னை மட்டுமின்றி தமது சந்ததியினரையும் அழிவிற்குள்ளாக்கிக் கொள்ளும். இந்த உலகம் தோன்றிய நாள் முதல் எல்லா நாட்டு சான்றோர்களும், இறை நற்பண்புளை பின்பற்றுவதே மனிதன் நிலைபெற்றிருப்பதற்கு ஒரு வாழ்வாதாரம் ஆகும் என்றும் மனிதனின ஆன்மீக மற்றும் பௌதீக வாழ்க்கையானது, அவன் இறைவனது அமைதியின் ஊற்றாக விளங்கும் எல்லா தூய நல்லொழுக்கங்களை பின்பற்றுவதையே சார்ந்திருக்கிறது எனவும் சான்றுரைத்துள்ளனர்.

(பைகாமே ஸுல்ஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 23, பக்கம் 439-440)

## ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு தூதரையும் இல்ஹாமிய வேத நூல்களையும் இழிவுபடுத்தக் கூடாது

தனது மரணத்திற்கு ஒருநாள் முன்பாக எழுதிய பைகாமே ஸுல்ஹ் (சமாதானத் தூது) என்ற நூலில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இரண்டு சமுதாயங்களுக்கும் சமாதானத்தின் தேவை உள்ள இந்த இக்கட்டான தருவாயில் நான் உங்களை சமாதானத்திற்காக அழைக்கிறேன். இவ்வுலகில் பலவிதமான சோதனைகள் இறங்கிக் கொண்டிருக்கின்றன. பூகம்பங்கள் வருகின்றன, பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. பிளேக் நோயும் இன்னும் விட்டுவிடவில்லை. மேலும் இறைவன்

எனக்கு தெரிவித்திருக்கும் செய்தியெல்லாம், உலகம் தனது தீய செயல்களை விட்டு விட்டு தீயவற்றிலிருந்து பாவமன்னிப்புக் கோரவில்லை எனில் இவ்வுலகில் பல்வேறு கடினத்திலும் கடினமான சோதனைகள் தோன்றும் என்பதேயாகும். மேலும் ஒரு சோதனை இன்னும் முடியாதிருக்கையில் இரண்டாவது சோதனை வெளிப்பட்டு விடும். இறுதியில் மனிதன் என்னதான் நடக்கவிருக்கின்றதோ என்று எண்ணி மிகவும் தொல்லைக்காளாகி விடுவான். மேலும் பலர் துயரங்களுக்கு நடுவில் சிக்கி புத்தி பேதலித்து விடுவார்கள். எனவே எனது தேசத்து சகோதரர்களே! அந்நாள் வருவதற்கு முன்பே எச்சரிக்கை ஆகிவிடுங்கள். மேலும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒருவருக்கொருவர் சமாதானத்தை மேற்கொள்ளுங்கள். மேலும் எந்த சமுதாயத்தில் சமாதானத்தை தடுக்கும் விதமாக ஏதும் அநீதி இருப்பின் அந்த அநீதியை அச்சமுதாயம் விட்டு விடவும், இல்லாவிடில் இருவருக்குமிடையில் இருக்கும் பகைமையின் அனைத்து பாவங்களும் அந்த சமுதாயத்தின் தலை மீதே விழும்.

மதங்களுக்கிடையேயான இந்த வேறுபாடுகள் நாளுக்குநாள் இதயங்களில் பிரிவினையை ஏற்படுத்துகின்ற, சமாதானத்தை தடை செய்கின்ற ஒரு விசயமாக இருக்கையில் எவ்வாறு சமாதானம் நிகழும்? என எவராவது கூறினால்,

நான் அதற்கு பதிலாக கூறுவேன்; உண்மையில் மார்க்க வேறுபாடு என்பது இரு புறமும் பகுத்தறிவு, நீதி, மற்றும் கண்டுணரப்பட்ட விசயங்களால் ஏற்படும் வேறுபாடே ஆகும். மற்றபடி மனிதன் பகுத்தறிவுக்கும் நீதிக்கும் புறம்பாக இருக்காத, கண்டுணரப்பட்ட விசயங்களுக்கு எதிராக இருக்காத அம்சத்தை கடைபிடிப்பதற்காகத் தானே அவனுக்கு பகுத்தறிவு வழங்கப்பட்டிருக்கிறது! மேலும் சின்னச் சின்ன வேறுபாடுகள் சமாதானத்திற்கு தடையாக இருக்க முடியாது. மாறாக ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறைதூதர் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறை வேதத்தை அவமதிப்பதாலும பொய்ப்படுத்துவதாலும் செய்யும் தாக்குகின்ற வேறுபாடுகள் தான் சமாதானத்திற்கு தடையாக இருக்கும்.

(பைகாமே ஸுல்ஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 23, பக்கம் 444)



அன்பர்களே!! பல்வேறு சமுதாயங்களின் நபிமார்களையும் இறைதூதர்களையும் கண்ணியக்குறைவாகக் குறிப்பிடுவதும் அவர்களை பழித்துரைப்பதும் எத்தகைய விசம் என்றால், அது இறுதியில் உடலை மட்டும் அழித்து விடுவதில்லை; மாறாக ஆன்மாவையும் அழித்து மார்க்கம் உலகம் ஆகிய இரண்டையும் அழித்து விடுகின்றது என்பதை பழைய அனுபவமும் மீண்டும் மீண்டும் வரும் சோதனைகளும் நிரூபித்துக் காட்டி விட்டன. ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒருவர் மற்றவரின் மார்க்க வழிகாட்டியை குறை கூறுவதிலும், அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட அந்தஸ்தை சீர்குலைப்பதிலும் ஈடுபட்டால் அந்நாடு நிம்மதியாக வாழ முடியாது. மேலும் எந்த சமுதாயங்களில் ஒரு சமுதாயம் அல்லது இரண்டு சமுதாயமும் ஒருவர் மற்றவரது நபி அல்லது ரிஷி மற்றும் அவதாரத்தை தீமையாகவோ தீயவார்த்தைகளால் நினைவு கூர்வார்களோ அந்த சமுதாயங்களுக் -கிடையே ஒருபோதும் உண்மையான ஒற்றுமை நிலவ முடியாது. தங்களது நபி அல்லது மார்க்கத் தலைவர் பற்றிய அவமதிப்பைக் கேட்டு யார்தான் உணர்ச்சிவசப்படமாட்டார்கள்? குறிப்பாக முஸ்லிம்கள் எத்தகைய சமுதாயமெனில் அவர்கள் தங்களது நபியை இறைவனாகவோ அல்லது இறைவனின் மகனாகவோ ஆக்கவில்லை என்றாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தாய்மார்களின் வயிற்றில் பிறந்து (இறைவனால்) தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா மனிதர்களை விடவும் மிக்க மேன்மைக்குரியவராக கருதுகின்றனர். எனவே முஸ்லிம்களின் தூய நபி (ஸல்) அவர்களைப் பற்றி பேசுகையில் கண்ணியத்திற்குரிய, தூய வார்த்தைகளால் நினைவு கூறாத வரை அந்த முஸ்லிம்களுடன் எவ்வகையிலும் சமாதானம் ஏற்பட சாத்தியமேயில்லை!

மேலும் நாங்கள் மற்ற சமுதாயங்களின் நபிமார்களைப் பற்றி ஒருபோதும் தீய வார்த்தைகளால் பேசுவதில்லை. இன்னும் சொல்லப் போனால் எமது கொள்கை என்னவெனில், இவ்வுலகில் பல்வேறு சமுதாயங்களுக்காக எத்தனை நபிமார்கள் வந்திருக்கிறார்களோ மேலும் கோடிக்கணக்கான மக்கள் அவர்களை ஏற்றிருக்கிறார்களோ, மேலும் உலகின் ஏதோ ஒரு பகுதியில் அவர்களின் நேசம் மற்றும் மகத்துவம் போற்றப்படுகிறதோ, மேலும் இந்த நேசம் மற்றும் நம்பிக்கையில் ஒரு நீண்ட

காலம் கடந்து விட்டதோ அவர்களின் இந்த ஒரு சான்றே உண்மைக்குப் போதுமானது என்பதாகும். ஏனெனில் அவர்கள் இறைவன் புறமிருந்து வந்தவர்கள் இல்லையெனில் அவர்களை ஏற்றுக் கொள்வது கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் பரவியிருக்காது. இறைவன் தனது ஒப்புக் கொள்ளப்பட்ட அடியார்களுக்கான கண்ணியத்தை மற்றவர்களுக்கு ஒருபோதும் கொடுப்பதில்லை. மேலும் எந்த பொய்யனாவது அவர்களது இருக்கையில் அமர விரும்பினால் அவர் உடனே நாசமாகி விடுவார்; அழிக்கப்படுவார்.

(பைகாமே ஸுல்ஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 23, பக்கம் 452-453)

## சமாதானமே நன்மையாகும்

அன்பர்களே! சமாதானத்தைப் போன்று வேறெதுவும் இல்லை. வாருங்கள்! நாம் இந்த உடன்படிக்கையின் மூலமாக ஒன்றுபடுவோம். ஒரே சமுதாயமாவோம். ஒருவருக்கொருவர் பொய்ப்படுத்துவதனால் எந்த அளவு விரிசல் ஏற்பட்டு விட்டது என்று நீங்களே பார்க்கின்றீர்கள். மேலும் நாட்டிற்கு எந்த அளவு இழப்பு நேருகிறது. வாருங்கள்! இப்போது ஒருவர் இன்னொருவரை உண்மைப்படுத்துவதனால் எந்த அளவுக்கு அருள்கள் இருக்கின்றன என்பதையும் சோதித்துப் பாருங்கள்! சமாதானத்திற்கான மிகச்சிறந்த வழிமுறை இதுதான். அவ்வாறல்லாமல் வேறு எவ்விதத்திலும் சமாதானம் செய்வது என்பது ஒரு தெளிவான, பளபளப்பான ஒரு கொப்புளத்தைக் கண்டு அதனை அப்படியே விட்டுவிடுவதையும், அதன் வெளிப்புறமான பளபளப்பின் மீது மகிழ்ச்சியடைவதையும் போன்றதாகும். ஆனால் அதனுள் அழுகிய, துர்நாற்றம் வீசும் சீழ் நிறைந்துள்ளது.

(பைகாமே ஸுல்ஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 23, பக்கம் 456)

## மார்க்கத்தின் உண்மையான நோக்கம்

மார்க்கம் என்பது, இறைவன் தடுத்தவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதும், அவனது திருப்தியைப் பெறும் வழிகளின் பக்கம் ஓடுவதும் அவனது அனைத்து படைப்பினங்களுக்கு நன்மை செய்வதும், அனுதாபத்துடன் நடந்து கொள்வதும், உலகின் அனைத்து தூய



நபிமார்களையும் இறை தூதர்களையும் தத்தமது காலத்தில் இறைவன் புறமிருந்து வந்த நபியாகவும் சீர்திருத்தவாதியாகவும் ஏற்பதும் அவர்களிடையே எவ்வித வேறுபாடு காட்டாமல் இருப்பதும், ஒவ்வொரு மனிதனுடனும் தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதும் ஆகும். இதுவே நமது மார்க்கத்தின் சுருக்கம் ஆகும்.

ஆனால் தேவையின்றி இறையச்சம் இல்லாமல் நமது மேன்மை வாய்ந்த நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தகாத வார்த்தைகளால் நினைவுகூரி அன்னார் மீது அசுத்தமான பழிகளை சுமத்தி, தகாத வார்த்தைகளை கூர்வதை விட்டு விடாத மக்களுடன் நாம் எப்படி சமாதானம் செய்து கொள்ள முடியும்? நான் உண்மையாகவே கூறுகின்றேன். எங்களால் பூமியிலுள்ள கொடுமையான பாம்புகளுடனும், பாலைவனங்களிலுள்ள ஓநாய்களுடனும் சமாதானம் செய்து கொள்ள முடியும்; ஆனால் எங்கள் உயிரினும், தாய் தந்தையரினும் மேலான அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்கள் மீது அசுத்தமான தாக்குதல்களை நடத்துபவர்களிடம் நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது. இறைவன் எங்களுக்கு இஸ்லாத்திலேயே இறப்பை கொடுக்கட்டும். ஆனால் ஈமானை இழக்கக்கூடிய அப்படிப்பட்ட செயலை நாங்கள் செய்ய விரும்ப மாட்டோம்....

....மாறாக மிகவும் வருத்தத்துடனும் துயரத்துடனும் இவ்வாறு நான் கூற வேண்டியது ஏற்பட்டுள்ளது; இஸ்லாம் எத்தகைய தூய, சமாதானத்தை உருவாக்கும் மார்க்கம் என்றால், அது எந்தவொரு சமுதாயத்தின் தலைவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை; மேலும் திருக்குர்ஆன், சமுதாயங்களுக்கிடையே சமாதானத்தை வித்திட்டு, ஒவ்வொரு சமுதாயத்தின் நபியையும் ஏற்றுக் கொண்ட கண்ணியத்திற்குரிய வேதமாகும். மேலும் திருக்குர்ஆன் உலகத்தைப் பற்றி முஸ்லிம்களே! நாங்கள் உலகின் எல்லா நபிமார்கள் மீதும் நம்பிக்கை கொள்கிறோம். அவர்களிடையே சிலரை ஏற்க வேண்டும்; சிலரை ஏற்கக் கூடாது என்ற வேற்றுமையை பாராட்டவில்லை (3:85 காண்க) என்ற போதனையை நமக்கு வழங்கியது. முழு உலகிலும் இந்த குறிப்பிட்ட பெருமை திருக்குர்ஆனுக்கே கிடைத்திருக்கிறது. இவ்வாறான சமாதானத்தைக் கூறும்

இறைவேதம் ஏதும் இருப்பின் அதன் பெயரைக் கூறுங்கள். திருக்குர்ஆன் இறைவனின் பொதுவான கருணையை எந்த வம்சத்திற்கு மட்டும் உரியதாக குறிப்பிட்டுக் கூறவில்லை. இஸ்ரவேல் சமுதாயத்தின் எத்தனை நபிமார்கள் இருந்தார்களோ! அது யாகூப் (அலை) அவர்களாக இருக்கட்டும். தாவூது (அலை) அவர்களாக இருக்கட்டும். ஈஸா (அலை) அவர்களாக இருக்கட்டும். அனைவரின் நபித்துவத்தையும் ஏற்றுக் கொள்கிறது. மேலும் ஒவ்வொரு சமுதாயத்தின் நபியையும் – அவர் இந்தியாவில் தோன்றியவராக இருந்தாலும் பாரசீகத்தில் தோன்றியவராக இருந்தாலும் யாரையும் ஏமாற்றுபவர் என்றோ பொய்யரென்றோ கூறவில்லை. மாறாக ஒவ்வொரு சமுதாயத்திலும், ஊரிலும் நபி இருந்திருக்கிறார் என்று தெளிவாகக் கூறியுள்ளது. மேலும் அனைத்து சமுதாயங்களுக்கும் சமாதானத்திற்கு அடித்தளமிட்டுள்ளது. ஆனால் இப்படிப்பட்ட சமாதானத்தின் தூதரை (ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்... அவர்களை) ஒவ்வொரு சமுதாயமும் ஏசுவதும், ஏளனமாகப் பார்ப்பதும் வருத்தத்திற்குரியதாகும்.

என் அன்பிற்குரிய நாட்டினரே! நான் உங்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பதற்காகவோ உங்களது மனதை துன்புறுத்துவதற்காகவோ இதனை உங்களிடம் கூறவில்லை. மாறாக, நான் மிகவும் நல்லெண்ணத்துடன் கூற விரும்புவது யாதெனில், எந்த சமுதாயம் மற்ற சமுதாயங்களின் நபிமார்களை தகாத வார்த்தைகளுடனும் அவப்பெயருடனும் நினைவு கூரும் தகாத முறையை தங்களது மார்க்கத்தில் கடைபிடிக்கும் பழக்கத்தை கொண்டிருக்கின்றனரோ அவர்கள் தம்மிடம் எவ்வித சான்று இன்றி (பிற மார்க்கத்தில்) குறுக்கிடுவதனால் இறைவன் முன் பாவம் செய்தவர்களாவர். அவர்கள் மனித இனத்தில் வேற்றுமை மற்றும் இன்னும் சொல்லப்போனால் பகைமையின் விதையை விதைத்த பாவத்தையும் செய்தவர்களாவர். ஒருவர் இன்னொருவருடைய தந்தையை ஏசினால் அல்லது அவருடைய தாய் மீது பழி சுமத்தினால் அவர் தனது தந்தையின் கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்த தானே காரணமாக மாட்டாரா என்பதை நீங்கள் உங்கள் நெஞ்சில் கை வைத்து எனக்கு பதில் கூறுங்கள். மேலும் எவர் ஏசப்பட்டாரோ அவர், பதிலாக அதே போன்று (ஏசியவரை) ஏசினால், ஏசுவதில் உண்மையில் முதலில் ஏசியவர் தான்



பதிலுக்கு ஏசப்படுவதற்கு காரணமாவார் என்றும், அத்தகைய நிலையில் (முதலில் ஏசிய) அவரே தனது தாய், தந்தையின் கண்ணியத்திற்கு எதிரியாவார் என்றும் கூறுவதும் பொருத்தமற்றதாக இருக்குமா என்ன?

(பைகாமே ஸுலுஹ் ரூஹானீ கஸாயின் தொகுதி 23, பக்கம் 458–460)

## ஆபத்துகளிலிருந்து தப்பிப்பதற்கு தவ்பா செய்யுங்கள்

அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**இறைவன் எனக்கு பொதுவாக பூகம்பங்கள் பற்றி செய்திகளைத் தெரிவித்துள்ளான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனது முன்னறிவிப்பிற்கேற்ப எவ்வாறு அமெரிக்காவில் பூகம்பம் வந்ததோ அவ்வாறே ஐரோப்பாவிலும் ஆசியாவின் பல்வேறு இடங்களிலும் அவை வரும் என்பதை உறுதியாக தெரிந்து கொள்ளுங்கள். அவற்றில் சில கியாமத்தின் முன்மாதிரியாகத் திகழும். எந்த அளவு மரணங்கள் நிகழும் என்றால் இரத்த ஆறுகள் ஓடும். இந்த மரணத்திலிருந்து பறவைகளும் விலங்குகளும் கூட தப்பிக்க முடியாது. எந்த அளவுக்கு கடுமையான அழிவு ஏற்படும் என்றால் மனிதன் பிறந்த நாளிலிருந்து இதுபோன்ற அழிவு ஒருபோதும் ஏற்பட்டிருக்காது. பெரும்பாலான இடங்கள் தலைகீழாக ஆகி விடும். அந்த இடங்களில் எவருமே குடியேறவில்லை என்பது போன்று தெரியும். அத்துடன் மேலும் பல ஆபத்துகள் பூமியிலும் வானத்திலும் பயங்கரமான முறையில் தோன்றும். எதுவரையென்றால் அறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் பார்வையிலும் இந்த விசயங்கள் வழக்கத்திற்கு மாற்றமானவையாகத் தெரிய வரும். விஞ்ஞானம் மற்றும் தத்துவ நூல்களின் எந்தப் பக்கத்திலும் இவற்றைப் பற்றிய எந்த விபரமும் கிடைக்காது. அப்போது என்ன நடக்கப் போகிறதோ? என்று மனிதர்கள் மத்தியில் அமைதியின்மை உருவாகும். பலரும் இரட்சிப்பைப் பெறுவர். பலரும் அழிந்து விடுவர். அந்த நாட்கள் அருகில் இருக்கின்றன. இன்னும் சொல்வதென்றால், அவை கதவுகளுக்கு அருகில் வந்து விட்டதை நான் காண்கின்றேன். உலகம் ஒரு கியாமத்தின் காட்சியைக்**

**கண்டு கொள்ளும். பூகம்பங்கள் மட்டுமின்றி வேறு பல அச்சுறுத்தும் ஆபத்துகளும் வெளிப்படும். அவற்றில் சில விண்ணிலிருந்தும் மற்றும் சில ஆபத்துகள் பூமியிலிருந்தும் வெளிப்படும். மனிதயினம் தன்னைப் படைத்த இறைவனை வணங்குவதை விட்டு விட்டதே இதற்கான காரணமாகும். அவர்கள் முழு உள்ளத்துடனும் தைரியத்துடனும் முழுமையான எண்ணங்களாலும் உலகத்தின் மீதே வீழ்ந்து விட்டனர். நான் வராமல் இருந்திருந்தால் இந்த துன்பங்கள் வருவதிலும் காலதாமதம் ஏற்பட்டிருக்கும். நான் வந்ததுடன் ஒரு நீண்ட காலமாக மறைந்திருந்த இறைவனது கோபத்தை வெளிப்படுத்துகின்ற அந்த எண்ணங்கள் வெளிப்பட்டு விட்டன.**

இது தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَا كُنَّا مُعَذِّبِيْنَ حَتّٰى نَبْعَثَ رَسُوْلًا

நாம் தூதரை அனுப்பாத வரை எவருக்கும் தண்டனையை இறக்குவதில்லை (17:16)

தவ்பா செய்பவர்கள் நிம்மதியைப் பெறுவர். துன்பம் வருவதற்கு முன்பே அஞ்சுபவர்கள் மீது கருணை காட்டப்படும். இந்த பூகம்பங்களில் இருந்து நீங்கள் நிம்மதியாக இருப்பீர்கள் என்றோ அல்லது உங்களது திட்டங்களால் உங்களை நீங்களே இதிலிருந்தும் காப்பாற்றிக் கொள்வீர்கள் என்றோ எண்ணுகின்றீர்களா? ஒருபோதும் அவ்வாறு நடக்காது. மனிதர்களின் பணிகள் அந்த நாளில் முடிவுக்கு வந்து விடும். அமெரிக்கா போன்ற நாடுகளில் கடுமையான பூகம்பங்கள் வந்துள்ளன. ஆனால் நீங்கள் இருக்கும் நாடு மட்டும் இவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றது என்று மட்டும் கருதாதீர்கள். இதை விட கடுமையான நாட்கள் வருவதை நீங்கள் காண்பீர்கள். அதை நான் காண்கின்றேன்.

**ஐரோப்பாவே! நீயும் அமைதியில் இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வசிப்பவர்களே! எந்தவொரு கற்பனைக் கடவுளும் உங்களுக்கு உதவப் போவதில்லை. நகரங்கள் வீழ்வதையும் மக்கள் குடிபுகுந்துள்ள இடங்கள் பாழாகுவதையும் நான்**



**காண்கின்றேன். தனித்த அந்த ஏக இறைவன் நீண்ட காலம் வரை அமைதியாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க பணிகள் நடந்தன. அவ்வாறிருந்தும் அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் திகில் நிறைந்த தோற்றத்துடன் தனது முகத்தைக் காட்டுவான். எவருக்கு காதுகள் உள்ளனவோ அவர்கள் இதை கேட்க வேண்டும். அந்த நேரம் வெகு தொலைவில் இல்லை.** இறைவனின் பாதுகாப்பின் கீழ் உங்கள் அனைவரையும் ஒன்றுதிரட்ட வேண்டும் என்று நான் முயற்சி செய்தேன். ஆனால் இறைவனது விதியில் எது எழுதப்பட்டுள்ளதோ அது நிறைவேற வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. இந்த நாட்டிற்கான முறையும் மிக அருகில் வந்து விட்டது என்பதை உண்மையாகவே நான் கூறிக் கொள்கின்றேன். நூஹின் காலகட்டம் உங்களது கண்களுக்கு முன்னால் வந்து விடும். லூத்தின் பூமியில் நடந்த சம்பவத்தை நீங்கள் உங்களது கண்களால் காண்பீர்கள். ஆனால் இறைவன் தனது கோபத்தை வெளிப்படுத்துவதில் மெதுவாக செயல்படுகின்றான். எனவே, உங்கள் மீது கருணை காட்டப்படுவதற்காக நீங்கள் தவ்பா செய்யுங்கள். எவர் இறைவனை கைவிட்டு விடுவாரோ அவர் ஒரு கிருமி ஆவார்; மனிதரல்ல. எவர் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவர் ஆவார்; உயிருள்ளவர் அல்ல.

(ஹகீகத்துல் வஹீ ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 268-269)

## இஸ்லாத்தின் இழந்துபோன மகிமையை சரிசெய்வதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து முயற்சி செய்வது அவசியமானதாகும்

எனவே, இன்று மார்க்கத்தை உயிர்ப்பிப்பதற்காகவும் இஸ்லாம் இழந்து விட்ட மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும் பெருமானார் (ஸல்) அவர்களை தற்காப்பதற்காக நிற்பதற்காகவும் அல்லாஹ் தனது எந்த பயில்வானை நிறுத்தியுள்ளானோ அவருக்குப் பின்னால் சென்றவாறு அவர் வழங்கியுள்ள தெளிவுகள் மற்றும் ஆதாரங்கள் மூலம் இந்தப் பணியை நாம் செய்ய முடியும். இவற்றை

அல்லாஹ்வே அவர்களுக்கு கூறியுள்ளான். இந்தப் போதனைக்கேற்ப செயல்படுவதன் மூலம் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை முழுமையான மகிமையுடன் நான் உலகின் பறக்க விட முடியும் இன்சா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தக் காலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறும் மக்களுக்கு கவனமூட்டியவாறும் இவ்வாறு கூறுகின்றார்கள்:

சுருக்கமாக அவர்கள் கூறியது இதுவாகும். அதாவது இஸ்லாத்தின் மீது கடுமையான நாட்கள் வரும். எனவே, அல்லாஹ் இஸ்லாம் இழந்து போன அந்த மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். நீங்கள் உங்களது பிடிவாதத்தை விட்டு விடுங்கள். இத்தகைய சூழ்நிலையிலும் கூட நாலாபுறமும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல்கள் நடைபெறுகின்ற போது அவர்களது கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக அவன் ஆவேசத்துடன் எழ மாட்டானா? என்று அல்லாஹ் முஸ்லிம்களிடம் கேட்கின்றான். ஏனென்றால் அவனே பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சாந்தியைப் பொழிந்து கொண்டிருக்கின்றான். முழுமையான மேற்கோள் இதுவாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த காலகட்டம் எவ்வளவு அருளுக்குரிய காலகட்டமாக இருக்கிறது. இறைவன் இந்த துன்பம் நிறைந்த நாட்களில் முழுக்க முழுக்க தனது அருளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகிமையை வெளிப்படுத்துவதற்காக மறைவிலிருந்து இஸ்லாத்திற்கு உதவி செய்வதற்கான ஏற்பாட்டை செய்ய நாடியுள்ளான். அதற்காக இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். இஸ்லாத்திற்காக தங்களது உள்ளத்தில் வேதனைப்படுகின்ற அந்த மக்களிடம் நான் கேட்க விரும்புகின்றேன். எவர்களது உள்ளத்தில் இஸ்லாத்திற்காக கண்ணியமும் மதிப்பும் இருக்கின்றதோ அவர்கள் இந்த காலத்தை விட இஸ்லாத்திற்கு துன்பமான வேறு எந்தக் காலகட்டம் இருந்தது என்பதைக் கூற முடியுமா? இந்தக் காலகட்டத்தை விட வேறு எப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்



மீது இந்த அளவு ஏச்சுப் பேச்சுகள் கூறப்பட்டுள்ளன. மேலும் வேறு எப்போது இந்த அளவு அவர்கள் இழிவுபடுத்தப்பட்டுள்ளனர். வேறு எப்போது இந்த அளவு திருக்குர்ஆனுக்கு இழிவு ஏற்பட்டுள்ளது என்பதை அவர்கள் கூறட்டும். முஸ்லிம்களின் நிலைமையின் மீது எனக்கு மிகவும் கடுமையான துக்கமும் துயரமும் ஏற்படுகிறது. சில நேரங்களில் இந்த துக்கத்தால் நான் நிம்மதியிழந்து விடுகின்றேன். இந்த அவமரியாதையை அவர்கள் உணரும் வகையில் இந்த அளவில் கூட அவர்களிடம் இதற்கான உணர்வு எஞ்சியிருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சிறிதளவு கண்ணியப்படுத்துவதற்கு கூட இறைவனால் முடியவில்லையா? இந்த அளவு அவர்களை ஏசிப் பேசியும் கூட அதை மறுப்பதற்கு விண்ணிலிருந்து ஓர் இயக்கத்தை அவன் ஏற்படுத்த மாட்டானா? இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைத்து அவர்களது மகிமையையும் தூய்மையையும் உலகில் பரவும்படி செய்ய மாட்டானா? ஏனென்றால் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சாந்தியை பொழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் இழிவுபடுத்தப்படும் இந்த சமயத்தில் அத்தகைய சாந்தியை வெளிப்படுத்துவது எந்த அளவு கட்டாயமானதாக இருக்கின்றது. அதை வெளிப்படுத்துவதற்கே அல்லாஹ் இந்த இயக்கத்தின் வடிவில் அதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான். (மல்பூஸாத் தொகுதி 3, பக்கம் 8-9, 2003 ஆம் ஆண்டு பதிப்பு) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த சொற்றொடர்களில் இருந்து தங்களைஅவர்களுடன் தொடர்புபடுத்தி கூறும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எந்த அளவு பெரிய பொறுப்பு இருக்கிறது என்பது தெரிய வருகின்றது.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக இந்த அளவு அவமரியாதையான செயல்கள் செய்யப்படும் போது நிச்சயமாக அல்லாஹ்வின் மலக்குகளும் அவர்கள் மீது சாந்தியை இறக்கும்படி இறைவனிடம் துஆ செய்து கொண்டிருப்பர்; துஆ செய்து கொண்டும் இருக்கின்றனர். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பராகவும் காலத்தின் இமாமாகவும் இருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு தங்களை

இணைத்துக் கொண்டுள்ள அவர்களது இந்த ஜமாஅத்தின் பணி இதுவாகும். அதாவது, அவர்கள் தங்களுடைய துஆக்களை ஸலவாத்தின் வடிவில் அமைத்துக் கொள்ள வேண்டும். எந்த அளவு தூய உள்ளத்துடன் ஸலவாத்தால் இந்த முழு பிரபஞ்சத்தையும் அவர்கள் நிரப்ப வேண்டும் என்றால் அதன் ஒவ்வொரு அணுக்களும் இதன் நறுமணத்தைப் பெற வேண்டும். நமது எல்லா துஆக்களும் இந்த தரூதின் மூலமாக இறைவனுடைய சந்நிதியில் சென்று சேர வேண்டும். அந்த துஆக்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியைப் பெற வேண்டும். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நாம் வைத்துள்ள அன்பு மற்றும் நேசத்தின் வெளிப்பாடாகும். இத்தகைய நேசத்தை பெருமானார் (ஸல்) அவர்களது குடும்பத்தின் மீதும் நாம் வைத்திருக்க வேண்டும். அல்லாஹ் முஸ்லிம் உம்மத்திற்கும் அறிவை வழங்குவானாக! அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக! மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீக மகனின் ஜமாஅத்தில் இணைவதற்கான வாய்ப்பை வழங்குவானாக! அந்த ஜமாஅத் தான் சமாதானம், அமைதி, நேசம் ஆகியவற்றின் சூழலை மீண்டும் உலகில் ஏற்படுத்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இந்த மக்களுக்கு அறிவை வழங்குவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தங்களுக்கு தொடர்பு இருப்பதாக இவர்கள் கூறினாலும் இன்று பாருங்கள்! 1400 வருடங்களுக்கு பிறகு முஹர்ரமின் இந்த மாதத்தில் இதே பூமியில் மீண்டும் முஸ்லிம்கள் முஸ்லிம்களின் இரத்தத்தை ஓடச் செய்கின்றனர். இதுவரை அவர்கள் படிப்பினை பெறவில்லை. இதுவரை தொடர்ந்து இரத்தத்தை ஓடச் செய்து கொண்டே இருக்கின்றனர். அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! இத்தகைய செயல்களிலிருந்து இவர்களை விலக்கி வைப்பானாக! அவர்கள் தங்களது உள்ளத்தில் இறையச்சத்தை உருவாக்கக் கூடியவர்களாகவும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப செயல்படுபவர்களாகவும் இருப்பார்களாக! இக்காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொள்ளாத காரணத்தால்



இவையெல்லாம் நடக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளையை மறுத்ததன் காரணமாக இவையெல்லாம் நடக்கின்றன.

எனவே, இன்று ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த விசயத்தில் மாபெரும் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் இந்த காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொண்டனர். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் உணர்வு காரணமாக அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் ஓத வேண்டும். உங்களுக்காகவும் மற்ற முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அதன் மூலம் அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசம் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால், நாம் நமது துஆக்களில் முஸ்லிம் உம்மத்திற்காக அதிகமான நேரத்தை துஆவிற்காக ஒதுக்க வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்களின் எண்ணங்கள் சரியானதாக இல்லை. எத்தகைய துன்பங்களிலும் சோதனைகளிலும் முஸ்லிம்கள் பீடிக்கப்படப் போகின்றனர் என்று நமக்கு தெரியாது. என்னென்ன திட்டங்கள் அவர்களுக்கு எதிராக உள்ளன. அதனை முஸ்லிம்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்றும் தெரியவில்லை. அல்லாஹ்வே இவர்கள் மீது கருணை காட்டுவானாக!

அல்லாஹ் நம்மை எப்போதும் நேரான வழியில் நடத்துவானாக! அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் அடியார்களாக நாம் ஆவோமாக! அவன் நமக்கு இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியதற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு அதற்கேற்ப நாம் நமது உரிமைகளை செலுத்துவதற்குரிய வாய்ப்பையும் அல்லாஹ் வழங்குவானாக! மேலும் எப்போதும் தனது திருப்தியின் வழிகளில் வழிநடத்துவானாக!

**(24.02.2006 அன்று இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் நிகழ்த்திய ஜுமுஆ பேருரை – உஸ்வயே ரஸூல் (ஸல்) அவ்ர் ஹாக்கோன் கி ஹகீகத் பக்கம் 64–65)**

**அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம்**

**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

**(அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள்**

**2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்**

**21 ஆம் தேதி அன்று நிகழ்த்திய ஜுமுஆ உரை**

**மற்றும் *Press Conference* தொடர்பாக**

**சில உலகளாவிய மீடியாக்கள்**

**கூறியுள்ள கருத்துக்கள்**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

Ahmadiyya Muslim Jamaat
INTERNATIONAL

*Press Desk London*
*22 September, 2012*

## இஸ்லாத்திற்கெதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படத்திற்கு முஸ்லிம்களின் உலகளாவிய தலைவரின் கண்டனம்

### அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

முஸ்லிம்கள் வெளிப்படுத்தியுள்ள துக்கமும், கோபமும் முழுமையான முறையில் சரியானதே. ஆனால் தீவிரவாதமான முறையில் எதிர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும். உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர், ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முழு உலகிலும் உள்ள முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய Innocence of Muslims என்ற திரைப்படத்திற்கு எதிராக கண்டனம் தெரிவிப்பதற்காக முழு உலகிலுள்ள முஸ்லிம்களும் அமைதியான வழிமுறைகளை மேற்கொண்டவாறு ஒன்றுபட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். கருத்து சுதந்திரத்திற்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்போது தான் எல்லா மக்களது மத உணர்வுகளையும் பாதுகாக்க முடியும் என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார். வாரந்தோறும் அவர்கள் நிகழ்த்தும் ஜுமுஆ உரையில் கடந்த செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி இலண்டனிலுள்ள மஸ்ஜிது பைத்துல் ஃபுதூஹில் அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள்:

முழு உலகிலுள்ள முஸ்லிம்களுக்கும் இந்த திரைப்படத்தினாலும், ஒரு புகழ்பெற்ற ஃபிரான்ஸிலுள்ள பத்திரிகை சார்பாக ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது கேலி சித்திரத்தை மீண்டும் வெளியிட வேண்டும் என்ற முடிவினாலும் மிகுந்த துக்கம் ஏற்பட்டுள்ளது.



தகவல் தொடர்பு சாதனங்களின் பிரதிநிதிகளான B.B.C. News, B.B.C. News Night, Sky News, Sky Arabic, Writters Press Association மற்றும் ஏனைய பல்வேறு நிறுவனத்தை சார்ந்தவர்கள் ஜுமுஆ பேருரை நடந்த அந்த சந்தர்ப்பத்தில் அங்கு இருந்தனர். அவர்கள் ஜுமுஆ பேருரைக்குப் பிறகு ஹுஸுர் அவர்களை சந்திப்பதற்கான நற்பேற்றை பெற்றனர். ஹுஸுர் அவர்கள் தமது உரையில், இஸ்லாத்திற்கெதிராக இருக்கும் இந்த திரைப்படம் மற்றும் இதைப் போன்ற மற்ற தாக்குதல்களுக்குப் பின்னால் இஸ்லாம் தொடர்பாக இஸ்லாத்தின் எதிரிகளுக்கு ஒரு நிரந்தர அச்சம் இருப்பது தெரிய வருகிறது எனக் கூறினார்கள். ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

கருத்து சுதந்திரம் என்ற பெயரில் இத்தகைய இழிவான செயல்களை இவர்கள் செய்ய முற்பட்டிருப்பது இஸ்லாத்திற்கு எதிரில் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அவமானமும், தோல்வியுமாகும். ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள், பல்வேறு முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதிகளின் தரப்பிலிருந்தும் செய்யப்பட்டுள்ள தீவிரவாத செயல்களை வன்மையாக கண்டித்துள்ளார்கள். வெளிநாட்டுத் தூதுவர்களையும், வெளிநாட்டு தூதரக அலுவலகத்துடன் தொடர்புடைய ஏனைய அப்பாவி மக்களையும் கொலை செய்வது இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் எதிரான விசயம் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். சொத்துக்களையும், கட்டடங்களையும் தீக்கிரையாக்குவது முற்றிலும் தவறாகும். இதனால் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த விரும்புகின்ற (இஸ்லாத்தின் எதிரிகளாகிய) அத்தகைய மக்களுக்கு மட்டுமே பலன் கிடைக்கின்றது.

சில உரிமைகளை விட வேறு சில உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக தனது கருத்தை எடுத்துக் கூறியவாறு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

கருத்து சுதந்திரம் என்ற பெயரில் முழு உலத்தின் அமைதியையும் நாசமாக்கிவிடக் கூடாது. மற்றவர்களது மத உணர்வுகளை காயப்படுத்தி அப்பாவி மக்களது துன்பத்திற்கு காரணமாக இருக்கின்ற இத்தகைய திரைப்படங்களையும் கேலி சித்திரங்களையும் உருவாக்குகின்ற

மக்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து உலகில் வெறுப்புணர்வுகளை அதிகமாக்குவதில் நாம் எந்த வகையிலும் துணை போகவில்லையே என சிந்திக்க வேண்டுமென்று ஹுஸுர் அவர்கள் உலகத் தலைவர்களிடமும், பொது மக்களிடமும் கேட்டுக் கொண்டார்கள்.

வன்முறையைத் தூண்டுபவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர் நடவடிக்கை பற்றி கூறியவாறு ஹுஸுர் அவர்கள் முழு உலகிலுள்ள முஸ்லிம்களும் ஒன்றுபட்டு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இதற்கு பதில் கூற வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். முஸ்லிம் அரசாங்கங்களும் மேற்கத்திய நாடுகளில் வசிக்கின்ற முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் அமைதி நிறைந்த போதனைகளை உலகின் முன்னால் தெளிவாக எடுத்துக்கூற வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் ஹுஸுர் அவர்கள் எப்போதும் ஒவ்வொரு மட்டத்திலும் இம்மக்கள் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய நல்லொழுக்கத்தை தற்காத்துக் கொள்வதற்காக ஒன்றுபட்ட மற்றும் அமைதி நிறைந்த வழிமுறைகளை கடைபிடிக்குமாறு அறிவுரை வழங்கினார்கள். ஹுஸுர் அவர்கள் கூறினார்கள் :

கடுமையாக நடந்து கொள்வது இதற்கான பதில் ஆகாது. நான் தற்போது கூறிவந்தது தான் இதன் பதிலாகும். அதாவது தமது செயல்களை சீர்திருத்திக் கொள்வது, மனித இனத்திற்கு ஈடேற்றத்தை வழங்கிய அந்த நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத்தும் ஸலாமும் ஓதுவது, உலக முயற்சிகளை செய்வதற்காக முஸ்லிம் நாடுகள் ஒன்றுபடுவது, மேற்கத்திய நாடுகளில் வசிக்கின்ற முஸ்லிம்கள் தமது வாக்குரிமைக்கான சக்தியை நம்ப வைத்தல் ஆகியவையே இதற்கான பதிலாகும்.

கடந்த சில வருடங்களாக இஸ்லாத்தின் மீது இத்தகைய தாக்குதல்கள் அதிகரித்திருந்தாலும் சில முஸ்லிம்களின் பொருத்தமற்ற நடவடிக்கையும் கூட கண்டிக்க தக்கவையாகும் என்ற விசயத்தின் பக்கம் ஹுஸுர் அவர்கள் கவனமூட்டினார்கள். பெரும்பாலான நேரங்களில்



மற்றவர்கள் குழப்பத்தை தூண்டக்கூடியவர்களாக மாறுவதில் முன்னோடியாக இருந்திருக்கின்றனர் என்பதையும் மறந்து விடக் கூடாது.

ஹுஸுர் அவர்கள் இஸ்லாத்தின் சரியான முகத்தை உலகின் முன்னால் எடுத்துக் காட்ட அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வரும் முயற்சிகளைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்:

அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் உலகிற்கு தொண்டு செய்வதற்கான எந்தவொரு வாய்ப்பையும் கைவிடுவதில்லை. கடந்த வருடம் அமெரிக்காவில் இரத்தம் தேவைபட்ட போது அஹ்மதிகளாகிய நாங்கள் 12,000 பாட்டில் இரத்தம் இதற்காக ஒன்று சேர்த்து வழங்கினோம். இந்த வருடம் மீண்டும் அவர்கள் ஒன்று திரட்டுகின்றனர். இன்றைய நாட்களில் இந்த Drive இருந்து வருகிறது. அவர்களிடம் நான் கூறினேன். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் வாழ்வை வழங்குவதற்காக எங்களது இரத்தத்தை தருகின்றோம். நீங்கள் உங்களது இந்த செயல்களாலும் இத்தகைய செயல்களை செய்பவர்களுடன் சேர்ந்து ஆமாம் போடுவதன் மூலமாகவும் எங்களது உள்ளங்களை காயப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள்.

இறுதியில் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை கேலி செய்து இழிவுபடுத்துவதற்காக செய்யப்பட்ட எல்லாவிதமான முயற்சிகளும் தோல்வியை தழுவியதை குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்:

காலத்தின் இமாமின் இந்த கூற்றை நினைவில் வையுங்கள். அதாவது ஒவ்வொரு வெற்றியும் விண்ணிலிருந்து வருகின்றது. எந்த தூதரை நீங்கள் இழிவுபடுத்த முயற்சி செய்கின்றீர்களோ அவர் உலகை வெற்றி கொள்வார் என வானம் தீர்ப்பு எழுதிவிட்டது.

ஜுமுஆ உரைக்குப் பிறகு நடந்த Press Conference-ல் (புத்திரிகையாளர் கூட்டத்தில்) உரை நிகழ்த்தியவாறு ஹுஸுர் அவர்கள் Press-ன் பிரதிநிதிகளிடம் முஸ்லிம்கள் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஈடு இணையற்ற அன்பை வைத்துள்ளனர். ஒருவருக்கு பிரியமான பெருந்தகையை பரிகாசம் செய்யும் போது எவருக்கும் அதனால் துன்பம்

ஏற்படுகிறது. இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலும் முஸ்லிம்களை காயப்படுத்துகின்றது.

மேற்கூறப்பட்ட திரைப்படம் வெளியிடப்பட்டதன் விளைவாக நடைபெற்ற ஒரு தீவிரவாத போராட்டம் தொடர்பாக ஒரு கேள்விக்கு பதில் கூறும் போது, அப்படிப்பட்ட போராட்டங்கள் பொருத்தமற்றவையாகும். (வெளிநாட்டு தூதுவர்களையும், தூதரக பணியாளர்கள் உட்பட எந்தவொரு பாவமற்ற மனிதரையும் கொலை செய்வது இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் மாற்றமானதாகும் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

எல்லாவிதமான கண்டனங்ளையும் சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு அமைதி நிறைந்த வழிமுறைகள் மூலம் செய்யப்பட வேண்டுமென்றும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.



THE EXPRESS TRIBUNE with the International New York Times

*The Express Tribune*
*23 September, 2012*

## இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படம்

இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டிருக்கும் திரைப்படத்தின் மீது முஸ்லிம்கள் துக்கத்தையும் துயரத்தையும் வெளிப்படுத்துவது எல்லா வகையிலும் அனுமதிக்கப்பட்டதாகும்

கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கான வரம்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் மூலம் மக்களின் மன உணர்வுகள் பாதுகாக்கப்பட முடியும்.

இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டிருக்கும் திரைப்படத்தின் மீது முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும் முஸ்லிம்கள் வெளிப்படுத்தியுள்ள துக்கமும் கோபமும் எல்லா வகையிலும் அனுமதிக்கப்பட்டதேயாகும். ஆயினும் தீவிரவாத எதிர் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறியுள்ளார். மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம்) அவர்கள் மீடியாக்களில் பிரதிநிதிகளிடம் பேசும் போது உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒன்றிணைந்து இந்த திரைப்படத்திற்கு எதிராக அமைதி நிறைந்த கண்டனத்தை தெரிவிக்க வேண்டும். இத்திரைப்படம் முழு இஸ்லாமிய உலகிலும் கடும் துக்கம், வருத்தம், கோபம் ஆகிய உணர்வுகளை தூண்டியிருக்கிறது. கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கான எல்லைகளும் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் மூலம் மத உணர்வுகள் பாதுகாக்கப்பட முடியும். இந்த விசயத்தின் தேவையையும் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் வலியுறுத்திக் கூறினார்கள்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் கீழ்காணும் மேற்கோள் இடம் பெற்றுள்ளது:

இது இஸ்லாத்திற்கு எதிரில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவும், தோல்வியும் ஆகும். அது கருத்து சுதந்திரம் என்ற பெயரில் அவர்களை இழிவான செயல்களை செய்ய வைத்திருக்கின்றது. கருத்து சுதந்திரம் என்ற பெயரில் முழு உலகத்தின் அமைதியையும் அழிப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது. மஸ்ரூர் சாஹிப் அவர்கள் பல்வேறு நாடுகளில் நடக்கின்ற வெளிப்படையான தீவிரவாதத்தைக் கொண்ட எதிர் நடவடிக்கைக்கு மிகவும் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளார்கள். அதன் விளைவாக பல அப்பாவி மக்களும் (இவர்களில் சில நாடுகளின் தூதுவர்களும் அடங்குவர்) கொல்லப்பட்டுள்ளனர்.

சொத்துக்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதும், கட்டடங்களுக்கு தீ மூட்டுவதும் முற்றிலும் அனுமதிக்கப்படாத செயலாகும். மேலும் இதனால் எந்தவொரு பிரிவினருக்கும் எந்தவொரு பலனும் ஏற்படாது என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.



THE TIMES OF INDIA

*Times of India*
*26 September, 2012*

Times of India தமது 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

**இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படம்: அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதி மாநாட்டை நடத்தும்**

அமிர்தசரஸ்: ஒரு புறம் முழு உலகிலுமுள்ள முஸ்லிம்களும் அவர்களது மத உணர்வுகளை காயப்படுத்தியுள்ள, சண்டை சச்சரவிற்கு காரணமாக இருந்த Innocence Of Muslims என்ற திரைப்படம் தொடர்பான தங்களது கடுமையான துக்கத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ள அதே நேரத்தில் மறுபுறம் அஹ்மதிய்யா ஜமாஅத் குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள தமது தலைமையகமான காதியானில் செப்டம்பர் 30 ஆம் தேதி ஒரு அமைதி மாநாட்டை நடத்த தீர்மானித்திருக்கின்றது. உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் அவர்களின் ஒரு கட்டளையை நிறைவேற்றும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் (அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர்) அவர்கள் முழு உலகிலுமுள்ள முஸ்லிம்களிடமும் இந்த திரைப்படத்திற்கு எதிராக அமைதியான வழிமுறையை கடைபிடித்தவாறு ஒன்றிணைய வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். இத்திரைப்படத்தின் Trailor (ஒத்திகை) வெளிவந்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள தீவிரவாத அலை, அப்பாவி மக்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் ஆகியவற்றைப் பற்றி தனது மாறுபட்ட கருத்தை தெரிவித்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் பல்வேறு நாடுகளில் நடக்கின்ற தீவிரவாத செயல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட அப்பாவி மக்களை கொலை செய்வது எத்தகைய செயல் என்றால் அது முழுக்க முழுக்க இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானதாகும். சொத்துக்களுக்கு இழப்பை ஏற்படுத்துவது அல்லது கட்டடங்களுக்கு தீ வைப்பது ஆகியவை முற்றிலும் அனுமதியில்லாத செயலாகும். இதனால் இஸ்லாத்திற்கு அவப்பெயரை

ஏற்படுத்த விரும்புகின்ற அந்த மக்களுக்கே தவிர வேறு எந்தவொரு பிரிவுக்கும் எந்த பயனும் கிடைக்காது. நாம் வெறுப்பை அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கின்ற ஏதாவது ஒரு செயலை செய்கின்றோமா அல்லது நாம் ஒன்றாக இணைந்து அறிவுப்பூர்வமான எதிர் நடவடிக்கையை மேற்கொள்கின்றோமா என்ற விசயத்தை நாம் சிந்திப்பது அவசியமானதாகும்.

முஸ்லிம் அரசாங்கங்களும் மேற்கத்திய நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம்களும் உலகில் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான மற்றும் அமைதியை விரும்புகின்ற போதனைகளை பரப்புவதற்கு ஒன்றுபட வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள்.

(கலீஃபா) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு இடத்திலும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய நல்லொழுக்கத்தை காப்பதில் ஒன்றுபட்ட, அமைதியை விரும்புகின்ற ஒரு வழிமுறையை கடைபிடிக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் Press Committee –யின் பொறுப்பாளரான மதிப்பிற்குரிய செய்யது துஃபைல் அஹ்மது செஹ்பாஸ் சாஹிப் அவர்கள் (அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக நடத்தப்படவிருக்கும்) இந்த அமைதி மாநாட்டில் அரசியல் தலைவர்களுடன், எல்லா மார்க்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளார்கள்.



*Ottawa Citizen Newspaper*
*30 September, 2012*

கனடாவின் ஒரு புகழ்பெற்ற செய்தித்தாளான Ottawa Citizen (ஓடோவா சிடிஸன்) தனது செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வெளியீட்டில் இவ்வாறு எழுதுகின்றது:

Ottawa வின் முஸ்லிம் தலைவர் இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படத்திற்கு எதிராக ஏற்பட்ட கலவரத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்

Ottawa வில் வசித்து வருகின்ற ஒரு முஸ்லிம் பிரிவின் தலைவர் அவர்கள் மிகவும் வீணான, இழிவான, வன்முறையை தூண்டக்கூடிய திரைப்படத்திற்கு எதிராக இத்தகைய தீவிரவாத எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இதனால் கொலைகள் நடந்துள்ளன. லிபியாவில் உள்ள Benghazi –ல் உள்ள ஆலோசனை சபை அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் விளைவாக ஒரு அமெரிக்க தூதுவரும், தூதரக அலுவலக பணியாளர்களில் மூன்று நபர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர். Cumber Land –ல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆன்மீக தலைமையகத்தில் சனிக்கிழமை அன்று மாலை ஒரு மாநாட்டில் இமாம் இம்தியாஸ் அஹ்மது அவர்கள் ஜமாஅத் சகோதரர்களை நோக்கி, Innocence Of Muslims என்ற திரைப்படத்திற்கு எதிராக அமைதியான வழிமுறையினால் கூட கண்டனம் தெரிவிக்க முடியும் என்றும் 14 நிமிடங்கள் ஓடுகின்ற இந்த தரக்குறைவான – தொழிலுடன் தொடர்பில்லாத திரைப்படமானது அமெரிக்காவில் தயார் செய்யப்பட்டுள்ளது. இணையதளத்தில் அது வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினார்கள். படத்தின் தயாரிப்பாளர் இந்த படத்தை தயார் செய்து ஒரு வெட்கங்கெட்ட, வீணான, இழிவான செயலை செய்துள்ளார். அது முழு இஸ்லாமிய உலகிலும் அமைதின்மையை ஏற்படுத்திவிட்டது. ஒவ்வொரு முஸ்லிமும் இதற்கு எதிராக தனது எதிர் நடவடிக்கையை மேற்கொள்கின்றார்.

அவர்கள் கொடிகளை எரித்தும், பொருள்களை உடைத்தும், தூதரக அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தியும் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்று இமாம் இம்தியாஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறினார்கள். போராட்டம் நடத்தக் கூடியவர்கள் கொடிகளை எரித்தும், சொத்துக்களையும், தூதரக அலுவலகங்களையும் எரித்து, தூதுவரை கொலை செய்து அவர்கள் பழிவாங்கி விட்டதாக கருதுகின்றனரா? நிச்சயமாக இது இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரான செயல்களாகும். இது உண்மையான இஸ்லாம் அல்ல.

அஹ்மதி ஒரு சிறுபான்மை முஸ்லிம் பிரிவாகும். அது மதங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் செய்வதை ஏற்றுக் கொள்கின்றது. அஹ்மது சாஹிப் அவர்களின் கூற்றிற்கு ஏற்ப Cumber Land –ல் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை 500 ஆகும். அஹ்மது சாஹிப் அவர்கள் உலகிலுள்ள பல முஸ்லிம் தலைவர்களைப் போன்றே இந்தத் திரைப்படம் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்ற அடிப்படையான கொள்கையின் வட்டத்திற்குள் தான் வருகிறது என்று கருதுகின்றவர்களுக்கு ஆதரவளிப்பதை வலுவாக மறுத்து விமர்சித்து கூறியுள்ளார்.

மேலும் எந்தவொரு மதத்துடனும் தொடர்புடைய தூய சான்றோர்கள் தொடர்பாக எவ்வகையிலும் இழிவாக பேசுவதற்கு எந்நிலையிலும் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்திக் கூறுவது என்று ஒருபோதும் பெயர் வைக்க முடியாது எனவும் இம்தியாஸ் அஹ்மது குறிப்பிட்டார்.

கடந்த வாரம் இலண்டனில் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இந்த திரைப்படத்திற்கு எதிராக அமைதியான வழிமுறைகளை கடைபிடித்தவாறு ஒன்றுபட வேண்டுமென்று எல்லா முஸ்லிம்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் அவர்கள் கலவரத்தில் ஈடுபடுவதை கண்டித்துள்ளார்கள். மத கொள்கைகளை பாதுகாப்பதற்காக கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கென்று சில வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும் என்ற ஆலோசனையையும் கூட ஹஸ்ரத் மிர்ஸா



மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துதல் என்ற பெயரில் உலக அமைதியை அழிப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது.

Ottawa வின் மஸ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் உவைஸ் மஹ்மூத் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:–

பாகிஸ்தானிலுள்ள தனது குடும்பத்திலுள்ள நபர்கள் தொடர்பாக தாம் கவலைப்படுவதாகவும், AFP –யின் செய்தியின்படி, இந்த திரைப்படத்தின் விளைவாக ஏற்பட்ட கலவரங்களில் 21 பேர் அங்கு கொல்லப்பட்டிருப்பதாகவும், 200 –க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இஸ்லாம் நமக்கு நன்றியுணர்வுடன் நடந்து கொள்வது பற்றிய பாடத்தை புகட்டியுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் பாகிஸ்தானில் மக்கள் தங்களது உடைமைகளையே அழிக்கின்றனர். மேலும் தங்களது அண்டை வீட்டாருக்கு இழப்பை ஏற்படுத்துகின்றனர். தங்களது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு இது பொருத்தமான வழிமுறை அல்ல.

பெண்கள் அமைப்பின் தலைவியான யாஸ்மீன் என்பவர் ஒரு அமைதி நிறைந்த தீர்வை ஆலோசனையாக எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

கலவரத்தில் ஈடுபடுவது, எரிப்பது, முற்றுகையிடுவது ஆகியவற்றிற்கு பகரமாக நாம் பேனாவின் மூலமாக நமது தூதுச் செய்தியை மக்கள் வரை எட்ட வைக்க வேண்டும் என்ற விசயத்தில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது.

*Wandsworth Guardian UK*
*24 September, 2012*

## ஒரு இஸ்லாமிய தலைவர் திரைப்படத்திற்கு எதிராக நடக்கின்ற அழிவை ஏற்படுத்துகின்ற போராட்டங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்

ஒரு மார்க்க ஜமாஅத்தின் ஆன்மீக தலைவர் ஜுமுஆ நாளன்று தமது வணக்கஸ்தளத்திற்கு அவருடைய சொற்பொழிவை கேட்பதற்காக வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால் இஸ்லாத்திற்கு எதிரான ஒரு திரைப்படத்திற்கு எதிராக முழு உலகிலும் நடக்கின்ற தீவிரவாத போராட்டங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சகோதரர்கள் இலண்டன் Morden –லுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அவர்களின் சொற்பொழிவை கேட்பதற்காக ஒன்று திரண்டிருந்தனர். அச்சொற்பொழிவு ஒரு மணி நேரம் நிகழ்த்தப்பட்டது. முழு உலகிலும் நேரடியாக ஒளிபரப்பாகும் தமது இந்த சொற்பொழிவில் அவர்கள் போராட்டம் நடத்தியவர்களின் செயல் முறை தொடர்பான தமது வருத்தத்தை வெளிப்படுத்திக் கூறினார்கள். மேலும் அமைதியான வழிமுறையில் இந்த திரைப்படத்திற்கு கண்டனம் தெரிவித்திருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

அமெரிக்காவில் தயாரான ஒரு தரக்குறைவான, தொழிலுடன் சம்பந்தமில்லாத Innocence of Muslims என்ற திரைப்படம் 14 நிமிடங்கள் ஒளிபரப்பப்பட்டது. இந்த மாதத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலும், ஆப்ரிக்கா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் அழிவை ஏற்படுத்தக்கூடிய கலவரத்தை தூண்டியிருக்கின்றது. இந்த திரைப்படத்தின் பல பகுதிகளும் Youtube –ல் வெளியிடப்பட்டுள்ளன. அதில் ஒரு நடிகர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பாத்திரத்தில் நடித்துள்ளார். இந்த செயல் இஸ்லாமிய உலகில் கடுமையாக தடை செய்யப்பட்டுள்ள செயலாக கருதப்படுகின்றது.



இந்த திரைப்படத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் பல பெண்களுடன் விபச்சாரம் செய்ததாகவும், குழந்தைகளுடன் பாலியல் பலாத்காரம் செய்ய அனுமதி வழங்குவதாகவும் காட்டப்பட்டுள்ளது (நவூதுபில்லாஹ்). இது முஸ்லிம்களின் கோபத்தை இன்னும் அதிகமாக தூண்டுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. குத்பாவிற்கு பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:–

நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸஸ்) அவர்களது மகிமைக்கு எதிராக மிகச் சிறிய அளவில் அவர்களை இழிவுபடுத்துவதை கூட சகித்துக் கொள்ள மாட்டோம். உங்களுக்கு முன்னால் உங்களது தந்தையாரை இழிவுபடுத்துவதற்கு கருத்து சுதந்திரம் என்று பெயர் வைக்க முடியமா? நிச்சயமாக நீங்கள் இவ்வாறான செயல்களுக்கு எதிராக கடுமையான எதிர் நடவடிக்கையில் ஈடுபடுவீர்கள். ஹுஸுர் அவர்கள் மற்ற மதங்களை இழிவுபடுத்துவது சட்டத்திற்கு எதிரானது என்று கருதப்பட வேண்டும் எனவும் ஆலோசனை கூறினார்கள்.

தீவிரவாத செயல்கள் மூலம் போராட்டம் நடத்தக் கூடியவர்கள் நிச்சயமாக இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு ஏற்ப செயல்படவில்லை. இவையெல்லாம் அவர்களுக்கு வழிகாட்டும் தலைமை இல்லாததன் விளைவேயாகும் என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள். ஹுஸுர் அவர்கள் மேலும் கூறினார்கள்:–

இந்த முஸ்லிம்கள் எவ்வாறு போராட்டம் நடத்துகின்றனரோ இந்த வழிமுறை சரியானதல்ல.

அமெரிக்காவில் தயாராகியுள்ள திரைப்படம் முழு இஸ்லாமிய உலகிலும் முஸ்லிம்களை, கொலை செய்யும் கலவரத்தில் ஈடுபட தூண்டியிருக்கிறது. பாகிஸ்தானில் செப்டம்பர் 21 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற தீவிரவாத போராட்டத்தில் 21 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். சனிக்கிழமை அன்று பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஓர் அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், எவர் அமெரிக்காவில் வசிக்கின்ற இந்த திரைப்பட தயாரிப்பாளரை கொலை செய்வாரோ அந்த நபருக்கு அவர் ஒரு

லட்சம் டாலர் பரிசாக தருவதாக கூறியுள்ளார். மேலும் அவர் அல்காயிதா மற்றும் தாலிபான் போன்ற தீவிரவாத அமைப்புகளிடம் கூட தற்போது மறைவாக இருக்கின்ற இந்த திரைப்பட தயாரிப்பாளரை பிடிப்பதற்கு உதவி கோரியுள்ளார்.

இதனால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கடுமையான துக்கம் ஏற்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய வாழ்க்கைக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி செய்வது மிகவும் உள்ளங்களை உடைக்கின்ற ஒரு செயலாகும். எங்கள் உள்ளங்கள் இதனால் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது என்று சதர் லஜ்னா இமாயில்லாஹ் நாஸிரா ரஹ்மான் அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் போராட்டம் நடத்துபவர்கள் தொடர்பாக நாஸிரா ரஹ்மான் அவர்கள் கூறும் போது, இத்தகு தீங்குகளை விளைவிப்பவர்களுக்கு தாமே தண்டனை வழங்குவது முஸ்லிம்களின் பணியல்ல. மாறாக, இந்த பிரச்சனைக்கு தீர்வு கிடைக்க மக்கள் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். மேலும் விவகாரங்களை தமது கைகளில் எடுக்கக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தொழுகையாளியான பாட்னாவைச் சார்ந்த அஹ்மது முர்தஸா என்பவர் இப்படிப்பட்ட செயல்களுக்கான பதில் அமைதி நிறைந்த, அறிவு சார்ந்த விவாதத்தின் வடிவில் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறினார். மேலும் அவர், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது எல்லா முஸ்லிம்களும் பேரன்பு வைத்துள்ளனர். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எல்லா மனிதர்களை விடவும் அதிகமாக நேசிக்க வேண்டும் என்ற விசயம் தொடர்பாக சிறு வயதிலிருந்தே எங்களுக்கு போதனை வழங்கப்பட்டிருக்கின்றது.

நாம் மற்றவர்களது உரிமைகளை பறிக்கக்கூடாது. எங்கு மற்றவர்களது உணர்வுகளின் எல்லை ஆரம்பமாகி விடுகின்றதோ அங்கு கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்ற ஒவ்வொருவரது வட்டமும் முடிவிற்கு வந்து விடுகின்றது என்று கூறினார்.



அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள நபர்கள் பாகிஸ்தான் போன்ற தீவிரவாத இஸ்லாமிய நாடுகளில் அமைதி மற்றும் கொடுமைக்கு இலக்காகி உள்ளனர். ஏனென்றால், அவர்கள் தங்களது ஆன்மீக வழிகாட்டி (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அலைஹிஸ் ஸலாம்) அவர்களை இஸ்லாத்தில் தோன்றியுள்ள ஒரு நபி என்று ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் முஸ்லிம் பெரும்பான்மையினர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறுதி நபியாக இருந்தார்கள் என்ற கொள்கையை கொண்டிருக்கின்றனர். 2010 ஆம் ஆண்டு (Wandsworth Guardian UK என்ற) இதே பத்திரிகை இந்த விசயத்தையும் தெளிவுபடுத்தியிருக்கின்றது. அதாவது, தெற்கு இலண்டனில் மார்க்கத்துடன் தொடர்புடைய கடுமையான காழ்ப்புணர்ச்சியுள்ள சில நபர்கள் அஹ்மதிய்யா பிரிவைச் சார்ந்த மக்களுடன் எவ்வாறு பகிரங்கமாகவும், இழிவாகவும் பாகுபாடு காட்டியவாறும் நடந்து கொண்டார்கள். மேலும் அவர்களது வாழ்வாதாரத்தை தடை செய்தனர். அரசியல் வேட்பாளர்களை குறிவைத்து செயல்பட்டனர் என்பதை எடுத்துக் கூறியுள்ளது. இந்த வருடம் லாஹுரில் தீவிரவாதிகள் 93 அஹ்மதிகளை அவர்கள் பள்ளிவாசலில் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்த போது கொலை செய்துள்ளனர். கொலை செய்யப்பட்டவர்களில் Sispara Gardens –ல் South Feilde –ல் வசிக்கின்ற முஹம்மது அஸ்ரஃப் பிலால் அவர்களும் ஒருவராவார். இவர் தமது தொழில் நிமித்தமாக பாகிஸ்தான் சென்றிருந்தார்.

*News Track India*
*24 September, 2012*

**கருத்து சுதந்திரம் என்ற பெயரில் முழு உலகின் அமைதியையும் சீர்குலைய விட்டு விடக்கூடாது - அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**அஹ்மதிய்யா ஜமாஅத் பாகிஸ்தானின் தலைவர் இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படம் தொடர்பாக முஸ்லிம்களின் துக்கமும் கோபமும் எல்லா வகையிலும் அனுமதிக்கப்பட்டது தான் என்று கூறியுள்ளார்**

இஸ்லாமாபாத் – 24 செப்டம்பர் 2012 – ANI

இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள திரைப்படம் தொடர்பாக முஸ்லிம்களின் துக்கமும் கோபமும் எல்லா வகையிலும் அனுமதிக்கப்பட்டதாகும் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் பாகிஸ்தானின் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். என்றாலும் அவர்கள் தீவிரவாத செயல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

The Express Tribune ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறியவற்றிலிருந்து மேற்கோள் காட்டி இவ்வாறு எழுதுகின்றது:-

இது அவர்களுக்கு (அதாவது முஸ்லிம் அல்லாதவர்களுக்கு) இஸ்லாத்திற்கு எதிரில் ஏற்பட்டிருக்கும் இழிவும் தோல்வியும் ஆகும். இது அவர்களை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் இழிவான செயல்களை செய்ய தூண்டுகின்றது.

எந்த திரைப்படம் முழு இஸ்லாமிய உலகிலும் கடுமையான துக்கம், துயரம், கோபம் ஆகியவற்றின் உணர்வுகளை தூண்டியிருக்கின்றதோ அந்த திரைப்படத்திற்கு எதிராக உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒன்றிணைந்து அமைதி நிறைந்த கண்டனத்தை தெரிவிக்க வேண்டுமென்று ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள்



கூறியுள்ளார்கள். மக்களது மத உணர்களை பாதுகாக்கும் வகையில் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்ற எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் வைத்துள்ளார்கள். அவர்கள் பல்வேறு நாடுகளில் நடைபெற்றுள்ள வன்முறை நிறைந்த எதிர் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். அவற்றின் விளைவாக அப்பாவி மக்களும் – அதில் நாடுகளின் தூதுவர்களும், தூதரக செயற்குழு உறுப்பினர்களும் அடங்குவர் – கொலை செய்யப்பட்டுள்ளனர். (ANI)

இஸ்ரவேல் தலைமுறையில் வந்துள்ள அமெரிக்க ஒருவரால் உருவாக்கப்பட்டுள்ள இந்த திரைப்படத்தில் முஹம்மது (ஸல்) அவர்களை ஏமாற்றுபவராகவும், குழந்தைகளுடன் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுபவராகவும், பெண்களுடன் சிற்றின்பத்தில் ஈடுபடுபவராகவும் சித்தரித்துக் காட்டியுள்ளனர் (நவூதுபில்லாஹ்). இதனால் முழு இஸ்லாமிய நாடுகளிலும் ஒரு நிம்மதியற்ற நிலை உருவாகியிருக்கின்றது. இதன் விளைவாக அமெரிக்காவிற்கு எதிராக வன்முறை செயல்களும் உலகளாவிய போராட்டங்களும் நடைபெறுவதை பார்க்க முடிகின்றது.

metro

*Metro News Ottawa, Canada*
*By Graham Lanktree*
*28 September, 2012*

## முஸ்லிம் தலைவரின் அமைதிக்கான அழைப்பு

### கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துதல் என்ற எல்லைகளை கடந்து விட்டது வன்முறையைத் தூண்டும் திரைப்படம்

உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி அன்று Innocence Of Muslims என்ற திரைப்படத்திற்கு எதிராக அமைதியான வழிமுறை மூலமாக ஒன்றுபட வேண்டுமென்று அனைத்து முஸ்லிம்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

முஸ்லிம்களின் மதத்தை கடுமையாக விமர்சனம் செய்துள்ள தொழிலுடன் தொடர்பில்லாத ஒரு திரைப்படத்திற்கு எதிராக பல வாரங்களாக நடைபெற்று வரும் வன்முறைப் போராட்டங்களுக்குப் பிறகு Ottawa விலுள்ள ஒரு முஸ்லிம் ஜமாஅத் சனிக்கிழமை அன்று ஒரு மாநாட்டில் இந்த வன்முறையை முடிவுக்கு கொண்டு வந்து, கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துகின்ற எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான கோரிக்கையை வைக்கும். ஒரு இஸ்லாமிய கொள்கை பரப்புனரும், ஜமாஅத் பொறுப்பாளருமான இம்தியாஸ் அஹ்மது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

கொடிகளை எரிப்பது, சொத்துக்களுக்கு தீ வைப்பது, அரசு தூதுவர் உட்பட அப்பாவி மக்களை கொலை செய்வது ஆகியவை முற்றிலும் இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரான செயலாகும். நிச்சயமாக கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துவது மற்றும் மற்றவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது ஆகியவற்றிற்கு இடையில் மிகவும் நுட்பமான இடைவெளி இருக்கின்றது. நமது கருத்து சுதந்திரத்தின் விளைவாக மற்றவர்களது



உணர்வுகளை காயப்படுத்தும் போது நாம் அதற்கு ஓர் எல்லையை நிர்ணயம் செய்ய வேண்டும். இம்தியாஸ் அஹ்மது அவர்களின் கூற்றின்படி இந்த வன்முறை செயல்களுக்கு எதிராக குரல் எழுப்புவதற்காக Ottawa விலுள்ள பாகிஸ்தானில் பாகுபாடு காட்டப்பட்டு கொடுமைகளுக்கு இலக்காகியுள்ள ஒரு சிறுபான்மை இஸ்லாமிய பிரிவாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 400 நபர்கள் ஒன்று கூடுவர். மேலும் (இம்தியாஸ் அஹ்மது) அவர்கள் கூறியதாவது:

இத்தகைய செயல்களுக்கு எதிராக கண்டனம் தெரிவிப்பதற்கான சிறந்த வழிமுறை நாம் துஆவின் மூலமாக இறைவனின் உதவியை வேண்டுவதாகும். மேலும் செயல் ரீதியாக சிறந்த இஸ்லாமிய முன்மாதிரியை எடுத்து வைப்பதாகும். எந்தவொரு பிரச்சனைக்கும் வன்முறை தீர்வு ஆகாது. இவ்வாறே நாம் அமெரிக்காவில் உருவாகியுள்ள திரைப்படம் மற்றும் பிரான்ஸில் வெளியிடப்பட்டுள்ள கேலி சித்திரங்கள் ஆகியவற்றை வன்மையாக கண்டிக்கிறோம்.

எல்லா மக்களது மத உணர்வுகளும் பாதுகாக்கப்படும் அளவில் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி அன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆன்மீக தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

நாங்கள் கனடா அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றோம். அவர்கள் நமக்கு நமது மார்க்கத்திற்கேற்ப செயல்படுவதற்கான முழுமையான சுதந்திரத்தை வழங்கியுள்ளார்கள். ஆனால் நாங்கள் எங்களது நாட்டில் (பாகிஸ்தானில்) எங்களை நாங்களே முஸ்லிம்கள் என்று கூட கூறிக் கொள்ள முடியாது என்று இம்தியாஸ் அஹ்மது அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் பாகிஸ்தானில் இருக்கின்ற இரண்டிலிருந்து ஐந்து மில்லியன் வரை உள்ள அஹ்மதிகள் மீது இழைக்கப்படுகின்ற பல்வேறு கொடுமைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாகவும் எடுத்துக் கூறினார்கள். அவர் மேலும் கூறினார்:

ஒவ்வொரு மதமும் தங்களது நபியை கண்ணியப்படுத்துகின்றது. கிறித்தவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கண்ணியப்படுத்துகின்றனர். ஆனால் சில நேரங்களில் அறிவீனர்களான பாதிரிகள் மக்களின் உணர்வுகளை தங்களது சுய நலன்களை பெறுவதற்காக பயன்படுத்திக் கொள்கின்றனர். கண்டனம் தெரிவிப்பதற்காக தெருக்களில் வர வேண்டும் என்றோ, கலவரங்களை ஏற்படுத்த வேண்டும் என்றோ ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் போதிக்கவில்லை.

இம்தியாஸ் அஹ்மது அவர்கள் செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு Cumber Land –லுள்ள Market Street –ல் ஓர் உரையாடுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். அதில் இத்தகைய வன்முறை போக்கிற்கு கண்டனம் தெரிவிக்கப்படும்.



*One News*
*New Zealand's News*

## ஒரு டி.வி சேனலான One News -ன் அறிக்கை

ஐரோப்பாவில் நீதியை விரும்புகின்ற முஸ்லிம் தலைவர்கள் வன்முறை போராட்டங்கள் நடத்துவோர்களிடமிருந்து தங்களது பகுதியை பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்து வருகின்றனர். ஐரோப்பாவின் நமது பிரதிநிதியான Garth Bray அவர்களுக்கு இலண்டனில் ஒரு பள்ளிவாசலில் நுழைவதற்கான சிறப்பு அனுமதி கிடைத்தது. பாரிஸில் ஹஸ்ரத் முஹம்மதின் நிர்வாணப் படங்கள் வெளியிடப்பட்டதனால் ஆசியாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் அமெரிக்காவின் கொடிகள் எரிக்கப்படுகின்றன. (இந்த கேலி சித்திரம் வெளியிட்டதன் மூலம் கொதிப்படையாமல்) அமைதியாக இருக்க வேண்டுமென்ற எல்லா வேண்டுகோள்களும், அங்கு பயன் தராமல் ஆகிவிட்டதைப் போன்றே இங்கிலாந்திலும் நிலைமை அப்படித்தான் ஆகிவிட்டது. பத்திரிகை நிருபர் கூறுகிறார்:

என்னை மிகுந்த ஆர்வத்துடன் எனது நடுநிலையான எண்ணங்களை கூறுவதற்காக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் அந்த இரண்டு பெண் பிரதிநிதிகளும் கூட வரவேற்கப்பட்டனர்.

கலீஃபா திரைப்படம் மற்றும் கேலி சித்திரங்களை தயார் செய்தவர்களுக்கு கண்டனம் தெரிவித்தார். மேலும் இவ்வாறு கூறினார்:

அல்லாஹ் நிச்சயமாக இந்த மக்களைக் கொண்டு நரகத்தை நிரப்புவான்.

அத்துடன் சொற்பொழிவை கேட்பவர்களிடம் தீங்கு விளைவிப்பவர்களுக்கு தாமே தண்டனை வழங்குவது என்பது (முஸ்லிமாகிய) இவர்களது வேலை அல்ல என்பதையும் அவர்கள் நினைவூட்டினார்கள். மேலும் கலீஃபா கூறினார்கள்:

எங்களுக்கு எவ்வகையிலான குழப்பம் விளைவித்தல், வன்முறை ஆகியவற்றில் நம்பிக்கை இல்லை. எந்தவோர் அஹ்மதியும் இவ்வகையிலான போராட்டத்திலோ அல்லது குழப்பம் விளைவிப்பதிலோ ஈடுபட்டிருப்பதை ஒருபோதும் நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள். பத்திரிகை நிருபர் தொடர்ந்து கூறுகிறார்:

எந்த மக்கள் இலண்டனின் வட மேற்கில் இந்த பள்ளிவாசலை கட்டியுள்ளனரோ (அதாவது அஹ்மதி முஸ்லிம்கள்) அவர்கள் தென் ஐரோப்பாவின் மிகப்பெரும் பள்ளிவாசல் (பைத்துல் ஃபுதூஹ்) இது தான் என்று வாதம் புரிகின்றனர். இந்த பள்ளிவாசலில் கொடுக்கப்படும் குத்பாவை உலகின் நூற்றுக்கணக்கான நாடுகளிலுள்ள மக்கள் கேட்டிருப்பார்கள். அதில் இந்த கேலி சித்திரங்களினாலும் திரைப்படத்தாலும் அவர்களது மார்க்கத்திற்கு ஏற்பட்டுள்ள அவமானத்திற்கான பதிலை தங்களது நாவுகளால் மட்டுமே கூற வேண்டும் என்ற விசயம் அவர்களுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால் அவர்களது கலீஃபா பல முஸ்லிம்களும் இதைவிட அதிகமான வன்முறைப் போராட்டங்களை செய்ய துணிந்துள்ளனர் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் மேலும் கூறினார்:

இது மேற்கின் மீதுள்ள பகைமையின் விளைவு மட்டுமல்ல. மாறாக, இதற்குப் பின்னால் வன்முறை மூலமாக தங்களை பின்பற்றுவோர் அதிகரிக்க வேண்டும் என்று விரும்புகின்ற மக்களது கைகள் இருக்கின்றன.

நிச்சயமாக ஒரு சிறுபான்மை பிரிவின் தலைவர் என்ற நிலையில் அவர்களது போதனையை அதிகமான மக்கள் காது கொடுத்து கேட்பார்கள் என்றோ அல்லது பெசாவர் போன்ற பகுதிகளில் இந்த போதனை வன்முறை அடக்குவதில் எவ்வகையிலாவது உதவி கரமாக இருக்கும் என்றோ நாம் எதிர்பார்க்க முடியாது.



اَلْفَضْلُ مَا شَهِدَتْ بِهِ الأَعْدَاءُ

*(எதிரிகளும் ஒப்புக் கொள்வது தான் சிறப்புகளாகும்)*

# இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி சில தலைவர்கள், வரலாற்றாசிரியர்கள் மற்றும் கீழ்த்திசை நாட்டு அறிஞர்கள் கூறியுள்ள சில கருத்துக்கள்

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமை தொடர்பாக மாற்று மதத்து அறிஞர்களின் புகழுரைகள்

**ஜார்ஜ் சேல்** (George Sale) என்பவர் ஓர் எழுத்தாளர் ஆவார். இவர் ஆங்கிலத்தில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்துள்ளார். மொழியாக்கத்திற்கு முன்னதாக ஒரு நீண்ட அறிமுக கட்டுரையை அவர் எழுதியுள்ளார். அதில் To the reader (வாசகர்களுக்கு) என்ற அதிகாரத்தில் ஸ்பேன் ஹெமிஸ் (Spanhemius) என்பவரை சான்றாகக் காட்டி அவர் இவ்வாறு எழுதியுள்ளார்:

முஹம்மது (ஸல்) அவர்கள் முழுமையான முறையில் இயல்பாகவே அவர்களிடம் இருக்கும் தகுதிகளால் அலங்கரிக்கப்பட்டவராக இருந்தார். மிகவும் அழகான தோற்றத்தை உடையவராகவும் மிகுந்த அறிவுத்திறன் கொண்டவராகவும், தொலைநோக்குப் பார்வை உடையவராகவும், விருப்பத்திற்கு உரியவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும், ஏழைகளை கவனிப்பவராகவும், ஒவ்வொருவருடனும் பணிவுடன் நடந்து கொள்பவராகவும், எதிரிகளை எதிர்த்து நிற்பதில் உறுதியானவராகவும், வீரமிக்கவராகவும் இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனது பெயருக்கு மிகுந்த மரியாதையையும், கண்ணியத்தையும் வழங்குபவராகவும் திகழ்ந்தார். பொய் சத்தியம் செய்பவர்கள், விபச்சாரிகள், இரத்தம் சிந்துபவர்கள், பொய்யான குற்றச்சாட்டுகளை பிறர் மீது சுமத்துபவர்கள், வீண் செலவு செய்பவர்கள், பேராசை உடையவர்கள், பொய்யான சாட்சி கூறுபவர்கள் ஆகியோருக்கு எதிராக மிகவும் கடுமையானவராக இருந்தார்கள்.

மென்மை, தான தர்மங்களை செய்வது, கருணை காட்டுவது, நன்றி தெரிவிப்பது, பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களை மதிப்பது தொடர்பாக மிகவும் வலியுறுத்திக் கூறக்கூடியவராகவும், இறைவனை புகழ்வதில் மிகவும் அதிகமாக ஈடுபடக்கூடியவராகவும் அவர்கள் இருந்தார்கள்.

(George Sale To the leader in The Koran Commonly called the alkoran of mohammed. J.B. Lippincott & co. PA. pp. Vi-Vii 1860)



**ஸ்டேன்லி லேன் பூல்** (Stanley Lane - Poole) என்ற இன்னொரு நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்:

முஹம்மது (ஸல்) அவர்கள் தமது மூதாதையர்களின் நகரமான மக்காவில் வெற்றியுடன் நுழைந்த போது அவர்களது உயிர்களுக்கு எதிரிகளாகவும் அன்னாரது இரத்தத்தை குடிக்க தாகமுடையவர்களாகவும் இருந்த மக்கத்தினர்கள் அனைவரையும் அவர்கள் மன்னித்தார்கள். இது எத்தகு வெற்றியாகவும் தூய்மையான வெற்றியுடன் கூடிய நுழைதலாகவும் இருந்ததென்றால் இதற்கு ஈடான ஓர் உதாரணம் முழு மனித வரலாற்றிலும் கிடைக்காது.

(Stanley Lane - Poole. Introduction in: Speeches and table talk of the Prophet Mohammad Macmillan & Co. London. p. xivi 1882)

---

The Out Line of History **(தி அவுட் லாயின் ஆஃப் ஹிஸ்டரி)** என்ற நூலின் ஆசிரியரான பேராசிரியர் **H.G. வெல்ஸ்** (H.G Wells) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இஸ்லாத்தின் தூதர் அவர்களைப் பற்றி யார் எல்லாரையும் விட அதிகமாக அறிந்திருந்தார்களோ அவர்களே அன்னார் மீது முதலில் நம்பிக்கை கொண்டனர். இதுவே அன்னாரின் உண்மைக்கு மிகப்பெரும் சான்றாகும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் வாதியாக இருக்கவில்லை. இஸ்லாத்தில் பெரும் சிறப்புகளும் மகத்தான பண்புகளும் உள்ளன என்ற உண்மையை மறுக்க முடியாது...... இஸ்லாத்தின் தூதர் அவர்கள் எத்தகைய ஒரு சமுதாயத்தின் அடித்தளத்தை நிறுவினார்கள் என்றால் அதில் அநீதி இழைத்தல், இரத்தம் சிந்துதல் ஆகியவை முற்றிலும் அழிக்கப்பட்டன.

(Mohammad and islam In : The Outline of History by H.G. Wells Part II University of michigan Library; Ml. p 269 - 1920) DE Lacy O leary)

**டி லேசி ஓவரி** (De Lacy O'Leary) என்பவர் தனது நூலான **இஸ்லாம் அட் த கிராஸ் ரோட்ஸ்** (Islam at the cross Roads) என்பதில் இவ்வாறு எழுதுகின்றார்:

தீவிரவாத முஸ்லிம்கள் வெற்றி கொண்டனர் என்பதும், தனது ஆதிக்கத்தின்கீழ் வந்த சமுதாயங்களின் வாள் முனையில் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தினார் என்பதும் வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் கூறும் கதைகளில் மிகவும் வீணான, மிகவும் விந்தையான ஒரு கதையாகும் என்பதை வரலாறு மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

De Lacy O'leary Islam at the cross Roads.
Kegan Paul, London, p.8 - 1923)

---

**மகாத்மா காந்தி** ஒரு பத்திரிகையான **எங் இந்தியா** (Young India) வில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

எவ்வித கருத்து வேறுபாடுமின்றி இலட்சக்கணக்கான மக்கள் மீது ஆட்சி புரிந்து வந்த அந்த நபரின் வாழ்க்கை தொடர்பாக நான் எல்லாவற்றையும் அறிய விரும்பினேன். அன்னாரது வாழ்க்கையைப் பற்றி நான் படித்த பிறகு எனக்கு இந்த விசயத்தில் முன்பை விட அதிகமான உறுதி ஏற்பட்டுவிட்டது. அதாவது இஸ்லாம் அந்த காலத்தில் வாள் மூலமாக மக்களின் உள்ளங்களில் இடம் பிடிக்கவில்லை. மாறாக, இந்த இறை தூதரின் எளிமை, தனது பணியில் மூழ்கியிருக்கும் பழக்கம், மிகவும் நுட்பமான முறையில் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, தனது நண்பர்களுடனும், தன்னை பின்பற்றுபவர்களுடனும் மிகுந்த நேசத்துடன் பழகுவது, அச்சமற்றிருப்பது, இறைவனது இருப்பு மற்றும் தனது நோக்கத்தில் வெற்றி பெறுவது தொடர்பாக முழுமையான உறுதி கொள்வது ஆகிய அன்னாரின் இந்த விசயங்கள் தான் ஒவ்வொரு துன்ப வேளையிலும் அதை சமாளிக்க வழிவகுத்தது. அதுவே எல்லாரையும் ஒன்று சேர்த்து அழைத்து செல்ல வைத்தது. நான் இந்த இறை தூதரின் வாழ்க்கை தொடர்பாக எழுதப்பட்டுள்ள அந்த நூலின் இரண்டாவது பாகத்தையும் படித்து முடித்த போது அந்த நூல் முடிவுற்றதன் காரணமாக என்னை சோகம் ஆட்கொண்டுவிட்டது.

(Mahatma Gandhi, Young India, September 23 rd 1924)



**சர் ஜான் பகட் கிளப்** (Sir John Bagot Glubb) Lieutenant Genaral ஆக இருந்தவர். 1986 ஆம் ஆண்டு இவர் மரணமடைந்தார். இவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

இந்த நூலை வாசிப்பவர் இறுதியில் எந்த கருத்தை கூறினாலும் முஹம்மது (ஸல்) அவர்களது ஆன்மீக அனுபவங்கள் தன்னகத்தே பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிலுள்ள வரலாறு, கிறிஸ்தவ பெரியார்களின் ஆன்மீக அனுபவங்கள் ஆகியவற்றுடன் வியக்கத்தக்க அளவில் ஒத்திருக்கின்றன என்பதை அவர் மறுக்க முடியாது. அவ்வாறே இந்துக்கள் மற்றும் பிற மதங்களை ஏற்றுக் கொண்டவர்கள் கண்டுள்ள எண்ணற்ற கனவுகள், ஆன்மீக தரிசனங்கள் ஆகியவற்றுடன் இவற்றிற்கு ஒப்புமை இருப்பது சாத்தியமானதுதான். பல நேரங்களில் இப்படிப்பட்ட அனுபவங்கள் தூய்மையான புனிதத் தன்மையுடைய வாழ்க்கையின் துவக்கத்தில் காணப்படும் அடையாளங்களாக இருக்கின்றன. இந்த சம்பவங்களை மனதில் ஏமாற்றமாக குறிப்பிடுவது எவ்விதத்திலும் பொருத்தமான விளக்கமாக தெரியவில்லை. ஏனென்றால் இப்படிப்பட்ட சம்பவங்கள் பல மக்களிடத்திலும் ஒன்று போல் நிகழ்ந்திருக்கின்றன. இத்தகைய மக்களுக்கிடையில் ஆயிரக்கணக்கான வருடங்களின் இடைவெளியும், ஆயிரக் கணக்கான மைல்களின் தொலைவும் இருந்தும் கூட, அவர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி கேள்விப்படாத நிலை இருந்தும் கூட இத்தகைய மக்களது சம்பவங்களில் அசாதாராணமான ஒப்புமை காணப்படுகின்றது. இவர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி அறியாத நிலையில், இந்த எல்லா நபர்களும் வியக்கத்தக்க அளவில் இந்த கனவுகளிலும், ஆன்மீக தரிசனங்களிலும் தன் தரப்பிலிருந்தும் ஒப்புமையை உருவாக்கிக் கொண்டனர் என்ற கருத்து அறிவுப்பூர்வமானதல்ல.

பிறகு அபிஸீனியாவிற்கு எந்த முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து சென்றனரோ அவர்களைப் பற்றி இவர் இவ்வாறு எழுதுகின்றார்:

இந்த பட்டியலிலிருந்தும் ஏறக்குறைய இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனைவருமே இந்த ஹிஜ்ரத்தில் பங்கேற்றனர் என்பது தெரிகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடுமையான இயல்பைக் கொண்ட

மக்கத்து வாசிகளுக்கு மத்தியில், நிச்சயமாக மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்த தன்னைப் பின்பற்றுபவர்களுடன் இருந்து வந்தார். இந்த நிலையானது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நல்லொழுக்கத்தை தைரியத்துடன் வெளிப்படுத்திக் காட்டினார்கள். மற்றும் ஈமானின் வலிமையில் உயர்வான தரத்தில் நிலைபெற்றிருந்தார்கள் என்பதை நிரூபிக்கின்றது.

(The Life and Times of Muhammad John Bagot Glubb Hodder & Stougntor. 1970) Reprint 2002

---

**John William Draper** தனது நூலான **History of the Intellectual Devolopment Of Europe** ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

Justinian மரணமடைந்து நான்கு வருடங்கள் கழிந்த பிறகு கி.பி 569 ஆம் ஆண்டில் மக்காவில் எப்படிப்பட்ட ஒரு மனிதர் பிறந்தார் என்றால் அவர் எல்லா மனிதர்களையும் விட மிகவும் அதிகமாக மனித இனத்தின் மீது தனது தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளார். அந்த மனிதர் முஹம்மது (ஸல்) ஆவார். இவரை சில ஐரோப்பிய மக்கள் பொய்யர் என்று கூறுகின்றனர். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் எத்தகைய சிறப்புகள் இருந்தன என்றால் அவற்றின் மூலம் பல சமுதாயங்களின் நற்பாக்கியம் தீர்மானிக்கப்பட்டது. அவர் தப்லீக் செய்கின்ற ஒரு போர் வீரராக திகழ்ந்தார். அவர் ஏறும் மேடை சொற்செறிவால் நிரம்பியிருந்தது. களத்தில் இறங்கும் போது அவர் வீரராக திகழ்ந்தார். அவரது மார்க்கத்தின் சாராம்சம், இறைவன் ஒருவன் என்ற ஒரே கருத்தில் மட்டுமே இருந்தது. இந்த உண்மையை விளக்குவதற்காக அவர் கொள்கை அளவிலான வாதங்களை மட்டும் மேற்கொள்ளவில்லை. மாறாக அவர் தன்னை பின்பற்றுபவர்களிடம் தூய்மை, தொழுகை, நோன்பு போன்ற விசயங்களைப் பற்றி போதனை செய்வதவாறு அவர்களது சமூக நிலைமைகளை செயலளவில் சிறப்பானதாக ஆக்கினார்கள். அந்த நபர் மற்ற எல்லா விசயங்களையும் விட தான தர்மங்கள் செய்வதற்கு முன்னுரிமை வழங்கினார்.

(John William Draper, MD; L.L.D.A History of the Intellectual Devolopment of Europe Harper and brothers, Publishers; NY p.244, 1863)



புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான **William Montgomery** என்பவர் **Muhammad at Madina** என்ற நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:

முஹம்மது (ஸல்) அவர்களையும், இஸ்லாத்தின் ஆரம்பகால வரலாற்றையும் பற்றி எந்த அளவுக்கு சிந்திக்கிறோமோ அந்த அளவு அவர்களது வெற்றிகளின் விரிவான நிலையைப் பார்த்து மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றான். அப்போதுள்ள நிலைமை அவர்களுக்கு எத்தகு சந்தர்ப்பத்தை வழங்கியது என்றால் அத்தகு சந்தர்ப்பம் மிக குறைவான மக்களுக்கே கிடைக்கின்றது. அவர்கள் அந்த காலத்திற்கு மிகவும் ஒரு பொருத்தமான மனிதராக திகழ்ந்தார்கள். பிறகு அவர்களிடம் தொலைநோக்குப் பார்வை, ஆட்சி புரிவதற்கான தகுதிகள், அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கை, அல்லாஹ் தான் அவர்களை அனுப்பியுள்ளான் என்பதில் அவர்களுக்கு இருந்த உறுதி ஆகியவை இல்லாமல் இருந்திருந்தால் வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதி எழுதப்படாமல் விடப்பட்டிருக்கும். பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை பற்றிய இந்த நூல் ஒரு மகத்தான ஆதமின் மகனை புரிந்து கொள்வதற்கும் அவருக்கு கண்ணியம் அளிப்பதற்கும் உதவும் என்று நான் நம்புகின்றேன்.

(William Montgomery watt, Muhammad at madinah, Oxford University press, P.335 - 1981)

---

புகழ்பெற்ற கிறிஸ்தவ வரலாற்றாசிரியர் **Reginald Posworth Smith** இவ்வாறு எழுதுகின்றார்:

மதம் மற்றும் ஆட்சியின் வழிகாட்டியாகவும் கவர்னர் என்ற நிலையில் போப்பாகவும், கெய்ஸராகவும் இருக்கின்ற இருவித தனித்தன்மைகளும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) என்ற ஒரு நபரிடம் ஒருங்கிணைந்திருந்தன. அவர்கள் போப்பாக இருந்தார்கள். ஆனால் போப்பைப் போன்று வெளிப்படையான பகட்டிலிருந்தும் தூய்மையாக இருந்தார்கள். அவர்கள் கெய்ஸராக இருந்தார்கள். ஆனால் கெய்ஸரைப் போன்று தற்பொருமையை விட்டும் தன்னிறைவு பெற்றவர்களாக திகழ்ந்தார்கள். முறையாக இராணுவம் இல்லாத, அரண்மனை இல்லாத

நிலையிலும், வரி வசூல் செய்யாமலும், இறைவனது பெயரால் மட்டும் உலகில் அமைதியையும், ஒழுங்கையும் ஒருவர் நிலைபெறச் செய்தார் என்று வாதிட ஒருவருக்கு உரிமை இருக்கிறது என்றால், அது முஹம்மது (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள். அவர்களுக்கு இந்த பொருள்கள் இல்லாமலேயே எல்லா ஆற்றல்களும் கிடைத்திருந்தன.

(Rev. Bosworth Smith. Charecter of Mohammad In: Mohammad and mohammadanism Smith, Elder & Co. London p.235.1876)

---

பிறகு இதே **Bosworth Smith** அவர்கள் தமது நூலான **Mohammad and Muhammedanism** ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

அவர்களது பிரச்சாரத்தை அவர்களைப் பற்றி நன்றாக தெரிந்தவர்கள் தான் முதலில் ஏற்றுக் கொண்டார்கள். உதாரணமாக, பெருமானார் (ஸல்) அவர்களது மனைவி, அவர்களது அடிமை, அவர்களது சிறிய தந்தையின் மகன், அவர்களது பழைய நண்பர் ஆகியோர். தனது பழைய நண்பரை (அபூபக்கரை) பற்றி முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தவர்களில் அந்த ஒரு மனிதர் மட்டும் தான் (தூதூச் செய்தியை கேட்டதும்) ஒருபோதும் புறமுதுகு காட்டி ஓடவுமில்லை. ஒருபோதும் முகம் திருப்பவுமில்லை. ஒருபோதும் தடுமாற்றம் அடையவுமில்லை என்று கூறினார். மற்ற தூதர்களைப் போன்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களது நற்பாக்கியம் சாதாரணமான ஒன்றாக இருக்கவில்லை. ஏனென்றால், அவர்களைப் பற்றி சரியாக தெரியாமல் இருக்கின்ற மக்களே அவர்களது மகத்துவத்தை மறுக்கின்றனர்.

(Rev. Bosworth Smith. Charecter of Mohammad In: Mohammad and mohammadanism Smith, Elder & Co. London p.127.1876)

---

பிறகு இதே நூலாசிரியர் அவர்கள் மேலும் எழுதுகின்றார்கள்: எந்த தீய சடங்குகளிலிருந்தும் முஹம்மது (ஸல்) நம்மை தடை செய்துள்ளார்களோ அதனை அவர்கள் தடை மட்டும் செய்யவில்லை. மாறாக அவற்றை அவர்கள் முற்றிலுமாக அழித்து விட்டார்கள். மனிதர்களைப் பலியிடுவது, சிறு பெண் குழந்தைகளை கொலை செய்வது,



கொலைக் குற்றம் தொடர்பான சண்டைகள், அதிகமான பெண்களுடன் வரையின்றி திருமணம் செய்து கொள்வது, அடிமைகளுடன் நடக்கின்ற முடிவுறாத கொடுமைகள், அநீதிகள், மது அருந்துவது, சூதாடுவது போன்ற விசயங்களை அவர்கள் தடுக்காமல் இருந்திருந்தால் இத்தகு தீமைகள் எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக அரபு நாட்டிலும் அதற்கு அருகில் இருக்கும் நாடுகளிலும் நீடித்திருக்கும். அவர்கள் இந்த அனைத்து தீமைகளையும் அழித்து விட்டார்கள். (மேற்குறிப்பிடப்பட்டுள்ள இதே நூல் பக்கம் 125)

மேலும் இவர் எழுதுகின்றார்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது நோக்கத்தின் உண்மையிலும் நன்மையிலும் மிகவும் ஆழமான நம்பிக்கை வைத்தவாறு எவற்றை எல்லாம் செய்தார்களோ அது போன்று வேறு எந்த நபரும் இவ்விசயங்களில் ஆழமான உறுதியில்லாமல் எதையும் செய்ய முடியாது. (அதே நூல் பக்கம் 127)

மேலும் இவர் எழுதுகின்றார்: அவர்களது வாழ்வின் ஒவ்வொரு சம்பவமும் அந்த மனிதர், தாம் ஏற்றுக் கொண்ட தனது கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றின் பக்கம் கொஞ்சம் கொஞ்சமாக துன்பங்களை சகித்தவாறு சென்றடைவதற்கு முயற்சிகளை செய்கின்ற உண்மையை விரும்புகின்ற உணர்வுகளால் நிரம்பியுள்ள ஒரு மனிதராக அவர்களை நிரூபிக்கின்றது. (மேற்குறிப்பிடப்பட்டுள்ள இதே நூல் பக்கம் 127)

மேலும் இவர் எழுதுகின்றார்: அரபு மக்களுக்கு புரட்சி தேவை என்று கூறுவது அல்லது வேறு சொற்களில் கூறுவதென்றால், புதிய இறை தூதர் தோன்ற வேண்டிய நேரம் வந்து விட்டது என்று கூறப்படுவது உண்மையென்றால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்தத் தூதராக ஏன் இருக்கக் கூடாது ? இந்த தலைப்பில் இந்த காலத்திலுள்ள எழுத்தாளர் ஸ்பிரிங்கர் அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வருகைக்கு பல வருடங்கள் முன்பாகவே ஒரு இறை தூதரின் வருகை பற்றிய எதிர்பார்ப்பும் இருந்தது. அதைப் பற்றிய முன்னறிவிப்பும் இருந்தது என்பதை நிரூபித்துள்ளார். (மேற்குறிப்பிடப்பட்டுள்ள இதே நூல் பக்கம் 133)

இதே Bosworth மேலும் கூறுகின்றார்: ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் பல்வேறு நிலைமைகளில் எந்த அளவு மாறியுள்ளார்கள் என்பதில் எனக்கு வியப்பில்லை. மாறாக, அவர்களின் தனித்தன்மையில் எந்த அளவு குறைவாக மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன என்பது தான் வியப்பாக இருக்கின்றது. ஆடு மேய்ப்பவராகவும், சிரியாவுக்கு சென்று வியாபாரம் செய்பவராகவும், ஹிரா குகையில் தனிமையில் சில நாட்கள் இறைவணக்கத்தில் ஈடுபடுபவராகவும், சிறுபான்மையாக இருக்கக்கூடிய ஒரு ஜமாஅத்தின் சீர்திருத்தவாதி என்ற நிலையிலும் (அதாவது மக்காவில் அவர்கள் இருந்த சமயத்திலும்) சொந்த ஊரை விட்டுவிட்டு அவர்கள் மதீனாவில் இருந்த நாட்களிலும் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வெற்றி வீரர் என்ற நிலையிலும், கிரேக்க அரசர்கள், ஈரானிலுள்ள ஹெர்கல் மன்னர்கள் ஆகியோரின் சம தகுதியில் இருக்கின்ற நிலையிலும் நாம் அவர்களை பார்க்கின்ற போது எவ்வித தடுமாற்றமும் இல்லாத ஒரு உறுதியான நிலையை நாம் அவர்களிடம் பார்க்க முடிகின்றது.

மேலும் அவர் கூறுகின்றார்: வேறொரு நபரது வெளிப்படையான நிலைமைகளில் இந்த அளவு அதிக மாற்றங்கள் ஏற்பட்டிருந்து அவற்றை சந்திக்கும் போது அவரது வாழ்க்கையில் இந்த அளவு குறைவான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்று எனக்கு தோன்றவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களது வெளிப்படையான நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. ஆனால் இந்த எல்லா நிலைமைகளிலும் எனக்கு அவர்களது தனித்தன்மையானது ஒன்றுபோல் தென்படுகின்றது. (மேற்குறிப்பிடப்பட்ட இதே நூல் பக்கம் 133)

---

**வாஷிங்டன் இர்வின் (Washington Irving) –ன் Life of Muhamed –**ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த போர்களில் அவர்களுக்கு கிடைத்த வெற்றிகள் அவர்களிடம் எவ்வித தற்பெருமையையும் ஏற்படுத்தவில்லை. கர்வத்தை ஏற்படுத்தவில்லை. செயற்கையான மகிமையையும், உயர்வையும் அது உருவாக்கவில்லை. இந்த வெற்றிகளில் அவர்களுக்கு சுய நோக்கங்கள் இருந்திருக்குமென்றால் அது கண்டிப்பாக இந்நிலைகளை அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கும். தனக்கு ஆற்றல் கிடைத்த அந்த நாட்களிலும் கூட தனது பழக்க வழக்கங்களிலும் பண்புகளிலும் மிகவும் துன்பம் நிறைந்த நிலைமைகளில் அவர்களிடம் காணப்பட்ட அதே எளிமையை அவர்கள் கடைபிடித்து வந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், அவர்கள் அரசராக வாழ்ந்த சமயத்தில் கூட அவர்களது அறையில் ஒரு நபர் நுழைகின்ற சமயத்தில் அவசியமில்லாத மரியாதையை அவர்களிடம் வெளிப்படுத்திக் காட்டினால் அவர்கள் அதை விரும்பியதில்லை.

(Washington Lrving. The Life Of Mahomet Bemard
Tauchnitz Leipzig pp. 272 - 273, 1850)

---

**சர் வில்லியம் மூர்** (Sir William Muir) தனது நூலான **Life of Mohamed –** ல் இவ்வாறு எழுதுகின்றார்:

தனது ஒவ்வொரு பணியையும் முழுமையாக செய்து முடிப்பவராக அவர்கள் இருந்தார்கள். எந்த ஒரு பணியை அவர்கள் கையில் எடுத்தாலும் அதை செய்து முடிக்காமல் விட்டுவிட மாட்டார்கள். சமுதாயத்தில் உள்ளவர்களை சந்திப்பதில் கூட அவர்களது வழிமுறை இவ்வாறே இருந்தது. யாரிடமாவது அவர்கள் பேசுவதற்காக தமது முகத்தை திருப்பும் போது பாதியாக திருப்ப மாட்டார்கள். மாறாக, தமது முகத்தையும், உடலையும் முழுவதுமாக அந்த நபர் பக்கம் திருப்புவார்கள். யாரிடம் அவர்கள் கை குலுக்கினாலும் தமது கைகளை முதலில் அவர்கள் விடுவித்ததில்லை. இவ்வாறே தனக்கு தெரியாத ஒரு நபரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது தமது பேச்சை இடையில் அவர்கள் நிறுத்திக் கொண்டதில்லை. மற்றவரின் விசயங்களை அவர்கள் முழுமையாக கேட்பார்கள். அவர்களது வாழ்க்கையில் அவர்களது குடும்பத்தில் தென்படுகின்ற எளிமை மிகைத்து இருந்தது. ஒவ்வொரு பணியையும் தாமே செய்கின்ற பழக்கம் அவர்களிடம் இருந்தது. அவர்கள் எப்போது தான தர்மம் கொடுத்தாலும் அதை கேட்பவருக்கு தமது கையாலேயே அதை வழங்குவார்கள். வீட்டில் நடைபெறும் வேலைகளில் தமது மனைவிகளுக்கு அவர்கள் உதவி செய்து வந்தார்கள்.....

பிறகு அவர் எழுதுகின்றார்: எவ்வாறு நதிநீர் கரைவரை வந்து சேர்கின்றதோ அவ்வாறே ஒவ்வொரு சாதாரண மனிதரும் கூட அவர்களை சந்திக்க அவர்களிடம் வர முடிந்தது. வெளியிலிருந்து வருகின்ற குழுவினரை மதிப்புடனும், மரியாதையுடனும் அவர்கள் வரவேற்றார்கள். அந்த குழுவினரின் வருகை மற்றும் ஏனைய அரசாங்க விசயங்களை அணுகுவதில் முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் ஒரு முழுமை பெற்ற ஆட்சியாளரிடம் இருக்க வேண்டிய எல்லா தகுதிகளும் இருந்தன என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது. அவர்களுக்கு எழுதத் தெரியாது என்பது தான் எல்லாவற்றையும் விட மிகவும் வியப்பான விசயமாகும்.

பிறகு Sir William Mur (சர் வில்லியம் மூர்) என்பவரே எழுதுகின்றார்: தன்னைப் பின்பற்றுகின்ற சாதாரண நபரிடம் கூட அவர்கள் சிறந்த நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வதுடன் அவர்களது நிலைமைகளை கருத்தில் கொள்பவராக அவர்கள் இருந்தார்கள் என்பது முக்கியமான சிறப்பாகும். வெட்கம், பரிவு, பொறுமை, ஈகைக் குணம், பணிவு ஆகியவை அவர்களது நல்லொழுக்கத்தில் சிறப்பாக தென்படுகின்ற அம்சங்களாக இருந்தன. இதன் காரணமாக தனது சுற்றுச் சூழலில் இருந்து வரும் ஒவ்வொரு நபரையும் அவர்கள் தன் பக்கம் ஈர்த்து விடுவார்கள். இல்லையென்று சொல்வதற்கு அவர்கள் விரும்ப மாட்டார்கள். கேட்கின்ற ஒரு நபரின் வேண்டுதலை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை என்றால் அமைதியாக இருப்பதற்கே அவர்கள் முன்னுரிமை வழங்கினார்கள். எவரது அழைப்பையும் அவர்கள் மறுத்தார்கள் என்று நாம் கேள்விப்படவில்லை. அந்த அழைப்பு எவ்வளவு சாதாரணமானதாக இருந்தாலும் சரியே! ஒருவர் வழங்கிய அன்பளிப்பு எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அந்த அன்பளிப்பை பெற ஒருபோதும் அவர்கள் மறுத்ததில்லை. அவர்களது சபையில் இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் நான் தான் அவர்களது மிக முக்கியமான விருந்தினராக இருக்கின்றேன் என்ற எண்ணம் ஏற்படுகின்ற வகையில் நடந்து கொண்டது வேறு எவரிடமும் இல்லாத அவர்களிடம் மட்டும் காணப்பட்ட சிறப்பம்சமாகும். பிறகு எவராவது தனக்கு கிடைத்த வெற்றியின் காரணமாக மகிழ்ச்சியை தெரிவித்தால்,



அவரிடம் தமது உணர்வை வெளிப்படுத்தியவாறு அவர்கள் முஸாஃபா செய்வார்கள். மேலும் அவரை கட்டித் தழுவுவார்கள். புறக்கணிக்கப் பட்டவர்களாகவும், துன்பங்களால் சூழப்பட்டவர்களாகவும் இருக்கின்ற நபர்களிடம் மிகுதியான மென்மையுடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்வார்கள். குழந்தைகளுடன் மிகுந்த பரிவுடன் நடந்து கொள்வார்கள்.

வழியில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களிடம் தாமே சென்று ஸலாம் கூறுவதில் எவ்வித கண்ணியக்குறைவையும் அவர்கள் உணர்ந்ததில்லை. பஞ்ச நாட்களில் கூட அவர்கள் மற்றவர்களுக்கு, தாம் உண்ணும் உணவிலிருந்து வழங்குவார்கள். உணவு உண்ணும் போது அவர்களை தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள். ஒவ்வொருவருக்கும் எளிதான நிலையை ஏற்படுத்த எப்போதும் முயற்சி செய்து வருவார்கள். மென்மையான, கருணைமிக்க இயல்பு அவர்களது எல்லா சிறப்பான நற்பண்புகளிலும் மிகுதியாக தென்பட்டது. முஹம்மது (ஸல்) அவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ளும் ஒரு நண்பராக இருந்தார்கள். அவர்கள் அபூபக்கரை தனது சகோதரரை விட அதிகமாக நேசித்தார்கள். அலியிடம் ஒரு தந்தையின் பரிவை காட்டினார்கள். விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸய்துக்கு அன்பு காட்டும் இந்த நபியிடம் எந்த அளவு பற்று இருந்தது என்றால், அவர் தனது தந்தையாரிடம் செல்வதற்கு பதிலாக மக்காவில் இருப்பதற்கு முன்னுரிமை வழங்கினார். தன்னை கண்காணித்து வந்தவரது கைகளை பற்றியவாறு நான் உங்களைவிட்டு பிரிய மாட்டேன். நீங்கள் தான் என்னுடைய தாயும் தந்தையும் ஆவீர்கள் என்று அவர் கூறினார். நட்பின் இந்த உறவு ஸய்து மரணம் அடையும் வரை இருந்தது. பிறகு ஸய்தின் மகனான உஸாமாவிடமும் அவரது தந்தையின் காரணமாக எப்போதும் மிகுந்த அன்புடன் அன்னார் நடந்து கொண்டார்கள்.

உஸ்மானும் உமரும் அவர்களுடன் ஒரு சிறப்பான உறவை வைத்திருந்தனர். அவர்கள் ஹுதைபிய்யா என்ற இடத்தில் பைஅத்தே ரிஸ்வான் நடந்த போது எதிரிகளால் முற்றுகையிடப்பட்டுள்ள தனது மருமகன் (உஸ்மான்) னுக்காக தனது உயிரையே அர்ப்பணிக்க உடன்படிக்கை செய்து கொண்டது இந்த உண்மையான நட்பிற்கு ஓர்

உதாரணமாகும். முஹம்மது (ஸல்) அவர்கள் சற்றும் தடுமாற்றம் அடையாமல் வெளிப்படுத்திக் காட்டிய நேசத்தை எடுத்துரைக்கும் பல சம்பங்களையும் நம்மால் கூற முடியும். எந்தவொரு சமயத்திலும் இந்த நேசம் பொருத்தமற்றதாக இருக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு சம்பவமும் இத்தகைய உணர்வையும் நேசத்தையும் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக இருக்கின்றது.

மேலும் அவர் எழுதுகின்றார்: தனக்கு ஆற்றல் கிடைத்த உச்சகட்ட நிலையிலும் கூட அவர்கள் நீதியுடன் நடந்து கொள்பவர்களாகவும் நடுநிலையை பேணுபவராகவும் திகழ்ந்தார்கள். அவர்களது வாதத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட அந்த எதிரிகளுடன் மென்மையாக நடந்து கொள்வதில் சிறிதளவு கூட அவர்கள் குறை வைக்கவில்லை. மக்கத்தினர் மிக நீண்ட காலமாக கிளர்ச்சிப் போக்கில் இழைத்த கொடுமைகளின் விளைவானது மக்காவை வெற்றி கொண்ட அன்னாரை கோபத்தால் மற்றவர்களது இரத்தத்துடன் விளையாட வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு எதிராக நெருப்பு மூட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களோ சில குற்றவாளிகளை தவிர மற்றவர்களுக்கு பொது மன்னிப்பிற்கான அறிவிப்பை செய்தார்கள். கடந்த காலத்தில் நடந்த எல்லாவிதமான கசப்பான உணர்வுகளையும் முற்றிலுமாக அவர்கள் மறந்து விட்டார்கள். எதிரிகள் பரிகாசத்துடனும் அவமரியாதையுடனும் நடந்து கொடுமைகளை இழைத்த பிறகும் கூட அந்த தமது கடுமையான எதிரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். மதீனாவில் அப்துல்லாஹ் மற்றும் தன்னிடமிருந்து முகம் திருப்பிச் சென்றுவிட்ட நண்பர்கள் (அதாவது முனாஃபிகீன்கள்) பல வருடங்களாக அவர்களது திட்டங்களில் தடைகளை ஏற்படுத்தினர். அவர்களது ஆட்சியில் இடையூறுகளை ஏற்படுத்தி வந்தனர். அவர்களிடம் கண்டும் காணாமல் நடந்து கொண்டதும் ஓர் ஒளிமயமான உதாரணமாக திகழ்கின்றது. இவ்வாறே அவர்களுக்கு முன்னால் தலை குனிந்து நின்ற பல்வேறு கோத்திரங்களை சார்ந்தவர்களுடன் அவர்கள் வெற்றியின் போது மென்மையாக நடந்து கொண்டதுடன் வெற்றி கிடைப்பதற்கு முன்னர்



அவர்களை கடுமையாக எதிர்த்தவர்களுடன் கூட அவர்கள் இவ்வாறு மென்மையாக நடந்து கொண்டார்கள்.

(Sir William Mur. Life Of Muhammad Volume IV. Smith, Elderand Company. London. PP. 303 - 307. 1861)

---

பிறகு William Mur (வில்லியம் மூர்) அவர்கள் எழுதுகின்றார்கள்: முஹம்மது (ஸல்) அவர்கள் மீது யாரெல்லாம் முதலாவதாக ஈமான் கொண்டார்களோ அவர்கள் உயர்வான நல்லொழுக்கத்தின் எஜமானர்களாக இருந்தனர் என்பது முஹம்மது (ஸல்) அவர்களது உண்மைக்கு ஆதராவாக திகழும் ஒரு அடையாளமாக திகழ்கின்றது. இன்னும் சொல்லப்போனால் அவர்களது நெருங்கிய நண்பர்கள், குடும்பத்திலுள்ள நபர்கள் ஆகியோர் அவர்களது சொந்த வாழ்க்கைப் பற்றி நன்கு தெரிந்திருந்தார்கள். அவர்களால் கூட ஒரு ஏமாற்றக்கூடிய நயவஞ்சகரிடம் தமது குடும்ப உறவுகளிலும் வெளியிலும் நடந்து கொள்ளும் முறையில் தென்படுகின்ற பொதுவான குறைகளை அவரது வாழ்க்கையில் பார்க்க முடியவில்லை.

(Sir William Mur. Life Of Muhammad Volume II. Smith, Elderand Company. London. PP. 97, 98. 1861)

---

**சர் தாமஸ் கார்லைல் (Sir Thomas Carlyle)** என்பவர் பெருமானார் (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தது பற்றி இவ்வாறு எழுதுகின்றார்:

இன்னொரு விசயத்தையும் நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கு எந்தவொரு கல்விக்கூடத்தின் கல்வியும் கிடைக்கவில்லை. எதனை நாம் பள்ளிக்கூட கல்வி என்று கூறுகின்றோமோ அப்படி எதுவுமே அவர்களுக்கு கிடைக்கவில்லை. எழுதும் திறன் அரபிகளுக்கு முற்றிலும் புதியதாக இருந்தது. முஹம்மது (ஸல்) அவர்களால் தானாக எழுத முடியாது என்ற கருத்து முற்றிலும் உண்மையானது எனத் தெரிகிறது. அவர்களுக்கு கிடைத்த அனைத்து கல்விகளும் பாலைவன சுற்றுச்சூழலில் அங்கு வாழ்ந்ததன் மூலம் கிடைக்கும் அனுபவங்களையே

சுற்றி வந்தன. இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் தனது இருள் நிறைந்த பகுதியில் இருந்தவாறு தனது இதே பௌதீக கண்களாலும், எண்ணங்களாலும் அவரால் எதைப் பெற்றிருக்க முடியும்? நூல்கள் கூட படிப்பதற்கு கிடைத்திருந்ததில்லை என்பதை பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. அரபு நாட்டில் இருள் நிறைந்த காடுகளில், தானே கேள்விப்பட்ட விசயங்கள், தானே பார்த்த காட்சிகள் ஆகியவற்றைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த அறிவும் இருக்கவில்லை. அவர்களுக்கு முன்னதாக இருந்து வந்த ஞானமிக்க விசயங்களும் அரபு நாட்டைத் தவிர மற்ற பகுதிகளில் இருந்து வந்த ஞானமிக்க விசயங்களும் அவர்கள் வரை சென்றடையாத காரணத்தால் அவை அவர்களுக்கு கிடைக்காததற்கு சமமானவையாக இருந்தன. இப்படிப்பட்ட ஆட்சியாளர்கள், அறிஞர்கள் ஆகியோரில் ஒருவர் கூட இந்த மகத்தான மனிதரிடம் நேடியாக பேசியது கூட இல்லை. காடுகளில் அவர்கள் தன்னந்தனியாக இருந்து வந்தார்கள். இவ்வாறே இயற்கை மற்றும் தமது சிந்தனைகளின் சுழற்சியில் அவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

(Thomas Carlyle, on Heroes, Hero - Worship and the Historic in History Wiley and Putnam. NY p.47. 1846)

---

பிறகு அவர்களது திருமணம் பற்றியும் குடும்பத்துடனுள்ள உறவுகள் பற்றியும் Thomas Carlyle இவ்வாறு எழுதுகின்றார்: அவர் எவ்வாறு கதீஜாவின் தோழரானார்? எவ்வாறு விதவையாக இருக்கும் ஒரு செல்வந்தரின் வியாபாரத்தை நடத்துபவரானார்? மேலும் பயணம் செய்து சிரியாவில் நடைபெற்ற வியாபார சந்தைகளில் பங்கு பெற்றார்? இவற்றையெல்லாம் எப்படி அவர் செய்தார்? மிக அதிகமாக நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்வது, சிறந்த திறமை ஆகியவற்றால் தான் அதை அவரால் செய்ய முடிந்தது என்பதைப் பற்றி ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும். கதீஜா (ரலி) அவர்களின் உள்ளத்தில் அவர்களுக்காக கண்ணியமும் நன்றியுணர்வுகளும் எப்படி உருவானது? அரபு நாட்டிலுள்ள நூலாசிரியர்கள் கூறியிருப்பது போன்று இந்த இருவரது திருமணம் தொடர்பான விசயங்கள் மிகவும் உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் அறிந்து



கொள்வதற்கு தகுதியுடையதாகவும் இருக்கின்றது. முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அப்போது வயது 25 ஆக இருந்தது. கதீஜா அவர்களின் வயது 40 ஆக இருந்தது.

பிறகு அவர் எழுதுகின்றார்: தனக்கு நன்மை புரிந்த இந்தப் பெண்ணுடன் அன்பு நிறைந்த, நிம்மதியான முழுமையான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கதீஜாவுடன் உண்மையான அன்பு வைத்திருந்தார்கள். அவர்களுக்காகவே ஆகி விட்டார்கள் என்பது தெரிய வருகிறது. வாழ்க்கையின் இந்த காலகட்டத்தை, எவரும் ஆட்சேபனை செய்ய முடியாமல் இருக்கும் அளவில் அவர்கள் கழித்துள்ளார்கள். அவர்களை பொய் நபி என்று கூறுவதில் இந்த உண்மை தடை கற்களாக இருக்கின்றன. இந்த காலகட்டம் மிகவும் எளிமையாகவும், நிம்மதியாகவும் கழிந்தது. அவர்களது வாலிபப் பருவம் வரை இவ்வாறே கழிந்தது.

(Thomas Carlyle, on Heroes, Hero - Worship and the Heroic in History Wiley and putnam NY. Page 48, 1846)

---

பிறகு தாமஸ் கார்னல் அவர்களே எழுதுகின்றார்கள்: “நம் மக்களிடம் அதாவது கிறிஸ்தவர்களிடம் முஹம்மது (ஸல்) அவர்கள் திறமைமிக்கவராகவும் இயல்பான நபராகவும், பொய்யான நபித்துவ வாதம் செய்பவராகவும் இருந்தார் என்ற கருத்து பிரசித்தி பெற்றிருக்கிறது. மேலும் இவரது மதம் பைத்தியக்காரத்தனம் மற்றும் வீணான எண்ணங்களாகும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இப்போது இந்த எல்லா விசயங்களும் மக்களது பார்வையில் தவறானவையாக ஆகிவிட்டன. இந்த பொய்யான விசயங்களை காழ்ப்புணர்ச்சியுள்ள கிறிஸ்தவர்கள் இந்த மனிதர் (ஹஸ்ரத் முஹம்மது ஸல்) தொடர்பாக உருவாக்கி இருக்கின்றனர். அவை உறுதியாக நமது இழிவிற்கு காரணமாகி விடும். எந்த விசயங்களை இந்த மனிதர் தமது நாவால் கூறினாரோ அவை கடந்த 1200 வருடங்களாக 18 கோடி மக்களுக்கு நேர்வழியின் இலக்கை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்கின்றது. இப்போது எத்தனை பேர் முஹம்மது (ஸல்) அவர்களது வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துள்ளார்களோ அதைவிட அதிகமாக வேறு எந்த நபரின் வார்த்தைகள் மீதும் இந்த காலத்திலுள்ள மக்கள்

நம்பிக்கை வைப்பதில்லை. என் கருத்துப்படி ஒரு பொய்யான மனிதர் இந்த மதத்தைப் பரப்பினார் என்ற சிந்தனையை விட மோசமாக, இறைவணக்கத்திற்கு மாற்றமான வேறொரு சிந்தனை இருக்க முடியாது.

(Thomas Carlyle, on Heroes, Hero - Worship and the Heronic Wiley and Putnem. NY p.p.60-61. 1846)

---

பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்த ஒரு தத்துவவாதி **லாமர்டின்** என்பவர் **History of Turkey** என்ற தமது நூலில் எழுதுகின்றார்:

“எந்தவொரு மேதையின் தகுதியை பிரித்தறிவதற்கும் அப்படிப்பட்டவரது நோக்கம் எவ்வளவு மகத்தானது? அவர்களிடம் உள்ள வசதிகள் எந்த அளவு எல்லைக்குட்பட்டவையாக இருக்கின்றன? பிறகு அவரால் ஏற்பட்ட விளைவுகள் எவ்வளவு மகத்தானது? என்று மூன்று அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டால் இவ்விசயத்தில் முஹம்மது (ஸல்) அவர்களுடன் போட்டி போடுவதற்கு தைரியம் காட்டுகின்ற எந்த நபர் உங்களுக்கு கிடைப்பார்? உலகில் விண்ணைத் தொடுகின்ற புகழைப் பெற்ற மனிதர்கள் வெறும் சில இராணுவ வீரர்கள், சட்ட திட்டங்கள் மேலும் அரசுகள் ஆகியவற்றை தோற்கடித்தார்கள். அவர்கள் வெறும் உலக அரசாங்கங்களை மட்டுமே நிறுவினர். அவற்றில் கூட சில சக்திகள் அவர்களது கண்களுக்கு முன்னாலேயே உடைந்து துண்டு துண்டாகி விட்டன. ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் உலகிலுள்ள இராணுவப் படைகள், உலக அரசுகள், சட்டங்கள், பல்வேறு சமுதாயங்கள், பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களை மட்டுமல்லாமல் உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து விட்டார். மேலும் அவர் பலியிடப்படும் இடங்கள், கடவுள்கள், மதங்கள், கொள்கைகள், சிந்தனைகள், ஆன்மாக்கள் ஆகியவற்றை புதுப்பித்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்களின் அடிக்கல்லாக அவர்களிடம் ஒரேயொரு நூல் மட்டும்தான் இருந்தது. அதன் ஒவ்வொரு எழுத்தும் சட்டமாக ஆகிவிட்டது. அந்த நபர் பல மொழி பேசுகின்ற ஒவ்வொரு நபருக்கும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும் ஓர் ஆன்மீக தனித்தன்மையை வழங்கினார்கள்.



பிறகு அவரே எழுதுகின்றார்: முஹம்மது (ஸல்) அவர்கள் தத்துவவாதியாகவும், சொற்பொழிவாளராகவும், இறை தூதராகவும் சட்டம் இயற்றுபவராகவும், போர் வீரராகவும், சிந்தனைகளை வெற்றி கொள்பவராகவும், அறிவுப்பூர்வமான போதனைகளில் மறுமலர்ச்சியைக் கொண்டு வருபவராகவும், 20க்கும் மேற்பட்ட உலக அரசுகளையும் ஓர் ஆன்மீக அரசையும் நிறுவியவராகவும் அவர்கள் இருந்தார்கள். மனிதத் தன்மையின் மகத்துவத்தை பிரித்தறிவதற்காக எந்த அளவுகோலை வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளுங்கள். எப்போதாவது முஹம்மது (ஸல்) அவர்களை விட மகத்தான ஒரு மனிதர் பிறந்துள்ளாரா?

(A.De Lamartine, History of Turkey (English Translation) D. Appleton & Co., NY. p.154-155. 1855-57)

---

**ஜான் டேவன் போர்ட் (John Davenport)** அவர்கள் எழுதுகின்றார்: எந்த நபர் அரபு நாட்டைச் சேர்ந்த மக்கள் செய்து வந்த இந்த அற்பமான இழிவான சிலை வணக்கத்திற்குப் பதிலாக உண்மையான இறைவனை வணங்குவதை நிலைநாட்டி எப்போதும் இருந்து வரும் பெரும் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் பொய் நபியாக இருந்தார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா? நாம் இந்த உணர்வுமிக்க, செயல் திறன் கொண்ட சீர்திருத்தவாதியை ஏமாற்றுக்காரர் என்று கூற முடியுமா? அப்படிப்பட்ட நபரது எல்லா செயல்களும் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்று நம்மால் கூற முடியுமா? இல்லை. ஒருபோதும் அவ்வாறு கூற முடியாது. சந்தேமின்றி முஹம்மது (ஸல்) அவர்கள் உள்ளத்திலுள்ள நல்லெண்ணம், நேர்மை ஆகியவை இல்லாமல்வேறு எந்த காரணத்தாலும் ஆரம்பத்தில் அவர்களுக்கு வஹி இறங்கிய காலத்திலிருந்து அவர்களின் இறுதி மூச்சு உள்ள வரை அவர்கள் இதில் நிலைத்திருக்க முடியாது. எல்லா நேரமும் அவர்களுக்கு அருகிலிருந்த மக்களுக்கும் அவர்களோடு நெருங்கிய தொடர்பு உள்ளவர்களும் கூட அவர்களிடம் வெளிவேசம் இருக்கும் என்ற சந்தேகம் ஒருபோதும் எழவில்லை.

(John Devenport An Apology for Mohammed and the Koran. J. Davy & Sons; London p.139. 1869)

பிறகு எழுதுகின்றார்: இந்த விசயங்களை உறுதியுடனும் முழுமையான உண்மையுடனும் கூற முடியும். அதாவது மேற்கத்திய நாடுகளிலுள்ள இளவரசர்கள் முஸ்லிம் முஹாஜிரீன்களும் துருக்கியர்களும் இருந்த இடத்தில் ஆசியாவின் ஆட்சியாளர்களாக இருந்திருந்தால் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களிடம் காட்டிய இத்தகைய மத நல்லிணக்கத்தை அவர்கள் முஸ்லிம்களிடம் காட்டியிருக்க மாட்டார்கள். ஏனென்றால் கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபாடு கொண்ட தமது மதத்தை சேர்ந்தவர்களையே மிக்க கொடூரமான முறையில் சித்ரவதை செய்துள்ளனர்.(அதே நூல் பக்கம்.82)

பிறகு ஜான் டேவன்போர்ட் அவர்களே எழுதுகின்றார்: நீதியை கடைபிடிப்பவர்கள் வெற்றி பெற்றவர்கள் ஆகியோரில் ஒருவரது வாழ்க்கை வரலாறு கூட முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றை விட மிகவும் விளக்கமாகவும் உண்மையாகவும் இருக்கவில்லை. (அதே நூல் பக்கம். 82)

பிறகு **மைக்கேல் ஹெச். ஹார்ட்** என்பவர் **Ranking of the Most influential persons in History** என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்:

“உலகில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்திய மக்களில் முஹம்மது (ஸல்) அவர்களது பெயரை முதலாவதாக தேர்ந்தெடுத்திருப்பது இதை படிக்கின்ற சிலரை வியப்பில் ஆழ்த்தி விடலாம். சிலர் இதுபற்றி கேள்வியும் கேட்பார்கள். ஆனால் வரலாற்றில் இந்த நபர் மட்டும் தான் மார்க்க அளவிலும், உலக அளவிலும் ஆகிய இந்த இரண்டு நிலையிலும் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றவராவார்.”

(Michael H. Hart, The 100 : A Ranking of the Most influential persons in History. Carol publishing group. Page : 3)

“மனித வரலாற்றில் முஹம்மது (ஸல்) அவர்கள் எப்படி தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றி எவர் தான் கணித்துக் கூற முடியும்? மற்ற மதத்தைச் சார்ந்திருப்பவர்களைப் போன்றே இஸ்லாமும் தன்னைப் பின்பற்றும் நபர்களது வாழ்க்கையில் ஓர் ஆழமான தாக்கத்தை



ஏற்படுத்தி இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் உலகில் இருக்கின்ற மகத்தான மதங்களின் தோற்றுனர்களுக்கு இந்த நூலில் முக்கியமான இடம் வழங்கப்பட்டிருக்கின்றது.”

பிறகு மைக்கோல் ஹெச். ஹார்ட் என்பவர் எழுதுகின்றார்கள்: ஒரு கணிப்பின்படி உலகில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை முஸ்லிம்களின் எண்ணிக்கையை விட இரு மடங்கு அதிகமாக இருக்கின்றது. இந்த வகையில் முஹம்மது (ஸல்) அவர்களை ஈஸாவை விட முதலில் வைத்திருப்பது ஒருவேளை உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் எனது இந்த தீர்ப்பிற்கு பின்னால் இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதல் காரணம், கிறிஸ்தவத்தின் வளர்ச்சியில் ஈஸா (அலை) அவர்களுக்கு இருக்கும் பங்கை விட முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சியில் எவ்வளவோ முக்கியமான பங்கு இருக்கின்றது. ஈஸா (அலை) அவர்கள் தான் கிறிஸ்தவத்தின் நல்லொழுக்க, ஆன்மீக வாழ்விற்கான வழிகாட்டுதலுக்கு காரணமாக இருந்தார்கள். (யூதர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்த அந்த கிறிஸ்தவம் தோன்றக் காரணமாக இருந்தார்கள்.) ஆனால் கிறிஸ்தவத்திற்கு வளர்ச்சியை ஏற்படுத்துவதில் புனித பவுல் தான் அதற்கான அடித்தளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கை வகிக்கின்றார். தற்போதுள்ள கிறிஸ்தவத்தை வடிவமைத்துத் தந்தவரும் புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை எழுதியவரும் புனித பவுல் அவர்களேயாவார்.

பிறகு அவர் எழுதுகின்றார்: இஸ்லாம் மார்க்கம் மற்றும் அதிலுள்ள அனைத்து நல்லொழுக்க, மார்க்க நெறிகளுக்கான பொறுப்பாளராக முஹம்மது (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த புதிய மதத்தை தாமே வடிவமைத்து தந்து இஸ்லாமிய போதனைகளை நடைமுறைப்படுத்துவதில் அடிப்படையான பங்கை வகிக்கின்றார்கள். இதை தவிர முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களது அகப்பார்வையை பிரதிபலிக்கக்கூடிய ஒரு நூலாக இருக்கின்றது. இதை எழுதியவரும் முஹம்மதே ஆவார்கள்.

மேலும் அவர் எழுதுகின்றார்: முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த நூல் இறைவன் புறமிருந்து தனக்கு வஹியாக இறக்கப்பட்டது என்று

கூறுகின்றார். குர்ஆனின் பெரும் பகுதி முஹம்மது (ஸல்) அவர்களது காலத்திலேயே எழுதப்பட்டு அவர்களது வாழ்நாளிலேயே அது பாதுகாக்கப்பட்டிருந்தது. அவர்கள் மரணமடைந்த பிறகு கொஞ்ச காலத்திலேயே இது ஒட்டுமொத்தமாக ஒரு தொகுப்பு நூலின் வடிவிவல் பாதுகாக்கப்பட்டு விட்டது. எனவே குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களது போதனைகள், அன்னாரது சிந்தனைகள் ஆகியவற்றை உண்மையான முறையில் பரப்பக் கூடியதாக இருக்கின்றது. சிந்தனையாளர்களின் கருத்துப்படி இதிலுள்ளவை அவர்களது சொற்களே ஆகும். ஆனால் ஈஸா (அலை) அவர்களது போதனைகள் அடங்கிய இத்தகைய ஒரு தொகுப்பு நூலும் இல்லை. கிறிஸ்தவர்களின் பார்வையில் பைபிளுக்கு எந்த அளவு முக்கியத்துவம் இருக்கின்றதோ அதே அளவு முஸ்லிம்களின் பார்வையில் குர்ஆனுக்கு முக்கியத்துவம் இருக்கின்றது. குர்ஆன் மூலமாக முஹம்மது (ஸல்) அவர்கள் மக்கள் மீது நிறைவான வழிமுறைகள் மூலம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். ஒட்டுமொத்தமாக ஈஸா (அலை) அவர்களும் புனித பவுல் அவர்களும் கிறிஸ்தவம் மூலமாக மக்களிடம் ஏற்படுத்திய தாக்கத்தை விட இஸ்லாம் மூலமாக முஹம்மது (ஸல்) அவர்கள் மக்களிடம் ஏற்படுத்திய தாக்கமே அதிகமாக இருக்கின்றது என்பதே மிகவும் மிகைத்து நிற்கின்ற எண்ணமாக இருக்கின்றது. சுருக்கமாக, மார்க்க அம்சத்தை கருத்தில் கொண்டு பார்த்தால் மனித வரலாற்றில் எந்த அளவு ஈஸா (அலை) அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்தினார்களோ அதே அளவு தாக்கத்தை முஹம்மது (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள். (அதே நூல் பக்கம் 89)

---

கேரன் ஆம்ஸ்ட்ராங் என்பவர் தனது நூலான Muhammad A Biography of the Prophet –ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்: முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகத்தை நிலைநிறுத்துவதற்கு செயலளவில் பூஜ்ஜியத்திலிருந்து தனது பணியை ஆரம்பிக்க வேண்டியது வந்தது. எப்போது அவர்கள் தனது பிரச்சாரத்தை ஆரம்பம் செய்தார்களோ அப்போது அவர்கள் தமது பிரச்சாரத்தை செய்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு எவராவது



வழங்குவார் என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்தது. அரபு சமுதாயம் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ள முற்றிலும் தயாராக இருக்கவில்லை. அவர்கள் அப்போது உயர் தரத்தை உடைய கொள்கைகளை அதாவது ஓரிறை கொள்கையை ஏற்றுக் கொள்ளத் தகுதி உடையவர்களாக இருக்கவில்லை. உண்மையில் இப்படிப்பட்ட கடுமையான அபாயகரமான சமுதாயத்தில் இந்தக் கொள்கையை அறிமுகப்படுத்துவது மிகவும் அபாயகரமானதாக இருந்திருக்கக் கூடும். இந்த சமுதாயத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொண்டார்கள் என்றால் உறுதியாக அவர்கள் மிகுந்த நற்பாக்கியம் உடையவராக இருக்கின்றார்கள். உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்களது உயிர் பெரும்பாலும் அபாயங்களில் வீழ்ந்து கிடந்தது. அது பாதுகாப்பாக இருந்தது என்பது ஏறக்குறைய ஓர் அற்புதமேயாகும். ஆனால், இதில் முஹம்மதே வெற்றி பெற்றார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்). தனது வாழ்க்கையின் முடிவுரையிலும் முஹம்மது (ஸல்) அவர்கள் பல்வேறு கோத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்ட தீவிரவாதப் போக்கு என்னும் அந்தப் பழைய மரபுகளை முற்றிலும் தகர்த்தெறிந்து விட்டார்கள். அரபு சமுதாயத்திற்கு மார்க்கம் இல்லாமல் இருப்பது என்பது ஒரு பிரச்சனையே அல்ல. அப்போது அரபு சமுதாயம் தனது வரலாற்றின் ஒரு புதிய காலகட்டத்திற்குள் நுழையத் தயாராக இருந்தது.

(Karen Amstrong, Muhammad - A Biography of the Prophet.
Horper Collins publishers, NY. P. 53-54. 1993)

---

பிறகு கேரன் ஆம்ஸ்ட்ராங் அவர்களே எழுதுகின்றார்கள்: இறுதியில் மேற்கிலுள்ள இவர்கள் தான் (அதாவது கிறிஸ்தவர்கள் தான்) மார்க்க விவாதங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தனர். இஸ்லாம் அவ்வாறு செய்யவில்லை. சிலுவைப் போர்களின் போது ஐரோப்பா மற்றவர்களது கருத்துக்களை அமுக்குவதில் உள்ள ஆர்வத்தில் பைத்தியமாகவே ஆகிவிட்டது என்றே தோன்றுகிறது. எந்த அளவு ஆவேசத்துடன் அது தனது எதிரிகளுக்கு தண்டனையை வழங்கி இருக்கின்றதென்றால் அந்த அளவு தண்டனையை மார்க்க வரலாற்றில் அதற்கான உதாரணத்தைக் கூட

எங்கும் பார்க்க முடியவில்லை. கருத்து வேறுபாடுகளைக் கொண்டவர்கள் மீது அநீதியிழைப்பது, ப்ரோடஸ்டன்ட் மீது கத்தோலிக்கர்கள் இழைத்த கொடுமைகள், இவ்வாறே கத்தோலிக்கர்கள் மீது ப்ரோடஸ்டன்ட்டினர் இழைத்த கொடுமைகள் ஆகியவை அடிப்படையை புரிந்து கொள்ள முடியாத கோணல் தன்மையுள்ள மதக் கொள்கைகளால் ஏற்பட்டதாகும். கொள்கையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை யூத மதமும் இஸ்லாமும் கட்டாயப்படுத்தாமல் அவரவரது தனிப்பட்ட உரிமையாக கருதின. கிறிஸ்தவத்துடனும் யூத மதத்துடனும் எந்த தொடர்பும் இல்லை. (கிறிஸ்தவமாகிய) அது இறைவனைப் பற்றிய மனிதனின் கற்பனையை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத எல்லை வரை கொண்டு செல்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது அவனை இணை வைப்பவனாக ஆக்கி விடுகின்றது.

(A Biography of the Prophet. Harper Collins publishers, NY. P.27)

---

**அன்னி பெஸன்டு அம்மையார் (Anni Besant)** தமது நூலான **Life and Teachings of Muhammad** –ல் இவ்வாறு எழுதுகின்றார்:

“அரபு நாட்டிலுள்ள மகத்தான நபியின் வாழ்க்கையையும், அவர் செய்த பணிகளையும் பற்றி படித்த நபருக்கு அந்த நபி என்ன போதனையை வழங்கினார்? மேலும் அவர் எப்படி தமது வாழ்க்கையை கழித்தார் என்பதை அறிந்தவருக்கு இறைவனது நபிமார்களில் இந்த மகத்தான நபிக்கு கண்ணியமளிக்காமல் இருப்பது அவரால் சாத்தியமற்ற ஒன்றாகும். நான் கூறுகின்ற இந்த விசயங்கள் தொடர்பாக இதற்கு முன்னர் பல மக்களுக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால் இந்த விசயங்களை நான் எப்போது படித்தாலும் எனக்கு இந்த அரபு ஆசிரியருக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்ற ஒரு புதிய உணர்வு ஏற்படுகின்றது. அவர்களது புகழின் ஒரு புதிய நிறம் தெரிகின்றது.”

(Anni Besant, The Life and Teachings of Mohammad,
Theosopical Publishing House, India P4 1932)



**ருத் கிரேன்ஸ்டன் (Ruth Cranston)** என்பவர் தமது நூலான **World Faith** –ல் இவ்வாறு எழுதுகின்றார்:

“அரபு நாட்டைச் சேர்ந்த முஹம்மது (ஸல்) அவர்கள் போர் செய்வதை அல்லது இரத்தம் சிந்துவதை ஒருபோதும் தொடங்கவில்லை. அவர்கள் போரிட்ட ஒவ்வொரு போரும் தற்காப்புப் போராக இருந்தது. போர் செய்தார் என்றால் தன்னைக் காத்துக் கொள்வதற்காகவும், அந்தக் காலத்தில் வழக்கத்திலிருந்த ஆயுதங்களைக் கொண்டும் அக்காலத்து வழிமுறைகளுக்கு ஏற்பவும் அவர்கள் போரிட்டார்கள். அண்மையில் 14 கோடி கிறிஸ்தவர்களில் 1,20,000 –ஐயும் விட அதிகமான மனிதர்களை ஓர் அணுகுண்டு மூலம் அழித்து விட்டார்கள். இதனை உறுதியுடன் கூற முடியும். ஆனால் எந்தவொரு சமுதாயமும் தனது இத்தகைய ஒரு தலைவரை சந்தேகப் பார்வையுடன் பார்க்காது. அவர்கள் செய்த அனைத்துப் போர்களின் போதும் மிகவும் மோசமான நிலைமைகளில் கூட 500 அல்லது 600 பேர்களை மட்டுமே அவர் தனது வாளுக்கு இரையாக்கி இருக்கின்றார். அரபிலுள்ள நபியின் கைகளால் ஏழாவது நூற்றாண்டின் இருள் நிறைந்த காலகட்டத்தில் மக்களில் ஒருவர் மற்றவரது இரத்தத்தை குடிக்க தாகமாக இருந்த சமயத்தில் நடந்த அந்த அழிவுகளை இன்றைய ஒளிமிக்க 20வது நூற்றாண்டின் அழிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது முட்டாள்தனத்தை தவிர வேறொன்றும் இல்லை. Inquisition (கிறிஸ்தவக் கொள்கைக்கு மாற்றமாக கருத்து கூறுபவருக்கு கொடுக்கப்படும் தண்டனை) மற்றும் சிலுவை போர்களின் காலங்களில் நடைபெற்ற கொலைகள் பற்றிய விபரங்களை கிறிஸ்தவப் போர் வீரர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்கள் அந்த மார்க்கமற்றவர்களது சடலங்களுக்கு மத்தியில் குதிகால்களில் இரத்தம் படிந்த நிலையில் இங்குமங்கும் சென்று கொண்டிருந்தனர்.”

(Ruth Cranston, World Faith. Harper and Row publishers,
New York, Page 155, 1949)

**காட் ஃப்ரே ஹிக்கின்ஸ் (Godfrey Higgings)** அவர்கள் எழுதுகின்றார்கள்:

“முஹம்மது (ஸல்) அவர்களது மதம் காழ்ப்புணர்ச்சி உடையதாகவும் மத சகிப்புத்தன்மையற்றதாகவும் இருந்ததால் தான் அதை கிறிஸ்தவ பாதிரிகள் ஏசுகின்றனர் என்பதைத் தவிர வேறு எந்த விசயத்தையும் பொதுவாக நாம் கேள்விப்படவில்லை. இது மிகப்பெரும் நயவஞ்சகமாகும். கிறிஸ்தவர்களாக மாறிய முஸ்லிம்களை அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை என்பதற்காக ஸ்பெயினிலிருந்து அவர்களை துரத்தியவர் யார்? மெக்ஸிகோவிலும், பெருவிலும் (Peru) யார் இலட்சக்கணக்கான மக்களை அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை என்பதற்காக தங்களது வாளுக்கு இரையாக்கினார்கள்? மேலும் அவர்களை அடிமைகளாக ஆக்கியவர்கள் யார்? அவர்கள் இந்தக் கிறித்தவர்கள் தான். ஆனால், எத்தகைய சிறந்த வேறுபட்ட முன்மாதிரியை முஸ்லிம்கள் கிரேக்க நாட்டில் காட்டினார்கள்! நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களை அவர்களது மதம், அவர்களது பாதிரிமார்கள், துறவிகள், அவர்களது ஆலயங்கள் ஆகியவற்றை தங்களது ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் இடங்களில் அமைதியாக அவர்களை அந்த முஸ்லிம்கள் வாழவிட்டார்கள்!!”

(Godfreg Higgins, Apology for Muhammad, Lahore, PP. 123-124. 1829)

---

பிறகு இதே காட் ஃபிரே ஹிக்கின்ஸ் தொடர்ந்து எழுதுகிறார்: இஸ்லாத்தின் கலீஃபாக்களின் முழு வரலாற்றிலும் Inquisition (கிறித்தவக் கொள்கைக்கு மாற்றமான கருத்தைக் கூறுபவருக்கு கொடுக்கும் தண்டனை) போன்ற அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய விசயம் போன்று அதில் பாதியைவிட குறைவான அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களைக் கூட நம்மால் பார்க்க முடியவில்லை. மார்க்கக் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரையாவது எரித்ததாகவோ அல்லது இஸ்லாத்தை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாகவோ ஒரு சம்பவம் கூட நடைபெறவில்லை. (அதே நூல் பக்கம். 52)



**எட்வர்டு கிப்பன் (Edward Gibbon)** தமது நூலான History of the Saracen Empire –ல் எழுதுகின்றார்கள்: “பெருமானார் (ஸல்) அவர்கள் மார்க்கத்தை தப்லீக் செய்தது நமக்கு வியப்பிற்குள்ளாக்கவில்லை. மாறாக, அது என்றென்றும் நிலைத்திருப்பது நமது வியப்பிற்குக் காரணமாக இருக்கின்றது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவிலும் மதீனாவிலும் கலப்பற்ற மற்றும் முழுமையான தமது அடிச்சுவடுகளை பதித்து விட்டார்கள். அது 12 நூற்றாண்டுகளின் புரட்சிக்குப் பிறகும் கூட அதனை குர்ஆனை – இந்த புதிய கொள்கையைப் பின்பற்றக்கூடிய இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள், துருக்கியர்கள் இன்று வரை பாதுகாத்து வைத்திருக்கின்றார்கள். முஹம்மது (ஸல்) அவர்களது சீடர்கள் தமது மதத்தையும், கொள்கைகளையும் ஒரு மனிதனின் எண்ணங்களோடு ஒன்றச் செய்வதற்கான சோதனையிலும் (அதற்காக மனங்களில் ஏற்படும்) சலனங்களை எதிர்த்து நிற்பதிலும் உறுதியாக இருந்தனர். இஸலாத்தின் சாதாணமான மாற்ற முடியாத உறுதிமொழி என்னவென்றால் நான் ஓரிறைவன் மீதும் இறைவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கை கொள்கின்றேன் என்பதுமாகும். அதாவது இறைவனைப் பற்றி மனதில் இருக்கும் இந்த சிந்தனை முஸ்லிம்களிடம் சீர்குலைந்து சிலையாக மாறியதைக் காண முடியவில்லை. இறை தூதரின் பெருமைகள் மனிதனுக்குரிய தகுதியின் எல்லைகளைக் கடந்து செல்லவில்லை. அவர்களது உயிருள்ள அறிவுரைகள் அவர்களை பின்பற்றியவர்களின் நன்றி உணர்வையும், அருளின் உணர்வையும் வெளிப்படுத்தும் போதும் கூட அதனை அறிவு மற்றும் மார்க்கத்தின் எல்லைக்குள் தான் வைத்திருந்தது.

(Edward Gibbon, Simon Oak Rey, History of the Saracen Empire, Alex Murray & Son; London. P.54. 1870)

மேலும் தகவல்களை எங்களது website ஆன

**www.alislam.org**

மூலமாக அறிந்து கொள்ளலாம்.